குமரன்றுணை.

# வியாசத் திரட்டு.

(முதற் பாகம்)

---

இது

மதுரை வித்தியாபாநுப் பத்திராதிபர்

**மு. ரா. கந்தசாமிக் கவிராயரால்**

எழுதப்பெற்று

---

மதுரை விவேகபாநு அச்சியந்திரசாலையில்

பதிப்பிடப் பெற்றது.

---

1915.

இதன் விலை] [அணா 8.

Copy Right Registered.

உ

# தி லடங்கியவை.


முகவுரை.

உரிமையுரை.

1. கடவுளும், சமயமும்.
2. சிவ வழிபாடு.
3. அன்பு.
4. திருநீற்றின் பெருமை.
5. உருத்திராக்கத்தின் பெருமை.
6. சிவத் தியானம்.
7. கல்வியறிவொழுக்கச் சிறப்பு.
8. முத்திநெறி.
9. ஆலயந்தொழுவது.
10. குருவழிபாடு.
11. ஞானம்.
12. துறவு.

குமரன்றுணை.

# முகவுரை.

சிலகாலமாக நமது தமிழ்நாட்டிற் பற்பல நகரங்களிற் சங்கங்களும், பிரசங்கங்களும் நடைபெறுகின்றன. தற்போது செய்யுட்களைப் பாராட்டுவாரினும் வசனரூபமான வியாசங்களையும், உபந்யாசங்களையும் விரும்பிப் பாராட்டுவார் பலராவர். இக்காலத்தை வியாசகாலம் அல்லது உபந்யாசகாலம் என்று கூறினும் இழுக்காது. மேலைச்சிவபுரிச் சன்மார்க்க சபை முதலிய சில சபைகளில் யான் உபந்யசித்தனவும், எழுதிவாசித்தனவுமான விஷயங்கள் சிலவுண்டு. அவற்றைத் தொகுத்து அச்சிட்டுத் தரின் உபந்யசிக்கப் பழகுபவர்க்கு ஒருவகை உதவியாயிருக்குமென என்நண்பர் சிலர் விரும்பினர். அங்ஙனமே சைவசமய சம்பந்தமான 12 வியாசங்களைத் தொகுத்து "வியாசத்திரட்டு" எனப்பெயரிட்டு முதற்பாகமாக அச்சியற்றினேன். இவற்றுள் எட்டாவது வியாசமாகிய "முக்தி நெறி" என்பது எனது ஜேஷ்ட சகோதரர் ஸ்ரீமத் மு. ரா. அருணாசலக்கவிராயரவர்கள் எழுதியது. அதையும் உரிமைபற்றிச் சேர்த்துக்கொண்டேன்.

இவ்வியாசத் திரட்டை அச்சிட்டு வருங்கால் தாம் நுணுகி ஆராய்ந்தறிந்த அரிய பெரிய விஷயங்கள் சிலவற்றை யிடையிடையே சேர்த்துக் கொள்ளுமாறு செய்த மகிபாலன்பட்டி வித்துவானும், அருங்கலை விநோதரும், கேட்டார்ப் பிணிக்குந் தகையவாய்க் கேளாரும் வேட்பமொழியும் சொல்லாற்றல் மிக்காரும், எனது ஆப்த நண்பர் சிகாமணியும் ஆகிய ஸ்ரீ மு. கதிரேசச்செட்டியாரவர்களது நன்றியை என்றும் பாராட்டுங் கடப்பாடுடையேன். இன்னுஞ்சில வியாசங்கள் இரண்டாம் பாகமாக அச்சிடப் பெறுகின்றன.

குற்றங் களைந்து குணங்கொண்டு பாராட்டல்
கற்றறிந்த மேலோர் கடன்.

மதுரை, 8-5-15.

இங்ஙனம்,
மு. ரா. கந்தசாமிக் கவிராயன்.

உ

குமரன்றுணை.

# உரிமையுரை.

---

பதிபசுபா சத்தியல்பைக் கரமலராற் காட்டிப்
பழவடியார் தமக்கருளத் துறைசைநகர் மேவித்

துதிபெறும்அம் பலவாண குருவேயம் பலங்க
டொருமடியேன் சொற்றவியா சத்திரட்டிந் நூலை

விதிவழியே நினக்குரிமை யாக்குகின்றேன் சிலந்தி
மெல்லியநூ லகத்துமுனம் புல்லுமுன தருளை

மதிமுதியோர் பாராட்டிப் போற்றவினீ யிதையு
மகிழ்ந்தேற்பை யுலகுமுனை வாழ்த்துமென மதித்தே.

இங்ஙனம்.

மதுரை
8-5-15

மு. ரா. கந்தசாமி.

உ

குமரன்றுணை.

# வியாசத்திரட்டு.

ஆனைமுக னறுமுக னம்பிகைபோ னம்பலவன்
ஞானகுரு வாணியையு நாடு.

வாழ்க வந்தணர் வானவ ரானினம்
வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக
ஆழ்க தீயதெ லாமர னாமமே
சூழ்க வையக முந்துயர் தீர்கவே.

## கடவுளும் சமயமும்.

உலகம் பலவகைத் தோற்றத்தது. இவ்வுலகில் நாம் பார்க்கும் எல்லாப் பொருள்களும் தோன்றி இருந்து அழியும் இயற்கையன. குடம் முதலியவற்றைக் கண்டபோது அவற்றைச் செய்தவ னொருவனுண்டென்பது போல இப்பிரபஞ்சத் தோற்றத்தையும் அதன் நிலையையும் அழிவையும் உற்றுநோக்கு மிடத்து கர்த்தாவாகிய செய்பவன் ஒருவன் இருக்கவேண்டு மென்பது எளிது புலனாம். இதனை நாஸ்திகர் தவிர எல்லாச் சமயத்தாரும் அங்கீகரிப்பர். ஆகவே சிருஷ்டியாதி புரியுங் கருத்தாவுண்டென்பது துணியப்படும். அக்கருத்தாவைத் தான் * கடவுள் என்ற பெயராலழைக்கின்றோம். கடத்தற்றொழிலின் முதனிலையாகிய கட என்னும் பகுதியும், அவன் அவள் அது என்னும் ஒருமை முப்பாலில் ஒன்றனை யுணர்த்தும் உள் என்னும் வினைமுதற்பொருள் விகுதியும் சேர்ந்து கடவுள் என நிற்றலால் கடந்த பொருள் என்பதே கடவுள் என்ற சொற்குப் பொருளாகின்றது. இப்பொருளே ஆன்றோர் கொண்ட பொருளாகும். இங்ஙனமின்றி கடவுள் என்பது கடத்தல் என்னும் பொருள் தந்து ஆகுபெயராய் கடத்தலையுடைய பொருள் என்பதை யுணர்த்து மெனக் கூறுவாருமுண்டு.

* கடவுள், பரம்பொருள், பதி, இறைவன் என்பன ஒரு பொருளன.

கடந்த பொருளெனவே எவற்றைக் கடந்த பொருள்? எவ்வாறு கடந்தது? ஏன் கடக்கவேண்டும்? என்பனவாதிய சங்கை நிகழும். அன்றியும் கடக்கப்பட்ட பொருள்களு மிருக்க வேண்டுமாதலின் அப்பொருள்கள் யாவை? எனவும் ஆராய்ச்சி நிகழும். இங்ஙனம் ஆராயப்புகின் உலகில் உயிருள்ளனவும் உயிரில்லனவுமாகி மாயா சம்பந்தப்பட்ட சேதனு சேதனப் பொருள்கள் யாவும் கடக்கப் படுபொருள்க ளென்பது பெறப்படும்.

இனி எவ்வாறு கடந்ததெனின் நிலங்கடந்தான் நதி கடந்தான் என்புழி அவற்றோடு தோய்ந்து பற்றின்றி நீங்கினு னென்பது வெளியாதலின் அவ்வாறே சேதனுசேதனப் பொருள்கள் எல்லாவற்றுடனும் தோய்ந்தும், அங்ஙனம் தோய்தலால் உறத்தக்கதாகிய பற்றுச் சிறிதுமின்றி நீங்கி அப்பாற்பட்ட தெனக் கொள்ள வேண்டும். இதனுற்றுன் "ஒன்று நீ யல்லை" எனவும், "எல்லாமா யல்லதுமாய்" எனவும், "அவனன்றி யோரணுவு மசையாது" எனவும், "தோய்ந்தும் பொருளனைத்துந் தோயாது நின்ற சுடரே" எனவும் கூறுவர் பெரியார்.

இனி எனிவ்வாறிருக்க வேண்டும்? பொருள்களோடு தோய்ந்தாவது தோயாமலாவது இருத்தலாகாதோ எனின், ஆகாது. என்னை? பொருள்களோடு தோய்ந்திருப்பின் காணப்படுவன வெல்லாம் அழிபடுமாதலின் அப்பொருள்க ளழியும் போது தானும் அழிய வேண்டி வரும். தோயாது இருப்பின் கடவுட்கு அந்நியமாகிய பொருள்களுமுளவெனப்பட்டு எங்கும் நிறைதலின்மை பெறப்படும். ஆதலின் சர்வவியாபகமாய் எங்கும் நிறைந்தும் யாதொன்றினும் பற்றுமனும் எல்லாப் பொருள்களிடத்தும் எள்ளினுள் எண்ணெய் போல் அந்தர்யாமியாய் மறைந்து நிறைந்து இருத்தலே கடவுளின் இலக்கணமா மென்க.

இங்ஙனம் எல்லாப் பொருள்களிடத்தும் அந்தர்யாமியாகி மறைந்து நிற்பதுதான் கடவுளிலக்கணமாயின் அக்கடவுள் யாண்டுங் காணப்படாத பொருளோ எனின் காணப்படின் அழியப்படும். யாண்டும் காணப்படாதேல் முயற்கோடு ஆகாயப் பூப்போல் இல்பொருளாகும். ஆதலின் ஒருவாற்றுற் காணப்புடாமையும், ஒரு

வாற்றுற் காணப்படுதலும் உண்டெனக் கொள்க. அறிவு வளர்ச்சி யால் உலகத் தோற்றமாதியவற்றை யுய்த்துணரும் ஆற்றலில்லாத நாஸ்திகரால் காணப்படாத பொருளாகவும், உலகத்தோற்றமாதிய வற்றை யுய்த்துணரும் அறிவாற்றல் கொண்டுள்ள ஏனைச் சமயத் தார்க்கு அவரவர் பக்குவத்துக் கேற்பச் சிலர்க்குப் பொதுமையாக வும், சிலர்க்குச் சிறப்பாகவும் காணப்படு பொருளாகவும் கூறப்படு வர். ஆயின் பொதுமைக் காட்சியாது? சிறப்புக்காட்சி யாதென ஆராய்வாம்.

ஒரு குகைக்குள்ளுற்ற சிங்கம் கர்ச்சித்தபோது அந்தொனி யைக் கேட்டவருள் சிலர் இம்மலைக் குகையுள் யாதோ ஒரு பிரா ணியிருந்து சத்தமிடுகின்றது என்று மட்டும் அறிதல் போல பிர பஞ்சத் தோற்ற முதலியவற்றை நோக்கி உலகம் இங்ஙனம் நிகழ்த ற்கு ஏதுவாகிய கர்த்தா ஒருவன் உண்டு என மாத்திரம் அறிதல் பொதுமைக் காட்சியாம். மற்றுஞ் சிலர் இங்கே கர்ச்சித்தது சிங் கம். அது வெண்ணிறமும் பரந்த முகமும் நான்கு பாதமும் சிறு கிய இடையும் கொண்டு மிருக வர்க்கத்துட் பட்டது என அறிதல் போல உலக காரணராகிய கர்த்தா இன்ன தன்மையர், இன்ன குண ங்களுள்ளவர் என்பனவாகிய இலக்கணங்கள் முற்று மறிதல் சிறப் புக் காட்சியாம்.

ஆகவே இறைவனது சிறப்புக்காட்சி பெறுதல் இன்றி யமை யாததாயிற்று. இப்படியன், இந்நிறத்தன், இவ்வண்ணத்தன், இவனிறைவன் என்னும் சிறப்புக் காட்சியை அவனருளே கண்ணு கக் காணிற் காணலாமன்றி வேறு வகையாற் காணுதலமையாது. மாயா சம்பந்தமான உலக ஞானம் எதுவரையில் முனைத்து நிற்கு மோ அதுவரையில் அவனருளாகிய கண்ணைப் பெறுதல் இல்லை. அருட்கண்ணைப் பெறவேண்டின் பாவச் செயல்களை விடுத்துப் புண் ணியச் செயல்களை மேற்கொண்டு, யான் எனது என்னும் அகப்பற் றையும் புறப்பற்றையும் அறக்களைந்து, சரியை கிரியை, யோகம், ஞானம் என்னும் நால்வகை மார்க்கங்களிற் பிரவேசித்து, "எல்லாமு னுடைமையே எல்லாமுனடிமையே யெல்லா முனுடைய செயலே" என்பதைக் கடைப்பிடித்து முயன்றால் நித்தியத்துவம், வசம்பிலா

ற்றல், வரம்பிலின்பமென்னும் சச்சிதானந்தப் பிழம்பாகிய கடவுள் ஆன்மாக்களின் இருவினை யொப்பு மலபரிபாக சத்திநிபாத பக்குவத்துக் கேற்றவாறு தாமே வெளிப்படுவர். இறைவன் வெளிப்படு முறையை அடியில் வரும் திருப்பாசுரம் இனிது விளக்கும்,

விறகிற் றீயினன் பாலிற் படுநெய்போல்
மறைய நின்றுளன் மாமணிச் சோதியான்
உறவு கோல்நட்டு உணர்வு கயிற்றினால்
முறுக வாங்கிக் கடையமுன் னிற்குமே.

இதன் பொருள்—இறைவன் விறகினிடத்து நெருப்புப் போலவும், பாலினிடத்து நெய்போலவும், மணியினிடத்து ஒளி போலவும் வெளிப்படாமல் மறைந்திருக்கின்றான். விறகிலிருந்து நெருப்பையும், பாலிலிருந்து நெய்யையும், மணியிலிருந்து ஒளியையும் பெறவேண்டியவர்கள் ஒரு கோலை நாட்டி அதிலொரு கயிற்றைப் பூட்டி யிழுத்துக் கடைய வேண்டும். கடைந்தால் நெருப்பும் நெய்யும் ஒளியும் வெளிப்படத் தோன்றும். அதுபோல மறைந்து நிற்கும் இறைவனையடைய விரும்பியவர்கள் பத்தியாகிய கோலை நாட்டி ஞானமாகிய கயிற்றை மாட்டிப் பலமுற இழுத்துக் கடைவார்களானால் இறைவன் வெளிப்பட்டுக் காட்சி தந்தருளுவன் என்பதாம்.

இதனுள் விறகில் நெருப்புப்போலவும், பாலில் நெய்போலவும், மணியில் ஒளி போலவும் இறைவனுளன் என மூன்று வகைப்படுத்தினமைக் கேற்பவே "முறுக வாங்கிக் கடைய" எனக் கூறியதையும், முறுக வாங்கிக் கடைய, வாங்கிக் கடைய, கடைய என மூன்றுவகையாக்கிக் கொள்ளவேண்டும். விறகில் நெருப்பு எடுப்பவர் பலமாக இழுத்துக் கடைந்தால் தான் நெருப்புக் கிடைக்கும். பாலில் நெய் யெடுப்பவர் இழுத்துக் கடைந்தாலே போதும், நெய் வெளிப்படும். மணியில் ஒளியைக் காணுதற்கு பலங் கொண்டும் இழுத்தும் கடைய வேண்டாம். சாதாரணமாகக் கடைதலே போதும், ஒளி விளங்குவதாகும். இவ்வாறு மேலே மூன்றிடம் சொன்னமைக் கேற்ப கீழே முறையும் மூன்றாகக் கொள்ளக் கூறியருளினர். பத்தியானது எக்காலத்தும் எவ்வாற்றானும் சிறிதுஞ் சலனமுறாது

இறைவனிடத்தே அழுந்தி நிற்க வேண்டுமாதலின் அதனைத் தறி
யாகவும், ஞானமானது மேலும் மேலும் ஆராய்ந்து சென்று சேர்த
லின் அதனைக் கயிறாகவும் கூறியது உய்த்துணரத்தக்கதென்க.

இங்ஙனம் மூன்று முறையாகக் கொண்டு கூறுமாறென்னெனில்
தேவர் இருடிகள் மானிடர் முதலாக எறும் பீறாகவுள்ள சகலர்
அதிபக்குவர், மந்தபக்குவர், அபக்குவர் என மூவகையாவர். அவருள்
மலபரிபாகம் வராத அபக்குவர்கள் தாம் செய்த கன்மத்துக் கீடா
கப் புவனசரீரங்களை யெடுத்துப் போகங்களைப் புசித்துத் தொலைத்த
பின்னர் மலபரிபாகம் வரப்பெற்று ஆசாரியரிடம் தீக்ஷையைப்
பெற்று மோக்ஷத்தை யடைவர். இங்ஙனம் இவர் சிலகாலம் வருந்தி
அடையவேண்டுதலின் இவர்க்கு "விறகிற் றீயினன்" என்க. விறகி
லிருந்து நெருப்பெடுப்பவர் பலங்கொண்டு இழுத்துக் கடைந்தே
எடுக்கவேண்டும். ஆதலின் "முறுகவாங்கிக் கடைய முன்னிற்கும்"
எனக் கொள்க.

மந்தபக்குவராயுள்ள வைநயிகர் முதலாயினோர் மந்ததரம் மந்த
மென்று சொல்லப்பட்ட சத்திபதியப் பெற்றவுடன் இறைவன்
ஆசாரியனை யதிட்டித்து நின்று அவர்க் கநுகுணமான தீக்ஷையைச்
செய்து அவர்கள் எந்தப் பதத்திலே யிருந்து போகம் புசிக்க விரும்
பினார்களோ அந்தப் பதத்திலே அவர்களைச் சேர்த்துப் பின்னர்
மோக்ஷம்பெறச் செய்தருளுவன். இவர்கள் அபக்குவரைப்போலப்
பலநாள் வருத்தமெய்தாது சிலநாளில் இறைவனை யடையக்கூடியு
வர்களாதலின் இவர்க்கு இறைவன் "பாலிற்படு நெய்போல்வன்"
எனவும், "வாங்கிக் கடைய முன்னிற்கு" மெனவும் கொள்க. பாலி
லிருந்து நெய்யெடுப்பவர் விறகிற் றீயெடுப்பவர் போல் பலமுற
இழுத்துக் கடைய வேண்டாது சுலபமாக வாங்கிக் கடைதலே
சாலுமாதலின் பாலிற்படு நெய்போல்வன் வாங்கிக் கடைய முன்னிற்
கும் எனக் கொள்ளவேண்டும்.

அதிபக்குவராவார்க்கு இறைவன் தீக்ஷையால் மந்ததரம் முத
லிய நால்வகைச் சத்தியைப் பதிப்பித்துத் திவ்ய திருமேனியை
யதிட்டித்துக்கொண்டு அவர்கள் பாசவிமோசனம் செய்து ஞானத்

கிரியைகளை விளக்கித் திதிகால முடியுமளவும் சுத்தாத்துவாவிற் போகங்களைப் புசிப்பித்து மகா சங்காரத்தில் மோக்ஷத்தை அடைவிப்பன். ஆதலின் இவர்க்கு "மாமணிச்சோதியான்" எனவும் "கடைய முன்னிற்குமே" எனவும் கூட்டியுரைக்க. மணியின் ஒளியை யுள்ளவாறு காணவிரும்பியவர் அதிசீக்கிரத்தில் மிகச் சுலபமாகக் கடைந்துகோடலே போதுமாதலின் அதிபக்குவர் விரைவாகவும் எளிதாகவும் இறைவனை யடையக்கூடு மாற்றால் மாமணிச்சோதி யான் கடைய முன்னிற்கும் எனக்கூட்டிப் பொருள் கொள்ளவேண் டும். இங்ஙனம் சகலருள் பகுக்கப்பட்ட மூவகையார்க்கு எனக் கொள்ளாது சகலர், பிரளயாகலர், விஞ்ஞானகலர் என்ற மூவகை யான்மாக்கட்குக் கூறிய மூன்று முறையே இவையெனக் கூறுவாரு முண்டு. இன்னும் இத்திருப்பாசுரப் பொருளை விரிப்பிற் பெரு கும்.

இனி இத்தகைய கடவுள் ஒருவரா பலரா? எனின் கூறுதும். பலரெனின் அநவஸ்தாதோஷம் உண்டாம். ஆதலின் ஒருவர்தா னென்பது தெளிவாம். இக்கடவுளுடைய முக்கிய குணங்கள் யாவை யெனில் முற்றறிவு, வரம்பிலின்பம், இயற்கையுணர்வு, தன் வயம், குறைவிலாற்றல், வரம்பிலாற்றல் என ஆறுமாம்.

எல்லாப் பொருள்களையும் புலப்படக் காணும் அறிவுள்வழி யல்லது எல்லாத் தொழிலும் இயற்றல் கூடாமையின் முற்றறிவும், தமதநுபவத்தின் பொருட்டுப் பிறிதொன்றனை வேண்டில் பரிபூர ணத் தன்மை யெடுபட்டுக் கடவுட்டன்மை கெட்டுப் போதலின் வரம்பிலின்பமும், முற்றறிவுடைய வழியும் அஃது அநாதி யன்றி அவாந்தரத்தில் வந்ததேல் காரண பூர்வகமாய் வந்ததெனின் வரம் பின்மைக் குற்றமும் காரணமின்றி வந்ததேல் காரணகாரிய நியம மின்மைக் குற்றமும் அடுக்குமாதலின் இயற்கையுணர்வும், பிறர் வயமுண்டேல் பாசத்தடையு முளதாகி வேண்டிய தெய்தாமையும் வேண்டாத தெய்தலும் ஆகிய குற்றம் பற்றலின் தன் வயமும், ஆற் றல் குன்றுமாயின் எக்காலத்தும் எத்தேசத்தும் இளைப்பின்றித் தொழிலியற்றுதல் ஏலாமையிற் குறைவிலாற்றலும், அவ்வாற்றல் வரம்புபட்ட பரிமாணமுடையதாயின் வரம்புபடாத தொழிலியற்

றல் கூடாமையின் வரம்பிலாற்றலும் ஆகிய ஆறு குணங்களும் பதிக்கு இன்றியமையாமை காண்க.

தன் வயத்தனுதல், தூயவுடம்பினனுதல், இயற்கையுணர்வின னுதல், முற்றுமுணர்தல், இயல்பாகவே பாசங்களி னீங்குதல், பேரருளுடைமை, முடிவிலாற்றலுடைமை, வரம்பிலின்பமுடைமை எனக் குணங்கள் எட்டென்று கூறலு முண்டு. அன்றியும் யாதே னும் ஒரு யோனிவாய்ப்பட்டுப் பிறத்தலும் இறத்தலு மின்மை யும் முக்கிய இலக்கணமாம். பிறந்திறக்கப்படுவன யாவும் ஆன்ம வர்க்கத்தனவே யெனவும், அவையில்லாத பொருளே பரம்பொரு ளெனவும் நிச்சயிக்கப்படும். அத்தகைய கடவுள் உலக சிருஷ்டி யாதி தொழில்கட்குக் கர்த்தாவாதலால் அத்தொழில்களில் தொட க்குற வேண்டுமே எனின் அற்றன்று. சூரிய சந்நிதானத்தில் சூரி யகாந்தக் கல் நீரைக் கக்குதலும், தாமரை மலர்தலும் கண்கூடாகக் காணப்படினும் சூரியன் அவற்றிற் றொடக்குறுமை பெறப்படுத லால் உலக சிருஷ்டியாதி தொழில்கள் கடவுள் கிருத்தியமாயினும் கடவுள் அவற்றிற் றொடக்குறுமை பெறப்படுமாறு உய்த்துணரத் தக்கதொன்றும்.

## சமயம்.

இனி இத்தகைய கடவுளையறிந்து சென்று அடைதற்குரியமார் க்கங்களே சமயமெனப்படும். சமயம் அல்லது மதம் என்றற்கு இது தான்பொருளென்று தெளிந்த அவசரம் அல்லது பருவம் என்பது பொருளாகும். எல்லாச்சமயங்களும் தங்கள் தங்கள் கடவுளைப்பற்றிக் கூறுமிடத்துக் கடவுளிலக்கணங்களை யெல்லாம் நன்குகூறுகின்றன. ஆயின் அவ்வக்கடவுளரிடம் கடவுளுக்குரிய இலக்கணங்கள் யாவும் நிரம்பி யிருக்கின்றனவா வென்பது கவனிக்கவேண்டிய விஷயம். இக்கவனத்திற்கு முன் ஒருவிஷயம் மனத்திற் கொள்ளவேண்டும். சகல சமயங்களும் நன்மை செய்வனவேயாம். ஒரு சமயமாவது தீமை பயப்பதில்லை. சமயபோதனைகளெல்லாம் நன்மையைச்செய் யவேண்டுமென்பதும் தீமையை நீக்கவேண்டு மென்பதுமே. இங்ங னம் நல்லொழுக்கத்தையே போதிக்குமுறையில் கடவுளுண்டெனக் கொள்ளும் சமயங்களை யல்லாமல் நாஸ்திக மதமுங்கூட நன்மை

செய்வதுதான். அதுவும் பொய்யாமை கொல்லாமை கள்ளாமை பிறனில்விழையாமை முதலிய நன்மைகளை மேற்கொண்டுண்மை யாலென்க. "எச்சமயத் தோர்சொல்லும், தீதொழிய நன்மை செயல்" என்ற திருவாக்கு இங்கே கவனிக்கத் தக்கது. இவ்வாறு அறச் செயல்களைச்செய்து வந்தால் புண்ணியமிக்குத் தெய்வபக்தியை யுதிப்பித்தல் செய்து ஆஸ்திக சமயத்துட் புகுவிக்குமென்பதும் பெறப்படும். கடவுளுண்டெனக் கொள்ளும் மதங்கள் பலவாயினும் பலநதிகளும் கடலைச் சேர்வதுபோல் முடிவில் பரம்பொருளையே சேரும். ஆயினும் சிலநதிகள் நேரே கடலைச் சேரும். சிலநதிகள் இடையிடையே சிற்சில குளங்களில் தங்கி அங்கங்கே தடையுற்றுநின்று அப்பாற்சென்று கடலைச்சேரும். சில நதிகள் சிறிது தூரஞ்சென்று நேரே கடலைச் சேர்கின்ற பெரிய நதியிற் சென்று கலந்து தானும் கடலைச் சேரும்.

இவ்வாறே மதங்களின் போக்கும் நிகழும். எவன் எந்தச் சமயத்தை மேற்கொண்டாலும் அந்தச் சமயநூல்களிற் சொல்லியவாறு ஒழுகிவருவானானல் நன்மைபெறுவது நிச்சயம் மதவைராக்கியங்கொண்டு என்கடவுள்தான் மெய் உன்கடவுள்பொய் எனச் சண்டையிட்டு உயிரைக்கொடுப்பவர் பலருண்டு. சமயநூல்களிற் சொல்லிய விதிப்படி யொழுகுபவர் சிலர்கிடைப்பது மருமை. இதனுற்றான் "மதத்துக்குச் சாவார் பலருண்டு, மதத்தின்படி யிருப்பார் சிலருமில்லை" என்றார் ஒருவர். இவ்வாறு பிணங்குதலின்றி எல்லா மதங்களையும் ஒதுக்கித்தள்ளாது சோபானமுறையாக அமைத்து ஆற்றுக் கங்காநதி கடலைச்சேர்வதுபோல நேரேபரம்பொருளை யடைதற்குரிய சற்சமயம் சைவ சமயமேயாம். இச்சைவ சமயக்கடவுள் கடவுளிலக்கணங்களெல்லாம் முற்றப் பெற்ற பரமசிவனே யாம். ஆன்மாக்கள்அவரவர்கள் செய்த கன்மங்கட் கீடாகப் புத்த முதலிய புறச்சமயங்களிற் புகுந்து ஆங்காங்கு செய்யும் புண்ணிய முதிர்ச்சிக்கேற்ப அகச்சமயத்திற் பிரவேசிக்கப்பெற்று நாளடைவிற் செய்த பெரும்புண்ணிய வசத்தால் சைவசமயத்தில் வரப்பெறும். எவ்வெச் சமயத்திலிருப்பினும் அவ்வச்சமயக்கடவுளாகி அவரவர் வினைக்கேற்ப அருள்செய்பவர் சிவபிரானே. ஆதலால் சைவசமயம் எந்தச்சமயத்

தையும் தள்ளிவிடுவதில்லை. எல்லாவற்றையும் தான் ஏற்றுக்கொள்ளும் பெருமை இச் சைவ சமயமொன்றற்கே கிடைத்த பெரும் பாக்கியமாகும். இதனை

அறிவி னான்மிக்க வறுவகைச் சமயத் தவ்வவர்க் காங்கே யாரருள் புரிந்து, வெறியு மாகட லிலங்கையர் கோனைத் துளங்க மால்வரைக் கீழடர்த் திட்டுக், குறிகொள் பாடலி னின்னிசை கேட்டுக் கோல வாளொடு நாளது கொடுத்த, செறிவு கண்டுநின் றிருவடியடைந்தேன் செழும்பொ ழிற்றிருப் புன்கூரு ளானே.

அறுவகைச் சமயத் தோர்க்கு மவ்வவர் பொருளாய் வேறுங்
குறியது வுடைத்தாய் வேதா கமங்களின் குறியி றந்தங்
கறிவினி லறிவாய் மன்னி யம்மையோ டப்ப னாகிச்
செறிவொழி யாது நின்ற சிவனடி சென்னி சேர்ப்பாம்.

யாதொரு தெய்வங் கொண்டீ ரத்தெய்வ மாகி யாங்கே
மாதொரு பாக னார்தாம் வருவர்மற் றத்தெய் வங்கள்
வேதனைப் படுமி றக்கும் பிறக்குமேல் வினையுஞ் செய்யும்
ஆதலா லிவையி லாதா னறிந்தருள் செய்வ னன்றே.

விரிவிலா வறிவி னார்கள் வேறொரு சமயஞ் செய்தங்
கெரிவினாற் சொன்னா ரேனு மெம்பிராற் கேற்ற மாகும்,

என்னும் பெரியார் திருவாக்குக்களால் அறியலாம். அன்றியும் பற்பல பிறவிகளிற் செய்த புண்ணிய விசேடத்தாலேதான் சைவ சமயத்தை யடையக்கூடு மென்பதை

"புறச்சமய நெறிநின்றும் அகச்சமயம் புக்கும்
புகன்மிருதி வழியுழன்றும் புகலும்ஆச் சிரம
அறத்துறைக ளவையடைந்தும் அருந்தவங்கள் புரிந்தும்
அருங்கலைகள் பலதெரிந்தும் ஆரணங்கள் படித்தும்
சிறப்புடைய புராணங்கள் உணர்ந்தும் வேதச்
சிரப்பொருளை மிகத்தெளிந்துஞ் சென்றாற் சைவத்
திறத்தடைவர் இதிற்சரியை கிரியா யோகஞ்
செலுத்தியபின் ஞானத்தாற் சிவனடியைச் சேர்வர்"

என்னுஞ் சிவஞானசித்தித் திருவிருத்தத்தா லறியலாம்.

இனி எந்த மதஸ்தரும் தம்மதங்களையும் தம் மதக்கடவுளரையும் உயர்த்திக் கூறலாமே யன்றிப் பிறமதங்களை யேனும் பிறமதக் கடவுளரையேனும் நிந்திப்பது அடாது. வாதிக்க வந்த இடத்துத் தம் மதத்தி னுயர்வும் பிறமதங்களின் றாழ்வும் கூறலாமே யன்றித் தூஷிப்பது கூடாது. அந்நிலையில் பிறமதங்களின் குறைகளைக் கூறுதலைத் தூஷணையாகக் கருதல் கூடாது. எல்லா மதங்களையும் தழுவிச் செல்வது தான் உண்மைச் சைவமாகும். தற்காலத்துச் சிலர் சமரசம் எனப்பெயரிட்டுக் கொண்டு ஏசுகிறிஸ்து, அல்லா, புத்தர், அருகர், பிரமன், விஷ்ணு, சிவபிரான் முதலிய எல்லாரையும் ஒன்று போல் மதித்துப் பத்தி செய்யவேண்டு மென்கின்றனர். இங்ஙனம் ஒன்றாக மதித்துப் பத்தி செய்வது அறிவன்று. எவன் எந்த மதத்தை யனுசரித்தவனோ அவன் அந்த மதக் கடவுளினிடத்து அன்பு செலுத்தும்போது ஒருகற்புடைய நங்கை தன் கணவனிடத்துச்செலுத்தும் தலையன்பு போல் சிறந்த பத்தி செலுத்த வேண்டும்.

ஏனைக் கடவுளரைப் பற்றிக் கருதுமிடத்து அப்பெண்மணியானவள் தந்தை சோதரர் முதலிய ஏனையரிடத்துச் செலுத்தும் அன்பு போலச் சாதாரண அன்பு செலுத்த வேண்டும். ஆகவே நாயகனிடத்துச் செலுத்தும் அன்பிற்கும் ஏனையரிடத்துச் செலுத்தும் அன்பிற்குமுள்ள பேதம் மலைக்கும் அணுவுக்குமுள்ள பேதம்போலாகு மென்க. இவ்வுண்மையை யாவரும் நன்கு கவனித்தல் வேண்டும். இங்ஙனமின்றி எல்லாச் சமயக்கடவுளரையும் பதிப்பொருளென ஒரு நிகராகக் கொள்ளல் எதுபோலு மெனில், ஒரு பெண்ணானவள் உலகிலுள்ள எல்லாப் புருடரையும் நாயகனாகக் கருதல் வேண்டும் எனக் கூறலோடொக்கு மென்க. இதனாற்றான்

சாவமுன் னுட்டக்கன் வேள்வித் தகர்தின்று நஞ்சமஞ்சி
ஆவவெந் தாயென் றவிதா விடுநம் மவரவரே
மூவரென் றேயெம் பிரானொடுமெண்ணி விண்ணாண்டுமண்மேற்
றேவரென் றேயிறு மாந்தென்ன பாவந் திரிதவரே".

"கொள்ளேன் புரந்தரன் மாலயன் வாழ்வு குடிகெடினும்
நள்ளேன் நினதடி யாரொடல் லால்நர கம்புகினும்
எள்ளேன் திருவரு ளாலே யிருக்கப் பெறினிறைவா
உள்ளேன் பிறதெய்வம் உன்னையல் லாலெங்க ளுத்தமனே"

என்று சிவபிரானோடு பிறதேவர்கள் யாரையும் ஒப்பிட்டுக் கூறலாகாமையைப் பெரியார் பணித்தருளினர்.

அளவற்று விரிந்து கிடக்கும் எல்லாச் சமய சாத்திரங்களும் வேதாகமங்களிலே சுருக்கிக் கூறப்பட்டுள்ளனவேயாம். ஆயினும் அவற்றைச் சமுத்திர கலச நியாயமாக உருத்திரர்களும் தேவர்களும் இருடிகளும் தத்தம் அறிவினளவிற் கேற்பத் தனித்தனி விரித்துப்புறச்சமய உட்சமய சாத்திரங்களாகப் பல இயற்றுவாராயினர். ஒன்றோடொன் றொவ்வாத சாருவாக முதலிய பல சமயங்களைப் பற்றி வேதாகமங்கள் கூறலாமோ எனின் ஆன்மாக்களது அதிகார பேதம் பற்றி அவரவர் பக்குவத்துக்கேற்றதொன்றைக் கைக்கொண்டு அதன் வழியொழுகி மேற்செல்லுமாறு கருதியே யவ்வாறு வைத்தனவா மென்க.

இந்திரனுக்கு வியாழ பகவானே உலகாயத மத போதனை செய்ததும் அதற்குக் காரணமும் உலகப் பிரசித்த மன்றோ? இவ்வுண்மைகளை யுய்த்துணர மாட்டாது யானைகண்ட குருடர் போல ஒவ்வொருவர் ஒவ்வொரு சமய நூல்களைப் படித்து அதுதான் மெய்ச்சமய மெனக் கொண்டொழுகுவர். புண்ணிய வசத்தால் நல்லறிவுதலைக் கூடப்பெற்றவர்கள் பல சமய நூல்களையும் படித்தறிந்து சமயங்களும் சாத்திரங்களும் அவை கூறும் பொருளும் ஒன்றோடொன்றொவ்வாது பலதிறப் படுகின்றனவே, இவையிற்றுள் மேலாகிய சற் சமயம் யாது? அதற்குரிய சாத்திரங்க ளெவை? அவற்றாற் பிரதிபாதிக்கப்படும் பரம்பொருள் யாது?என ஆராய்ந்து இது ஆகும் அதுவன்று என்னும் பிணக்கின்றித் தன்னிடத்தே எல்லாச் சமயப் பொருள்களும் அடங்க நிற்பது எந்தச் சமயமோ அந்தச் சமயமே மெய்ச்சமயம். அதற்குரிய சாத்திரங்களே மெய்ச்

சாத்திரங்கள். அவை கூறும் பொருளே மெய்ப்பொருள் எனத்தெளிவு கொள்வர். அங்ஙனம் ஆராய்ந்து தெளியுங்கால் சைவசமயமும் வேதாகம வழிப்போந்த சித்தாந்த சாத்திரங்களும் பதி பசு பாச மென்னும் முப்பொருள்களும் அவருணர்வில் உறைத்து நிற்பனவாகும். இதனை

"ஒதுசம யங்கள்பொரு ளுணரு நூல்க ளொன்றோடொன் றொவ்வாம லுளபலவு மிவற்றுள், யாதுசம யம்பொருணூல் யாதிங் கென்னில் இதுவாகு மதுவல்ல வெனும்பிணக்க தின்றி, நீதியினு லிவையெல்லா மோரிடத்தே காண நிற்பதியா தொருசமய மதுசமயம் பொருணூல், ஆதலினு லிவையெல்லா மருமறையா கமத்தே யடங்கியிடு மவையிரண்டு மரனடிக்கீழ் நிற்கும்"

என்னும் சிவஞானசித்தித் திருவிருத்தத்தா லறியலாம்.

இதுகாறுங் கூறியவாற்றாற் கடவுள் சிவபிரானே யென்பதும், சமயம் சைவசமயமே என்பதும் பெறப்பட்டன.

அறிவுறும் பொருளோ வீச னறிவுறு தவனோ வென்னில்
அறிபொருள் அசித்து அசத்தாம் அறியாத தின்றும் எங்கும்
செறிசிவம் இரண்டு மின்றிச் சித்தொடு சத்தாய் நிற்கும்
நெறிதரு சத்தின் முன்னர் அசத்தெலாம் நின்றி டாவே.

வாழ்வெனு மையல்விட்டு வறுமையாஞ் சிறுமை தப்பித்
தாழ்வெனுந் தன்மை யோடுஞ் சைவமாஞ் சமயஞ் சாரும்
ஊழ்பெற லரிது சால உயர்சிவ ஞானத் தாலே
போழிள மதியி னானைப் போற்றுவார் அருள்பெற் றாரே.

சைவ சமய மேசமயஞ் சமயா தீதப் பழம்பொருளைக்
கைவந் திடவே மன்றுள்வெளி காட்டு மிந்தக் கருத்தைவிட்டுப்
பொய்வந் துழலுஞ் சமயநெறி புகுத வேண்டா முத்திதரும்
தெய்வ சபையைக் காண்பதற்குச் சேர வாருஞ் செகத்தீரே.

முற்றிற்று.

# (2) சிவ வழிபாடு.

ஐயினன் மிடறடைப்புண் டாக்கை விட்டு
    ஆவியார் போவதுமே யகத்தார் கூடி
மையினற் கண்ணெழுதி மாலை சூட்டி
    மயானத்தி லிடுவதன்முன் மதியஞ் சூடு
மையனார்க் காளாகி யன்பு மிக்கு
    அகங்குழைந்து மெய்யரும்பி யடிகள் பாதங்
கையினற் றொழுமடியார் நெஞ்சி னுள்ளே
    கன்றாப்பூர் நடுதறியைக் காண லாமே.

---

சிவவழிபாடு—சிவனுக்குச் செய்யும் வழிபாடு என விரியும். சிவம்—நிரதிசய இன்பமாகிய மங்கலம். வழிபாடு—வணக்கம். அந்த நிரதிசய இன்பமாகிய மங்கலத்தைக் கொடுப்பவனே சிவன் என்னும் பதிப்பொருள். நிரதிசய இன்பமென்பதுவே மோக்ஷமாதலின் சிவன் எனற்கு மோக்ஷதாதா எனப்பொருள் கூறுவது மொன்று.

இனி இத்தகைய சிவனது தன்மைகள் யாவை? வழிபடற்பாலர் யாவர்? அவனுக்குச் செய்யும் வழிபாடுகள் யாவை? வழிபாட்டால் அடையும் பலன் யாது? என ஆராய்வாம்.

சிவனது தன்மைகள்:—(1)ஏனைத் தேவராதியர் யாரும் பிறந்திறக்கு மியல்பினராதல் போல சிவபிரான் பிறத்தலும் இறத்தலுமில்லாத அநாதி நித்தியப் பொருளாதல். (2) எல்லாத்தேவருந் தன்னை வணங்கி வேண்டிய வேண்டியாங் கெய்தத் திருவருள் செய்து தான் வேறொருவரை வணங்கி நில்லாமை. (3) எல்லாத்தேவர் வலிமையும் தன்னுள்ளடங்குமாறு தான் வரம்பிலாற்றல் கொண்டுண்மை. (4) தானே மோக்ஷதாதாவாதல். (5) பஞ்சகிருத்திய சுதந்தரமுடைமை என இவை முதற்பலவாம்.

(1) வேதாகம புராணேதிகாச வாயிலாக ஆராயுமிடத்துச் சகலதேவர்களும் பிறரும் யோனிவாய்ப்பட்டுப் பிறத்தலும் இறத்த

லும் கேட்கப்படுகின்றன. சிவபிரான் அங்ஙனம் பிறந்ததாக வேனும் இறந்ததாக வேனும் யாண்டுங் கேட்கப்படவில்லை. இதனை

"எல்லார் பிறப்பு மிறப்புமியற் பாவலர்தஞ்
சொல்லாற் றெளிந்தோநஞ் சோமேசர்—இல்லிற்
பிறந்தகதை யுங்கேளோம் பேருலகில் வாழ்ந்துண்
டிறந்தகதை யுங்கேட் டிலோம்" என்பதாலறிக.

(2) சகல தேவர்களும் ஒவ்வொரு வரங்களை வேண்டிக் காலந்தோறும் சிவபிரானைப் பூஜித்து அருள் பெற்றதாகக் கூறுஞ் சரிதங்கள் பலவுள்ளன. யாண்டாவது எக்காலத்தேனும் சிவபிரான் வேறொருவரைப் பூஜித்ததாக எந்த நூலுங் கூறக் கேட்டிலம். இக்கருத்தை

"இன்னுமுயர் பரசிவனை யிருதிணையி னுயிரனைத்து
மன்னும்வழி பாடியற்றி வயங்கியவைக் கறிகுறியா
மின்னுபல தலம்பொலியு மன்றிமிளி ரனையபிரா
னுன்னியொரு வரைப்பூசை யுஞற்றியது முண்டுகொலோ."

என்பதாற்காண்க.

(3) சிவபிரான் சர்வவியாபக சக்தியுறுதலும், ஏனையதேவர்கள் வலிமையெல்லாம் அதனுள் வியாப்பியமா யடங்குதலும் கருதியே ஏனைய தேவர்கள் பெயர்களை யெல்லாம் சிவபிரானுக்கு உரியனவாகக் கூறும் வேதங்கள், சிவன் என்னும் திருநாமத்தை சிவபிரான் ஒருவருக்கே யன்றி வேறு எத்தேவர்க்கேனும் கூறாமல் விட்டது. இக்கருத்தை விளக்கியே

"சிவனெனு நாமந் தனக்கே யுடையசெம் மேனியெம்மான்
அவனெனை யாட்கொண் டளித்திடு மாகி லவன்றனை யான்
பவனெனு நாமம் பிடித்துத் திரிந்துபன் னாளழைத்தா
லிவனெனைப் பன்னா ளழைப்பொழி யானென் றெதிர்ப்படுமே"

எனத் தமிழ்வேதங் கூறுதலுணர்க. அன்றியும், வேதங்களின் மத்தியில் உயிர் நிலையாக விளங்குவதும் சிவ நாமமே யாம். அதாவது.—இருக்கு, யசுர், சாமம் என வேதங்கள் மூன்று. அவற்றுள் நடுவாயது யசுர்வேதம். அது ஏழு காண்டங்களை யுடையது. அவற்றுள் நடுவணதாகிய நான்காவது காண்டத்தின் நடுவில் சிவபிரான் திருநாமம் விளங்குவதாக அடியில்வருஞ்செய்யுளானறியலாம்

மும்மறையி னடுமறையின் முனிவிலெழு காண்டத்திற்
செம்மைதரு நடுக்காண்டஞ் சேர்ந்தவெழு சங்கிதையில்
அம்மநடுச் சங்கிதையி னுதியீ றெழித்துநடுப்
பொம்மலுற வமர்மனுவின் பொருளாவா னெவன் மைந்த.

வேதம் பலவிடங்களில் சிவபிரானைப்பிரமம் எனக்கூறுகின்றது. பிரமசப்தத்தை எல்லாச் சமயத்தாரும் தத்தம் கடவுளுக் கேற்றிக் கூறு நிற்பர். அங்ஙனம் கூறினும் பிரமசப்தம் சிவபிரானுக்கே யுரித்தாதல் விளக்குதும். கேனோபநிடதத்தில் இந்திரன் அக்கினி வாயு முதலியோர் அசுரர்களைப் போரில் வெற்றி கொண்ட ஜயசீலர் யாம் யாம் என்று செருக்குற, அதனையறிந்த பரமசிவன், அவர்கள் முன்னிலையில், ஒரு இயக்க வேடந்தாங்கிச்சென்று, ஒரு துரும்பை யெடுத்துக் கீழே நட்டு, இதனிடத்து உங்கள் வலிமையைக் காட்டுங்க ளென்று கூறினரெனவும், அக்கினியும் வாயுவும் தம் ஆற்றல் சிறிதுஞ் செல்லாமைகண்டு நாணமுற்று நிற்க, பின் இந்திரன் வந்தவுடன் இயக்க வேடந் தாங்கிவந்து நின்ற சிவபிரான் மறைந்தருளினர் எனவும், அப்பொழுது இமோற்பர்வத புத்திரியாகிய உமாதேவியார் விசும்பிற் றோன்றினரெனவும், அவ்வம்மையாரை நோக்கி அம்மே! இவ்வியக்கன் யாவன்? என்று இந்திரன் கேட்ப "இவன் பிரமம்" என்று அம்மையார் கூறியருளினரெனவும், கேட்கப்படுதல் பிரத்தியக்ஷமாம்.

இவ்வுபநிடதக்கூற்றால் இயக்க வுருவமாக வந்தது "பிரமம்" எனக் காணப்படினும், அவ்வுருவம் சிவபிரானென்பது எதனாற் பெறப்படு மெனில் "தாயுடன் சென்று பின்றாதையைக்கூடி" என்ற முறைப்படி உமாதேவியாராகிய சிவ சத்தியாற் காட்டப்பட்டமையால் அந்தப் பிரமம் பரமசிவனே யென்பது பசுமரத்தாணி போல் நாட்டப் பெறும். வாயு சங்கிதை இக்கதையை நன்குவிரித்துக் கூறும். அன்றியும்,

தோலாவவை நாப்ப ணடைந்து துரும்புநட்டு
மாலாதி விண்ணோர் வலி முற்றவு மாற்றவல்லோ.

ஞலால முண்டோ னவனையகி லங்களுக்கு
மேலாய வேத வென்விண்டது சாமவேதம்.

என்னும் காஞ்சிப் புராணத்திருப்பாசுரத்தானுமுணர்க.

(4) அல்லதூஉம், யஜுர்வேத சமக மந்திரங்கள் அரி அயன் இந்திரன் முதலியோரை அன்னாதிகளுடன்சேர்த்து ஈயப்படும்பொருளாகக் கூறுகின்றமையும், சிவபிரான் ஈயுந்தாதாவாதலின் அப்பெருமானை அங்ஙனங் கூறுமையும், (ஒரு பிரபுவினிடம் யாசிப்பவர் அப்பிரபுவின் உடைமைப் பொருள்களில் எதையும் இரத்தல் போல அப்பிரபுவை நோக்கி உன்னைக் கொடு எனக்கேட்டலின்மை ஊகிக்கத் தக்கது) "பிறரால் சாதிக்க முடியாத முப்புரங்களையும் நீருக்கி யுலகங்களைக் காத்தமையால் பசுபதி நீயே, யாமெல்லாம் பசுக்கள் என்று அங்கீகரித்தனர் தேவர்கள்" என்பது முதலிய சுருதிகளுண்மையும் சிவபிரானே மோக்ஷதாதா என்பதை வலியுறுத்துவனவாகும்.

(5) ஆன்மாக்களுக்கு அறிவு இச்சை தொழில்கள் விளங்க முதற்காரணமான மாயையினின்றுந் தநுவாதிகளைத் தோற்றுவித்தலாகிய சிருட்டியும், நிலைபெறச் செய்தலாகிய திதியும், இளைப்பொழித்தற்பொருட்டு மீட்டும் மாயையில் ஒடுக்குதலாகிய சங்காரமும், இருவினை யொப்பு வருவித்து மலங்களை முதிர்வித்தலாகிய திரோபவமும், பந்தம் விடுவித்தலாகிய அநுக்கிரகமும் என்று கூறப்பட்ட பஞ்சகிருத்தியங்கட்கும் சிவபிரானே தலைவராவர். பிரம விட்டுணுக்களுக்கன்றோ படைத்தல் காத்தல் உரியன வென்னின், அவர்கள் அவற்றைச் செய்தலில் அரசனது ஆணைப்படி நடத்தும் மந்திரி முதலியோரைப் போன்று சிவபிரானது ஆணைப்படி நடத்தப்பட்டவர்களே யல்லது சுதந்தரத்துவம் பெற்றவரல்லர். மன்மதனை நீருக்கிய காலத்து அவன் றந்தையாகிய திருமால் தானே காத்தற்றொழிலின் முழுச்சுதந்தரம் பெற்றிருப்பின் தன் மகன் நீறுபடாது காத்திருக்கலாம். பிரமன் படைத்தற் றொழிலின் முழுச்சுதந்தர முடையனாயின் சிவபிரானாற் கொய்யப்பட்ட தனது தலையை மீளப்படைத்திருக்கலாம். அங்ஙனஞ் செய்யாமைபாலினை அவர்க்கு அத்தொழில்கள் சுதந்திரமுடையன வல்ல

வாதல் பெறப்படுதலுடன் சிவபிரானே பஞ்சகிருத்தியத் தலைவராத லும் பெறப்படும். இதனை

"உலகமளித்தல் சுதந்திரமன் றவண முயர்த்தோற் கெனவவன்சே யிலகு முருவம் பொடித்தவன்பா லெழுந்துபடைப்புஞ் சுதந்திரமன் றலர்மேல் லணையாற் கெனவவனை யரங்கத் திசைமா முகனுக்கிப் பலரும்வெருவப்பொழிநெய்த்தோர்பயிக்கம்புகுந்தோன்பதம் பணிவாம்

என்னும் திருவானைக்காப்புராணச்செய்யுளாலறிக.

இங்ஙனமாகச் சிவபிரானது முழுமுதற்றன்மைகள் பலவாம். ஆதலின் "ஆட்பாலவர்க்கருளும் வண்ணமு மாதிமாண்பும், கேட் பான்புகினளவில்லை" என்றார் பெரியார். ஆயினும் இத்தகைய இருப த்துமூன்று காரணங்களைக் காட்டிச்சிவபிரானே பரம் பொருளென விளக்கி மாதவச் சிவஞான யோகிகள் கட்டளை யிட்டருளிய சுலோக பஞ்சக மொழி பெயர்ப்பி லோரகவலைமட்டும் கூறிமேற்செல்வாம்.

உயர்கா யத்திரிக் குரிப்பொரு ளாகலிற்
றசரதன் மதலை தாபித் தேத்தலிற்
கண்ணன் கயிலையி னண்ணிநின் றிரப்பப்
புகழ்ச்சியி னமைந்த மகப்பே றுதவலிற்
றனது விழியுட னொராயிரங் கமலப்
புதுமலர் கொண்டரி பூசனை யாற்றலி
னுங்கவற் கிரங்கி யாழியீந் தருடலி
னைங்கணைக் கிழவனை யழல்விருந் தாக்கலி
னமைப்பருங் கடல்விட மமுதுசெய் திடுதலிற்
றென்றிசைத் தலைவனைச் செகுத்துயிர் பருகலி
னவுணர் முப்புர மழியவில் வாங்கலிற்
றக்கன் வேள்வி தகர்த்தருள் செய்தலிற்
றனஞ்சயன் றனக்குத் தன்படை வழங்கலின்
மாறுட மடங்கலை வலிதபக் கோறலின்
மாயோன் மகவுஉ வாகிய காலைத்
தடமுலை திளைத்துச் சாத்தனைத் தருதலி
னுழ்கடல் வரைப்பி னுன்றோ ரநேக

ரன்புமீ தூர வருச்சனை யாற்றலி
ஞன்கிரு செல்வமு மாங்கவர்க் கருடலி
னையிரு பிறப்பினு மரியருச் சித்தலி
னிருவரு மன்னமு மேனமு மாகி
யடிமுடி தேட வழற்பிழம் பாகலிற்
பிறப்பிறப் பாதி யுயிர்க்குண மின்மையிற்
கங்கைசூழ் கிடந்த காசிமால் வரைப்பிற்
பொய்புகல் வியாதன் கைதம் பித்தலின்
முப்புர மிறுப்புழி முகுந்தப் புத்தேண்
மால்விடை யாகி ஞாலமொடு தாங்கலி
னயன்சிர மாலை யளவில வணிதலின்
ஞானமும் வீடும் பேணினர்க் குதவலிற்
பசுபதிப் பெயரிய தனிமுதற் கடவு
ளும்பர்க ளெவர்க்கு முயர்ந்தோ
னென்பது தெளிக வியல்புணர்ந் தோரே.

இனி வழிபடற் பாலர் யாவர்? என ஆராய்வாம்.

எல்லா ஆன்ம கோடிகளும் வழிபடற் குரியனவே. அவற்றுள் ஐயறிவும் நிறையப்பெற்று நல்வினை தீவினை சுவர்க்க நரகமாதிகளை நூலறிவாற் பகுத்தறியும் விசேட வறிவையும் பெற்றுள்ள தேவர் முனிவர் முதலியவர்களும் மனிதரும் வழிபாடியற்ற வேண்டியவர்களேயாம். ஆயினும் மனிதவர்க்கத்தாரே இவ்வழிபாட்டிற்குப் பெரிதும் பாத்தியமுடையவராவர். தேவர்களும் தமது நல்வினைக்கீடாகச் சுவர்க்கபோகம் புசித்துத் தீர்ந்தபின்னர் பூமியில் மானிடராகப் பிறந்து சிவவழிபாடியற்றியே உயர்பதமுறுவர். ஆதலால் பெறுதற்கரியது மானுடப்பிறவியேயாகும்.

“ மானுடப் பிறவி தானும் வகுத்தது மனவாக்காய
மானிடத் தைந்து மாடு மரன்பணிக் காகவன்றோ
வானிடத் தவரு மண்மேல் வந்தரன் றனையர்ச்சிப்ப
ரூனெடுத் துழலு மூமை ரொன்றையு முணரா ரந்தோ”

என்னும் சிவஞானசித்தித் திருவிருத்தம் ஈண்டுக்கவனித்தற் குரியதாம். அன்றியும்,

"கண்ணுதலா லயநோக்குங் கண்களே கண்கள்
கறைக்கண்டன் கோயில்புகுங் கால்களே கால்கள்
பெண்ணொருபா கனைப் பணியுந் தலைகளே தலைகள்
பிஞ்ஞகனைப் பூசிக்குங் கைகளே கைகள்
பண்ணவன்றன் சீர்பாடு நன்னாவே நன்னாப்
பரன்சரிதை யேகேட்கப் படுஞ்செவியே செவிகள்
அண்ணல்பொலங் கழனினைக்கு நெஞ்சமே நெஞ்சம்
அவனடிக்கீ ழடிமைபுகு மடிமையே யடிமை"

என்னும் பிரமோத்தரகாண்டச் செய்யுளால் மனிதர்க்கு கண், கால், தலை, கை, நா, செவி, நெஞ்சு முதலாய வுறுப்புக்கள் யாவும் சிவவழிபாட்டிற்காகவே அமைக்கப்பட்டனவென்பதும், அவனுக்குச் செய்யும் அடிமையே அடிமைப்பயன் றரத்தக்கதென்பதும் தெள்ளிது புலனும். "வாழ்த்தவாயும் நினைக்க மடநெஞ்சும், தாழ்த்தச் சென்னியுந் தந்த தலைவன்" "கோளில் பொறியிற் குணமிலவே யெண் குணத்தான், றாளை வணங்காத் தலை" என்பன முதலாகப் பெரியார் பணித்தருளுவன பலவுள. ஆதலால் நன்மை தீமைகளைப்பகுத்தறியும் தன்மை வாய்ந்த நாம் அனைவரும் சிவ வழிபாட்டிற்கு உரிமை உடையோம். பன்னாள் வழிபட்டும் சிவபிரான் வெளிப்பட்டருளவில்லையே யென்று மலையாது நமது கடமை வழிபடுதல் ஒன்றே யென்பதைத் திடமாகக் கொள்வோமாயின் நமக்கு அருள் செய்து உய்யக்கொள்வது அவன் கடைமையே யாகும்.

"நன் கடம்பனைப் பெற்றவள் பங்கினன்
தென்க டம்பத் திருத்துறைக் கோயிலான்
தன்க டன்னடி யேனையுந் தாங்குதல்
என்க டன்பணி செய்து கிடப்பதே" என்பது சுருதி.

இனி அவனுக்குச் செய்யும் வழிபாடுகள் யாவை? என்பதை யாராய்வாம்.

சிவவழிபாடு விதிமார்க்கம் பத்திமார்க்கம் என இருவகைப்படும். விதிமார்க்கமாவது :—பல நூல்களைக் கற்று அறிவு முதிரப்பெற்று எல்லாப் பொருள்களின் நிலையாமையையும் இறைவனது

நித்தியத்துவத்தையும் உள்ளவாறுணர்ந்து உலகப் பொருள்களிடத்தே உவர்ப்புக்கொண்டு தத்தம் ஜாதிமுறைகடவாது நின்று நல்லாசிரியனையடைந்து சமய முதலிய தீக்ஷைகளைப்பெற்றுச்சரியையாகிய சிவபணிவிடைகளையும் கிரியையாகிய சிவபூசைகளையும் மனத்தைப் புறம்போகவிடாது சாஸ்திர விதிப்படி செய்துவருதல். இவற்றுள் சரியையாவது ஆலயங்களிலே உருவத்திருமேனியை நோக்கிச் செய்யப்படும் புறத்தொழிலாகிய திருவலகிடுதல், திருமெழுக்கிடுதல், மலர்மாலைசாத்தல், தீபமேற்றல் முதலியனவாம். இது தாசமார்க்கமெனவும் பெயர் பெறும். கிரியையாவது புறத்தொழில் அகத்தொழில் என்னுமிரண்டாலும் அருவுருவத் திருமேனியை நோக்கிச் செய்வதாகிய வழிபாடு. இது புது மலர் முதலிய பூஜோபகரணங்களைத் தொகுத்து ஐவகைச் சுத்திசெய்து சிவாசன மூர்த்தி மூலங்களாலே முறையே ஆசனமிட்டு மூர்த்தியை யெழுந்தருளச்செய்து மூர்த்திமானாகிய பரஞ்சோதியைப் பாவனைசெய்து ஆவாகித்து மெய்யன்பினால் அருச்சித்துத் துதித்து வழிபடுதலாம். இது புத்திர மார்க்கமெனவும் பெயர் பெறும். இன்னும் இவற்றின் விரிமுறையை ஆசாரியர் உபதேசத்தாலறிக.

அகத்தொழில் மாத்திரையானே அருவத் திருமேனியை நோக்கிச் செய்யும் வழிபாடு இயமமுதல் சமாதி யீறாகச் சொல்லப்பட்ட எட்டு வகைப்பட்டு விரிந்துள்ள யோகமாம். இது சகமார்க்கமெனவும் பெயர் பெறும். இந்த மூவகை வழிபாடுகளும் ஞானத்தை யுதிப்பித்தற்கு ஏதுக்களாம். இவற்றானே தான் ஞானம் பிறக்குமென்பர். இது சன்மார்க்கமெனப் பெறும். இனி இவற்றுள் ஒவ்வொன்றும் நன்னான்காய்ச் சரியையிற் சரியை முதல் ஞானத்தில் ஞானம் ஈறாகப் பதினாறு வகையென்று சொல்லப் பெறும். சிவஞானசித்தியார் முதலிய நூல்களில் இவற்றின் விரிவைக் காண்க. ஞானத்தைப்பற்றி வேறு தனியாக விரித்துக் கூறுதும். சிவவழிபாடு செய்யும்போதும் ஜாதிமுறைகடவாது நடத்தல் வேண்டுமோ எனில் கூறுதும். திருநாளைப் போவார் நாயனார் முற்பிறப்பிற் செய்த புண்ணிய மிகுதியினாலே சிவபிரானிடத்து மெய்யன்புடையராகியிருந்தும் தாம் புலையர் குலத்திற் பிறந்திருத்தலால் தம் ஜாதிமுறை கடவாது நின்

றே பத்தி செய்யவேண்டுமென்பது கருதி சிவாலயங்கள் தோறும் சென்று பேரிகை மிருதங்கம் யாழ் முதலிய கருவிகட்குத் தோலும் வாரும், நரம்புங் கொடுத்தும், கோரோசனை கொடுத்தும், ஆலயங்களின் திருவாயிற் புறத்தே நின்று ஆடிப்பாடிக் கும்பிட்டு வணங்கி வந்தனர். சிதம்பரத்துக்குச் சென்றபோது நாயனர் தம் இழிகுலப் பிறப்பால் உள்ளே செல்லக்கூடாமைக்கு விசனித்து நகர்ப்புறத்தே வலஞ்செய்து கவலையுடன் துயில்போது சிவபிரானெழுந்தருளி நாளை அக்கினியில் மூழ்கிப் புனிதனாகி உள்ளே வந்து நம்மைத் தரிசிப்பாயாக வெனக் கட்டளையிட்டருள அவ்வாறே செய்து தரிசனை பெற்றுய்ந்தாரென்று பெரிய புராணங் கூறுமாற்றாற்காண்க.

எத்துணைப் பெரிதான சிவவழிபாட்டைச் செய்யினும் மனம் வேறொன்றிற் செல்லாவாறு அழுந்திய நிலையிலிருந்து செய்தாலன்றிப் பயனில்லை. சிந்தை வேறுபட்ட செயல் தீங்கே பயக்கும். இதனை

கொந்தலர் கொய்யும் போது கூர்விழிமைய்யலாலே
பைந்தொடி மடவார் தம்மைப் பார்த்தலாற் கைலைவெற்பிற்
சுந்தரன் பட்ட காதை யறிதிரோ துணர்மென் போதால்
அந்தணர் கீழ்க ளாவார் கீழ்களந் தணர்க ளாவார்.

என்னும் புட்பவிதிச் செய்யுளாலும், நக்கீரதேவர் சரவணப் பொய்கைக் கரையிலிருந்து சிவபூசை செய்துகொண்டிருக்கும் போது காற்றால் விழுந்த ஓர் ஆலிலையானது பாதிநீரிலும் பாதிகரையிலுமாகப்பட்டு நீரில் பட்டபாதி மீன் வடிவாகிப் புனற்குள்ளிழுப்பக் கரையிற் பட்ட பாதி பக்ஷிவடிவாகி மேலேயிழுப்பக்கிடப்ப, சிவபூசை செய்துகொண்டிருந்த நக்கீரதேவர் அந்த ஆச்சரியத்திலே மனஞ்செலுத்தினர். சிவ பூஜாகாலத்து வேறொன்றில் மனஞ் செலுத்தியதனால் உடனே அவண் ஒரு பூதம் வந்து அவரைத் தூக்கிச் சென்று மலைக்குகையுள் முன்னமே தன்னாலிங்ஙனம் வைக்கப்பட்ட தொள்ளாயிரத்துத் தொண்ணூற் றொன்பதின்மருடன் சேர்த்து வைத்ததும், தேவர் முருகக்கடவுள்மீது திருமுருகாற்றுப் படைபாடி அப்பூதத்தை வென்று மீண்டதுமாகிய பிரசித்த சரித்

திரத்தாலும் நன்குதெளிக. கைலாசவாசியாகிய ஆலால சுந்தரரும் மெய்யடியாராகிய நக்கீரதேவருமே சிவவழிபாடு செய்யுங்கால் சிந்தனை சற்றே புறம்பான குற்றத்திற்காக இப்பாடுபடுவார்களா யின் ஏனையர் விஷயத்தில் சொல்லவேண்டுவதின்றே! இங்ஙனம் வேதாகமாதிகளில் கூறப்பட்ட விதிவழுவாது சிவபணி செய்வது விதிமார்க்கம் எனக் கொள்க.

பக்திமார்க்கமாவது:—முற்பிறவிகளிலே விதிமார்க்கந்தவறாது சிவவழிபாடு செய்து சிவனிடத்தே செலுத்திவந்த மெய்ப்பத்தி முதிர்ச்சியாலே செய்யத்தகுவதின்னது செய்யத் தகாததின்னது என்ற பாகுபாடு கருதாது பரவசப்பட்டுச் சிவபிரானுக்குப்பணிசெய் தலாம். கண்ணப்பநாயனுர் இந்தப் பக்திமார்க்கத்தே செல்லப் பெற் றவராதலின் விதிநிஷேதமாக இவர் செய்த மாமிசநிவேதனுதி எல் லாச்செயல்களும் சிவபிரானுக்கு இனியவாயின. மனமானது தன்னை மறந்து தலைவன் வசப்பட்டு நிற்கும்பொழுது நிகழும் செயல்கள் தான் பத்திமார்க்க மெனப்படுமாதலின் இந்நிலையில் நின்றோர் செயலை ஏனையர் பின்பற்றியொழுகல்கூடாது.

"வெள்ளமிகுத் தேரிநடு வுடைத்தோடி னதுகலிங்கா விடுகிலாரப்
பள்ளமடைத் திருபுறத்துங் கடைவிடுவ ருலகோரப் பரிசுபோல
வுள்ளமிகுத் தறிவெழலாற் பத்திமிகுத் தமையானென் றொருவர்
செய்யிற், றெள்ளுணர்வோ ரதனைவிதி யென்றுபின்னும் புரிகுவ
ரோ தெளிவி லோயே"

என்னும் செய்யுளும் இக்கருத்தையே வலியுறுத்துமாறுணர்க. இங்ஙனமாக இருவகை மார்க்கத்துள் எந்த மார்க்கத்தைப்பற்றி நின்று வழிபாடு செய்யினும் அது நமது கடமை யென்பதுமட்டுங் கருதிச் செய்யவேண்டுமே யன்றி யாதொரு பலனையும் இச்சித் துச்செய்தல் கூடாது. அதுதான் உத்தமசிவவழிபாட்டின் முக்கிய இலக்கணம். இறைவன் ஆண்டான், நாம் அடிமை, ஆதலால் அவனு க்கு நாம் எக்காலத்தும் வழிபாடுசெய்யும் கடமையுடையோம் என்ற எண்ணத்துடனே பணிசெய்யவேண்டும். இங்ஙனமே வழி பாடு செய்யவேண்டுமென்பதை

"கேடு மாக்கமுங் கெட்ட திருவினர்
ஓடுஞ் செம்பொனு மொக்கவே நோக்குவார்
கூடு மன்பினிற் கும்பிட லேயன்றி
வீடும் வேண்டா விறலின் விளங்கினர்."

என்னும் பெரியபுராணத் திருப்பாசுரத்தானுங் காண்க.

இனி வழிபாட்டால் அடையும் பயன்என்ன? என்பதையாராய்வாம்.

அவரவர்செய்த வழிபாட்டின் தகுதிக்கேற்ப இம்மையில் அரசனுதலும், மறுமையில் இந்திரபதவி, பிரமபதவி, விட்டுணுபதவி முதலியவைகளை யெய்தலும் சிவ வழிபாட்டினுலேயாம். "வேண்டுவார் வேண்டுவதே யீவான்கண்டாய்" எனலால் எவ்வெவர்எதனை விரும்பினர்களோ அவ்வவர்க்கு அதனைக் கொடுத்தருளுவர்.

"வில்வக் கிளையுதிர்த்த வெய்ய முசுக்கலையைச்
செல்வத் துரைமகனுச் செய்தனையே"

"வண்டுளருந் தண்டுளாய் மாயோ னிறுமாப்பும்
புண்டரிகப் போதுறையும் புத்தே ளிறுமாப்பும்
அண்டர்தொழ வாழுன் னிறுமாப்பு மாலாலம்
உண்டவனைப் பூசித்த பேறென் றுணர்ந்திலையால்"

என்பன வாதிய திருப்பாசுரங்களால் பூதலவரசனுகவும், இந்திரனுகவும், பிரமனுகவும், விட்டுணுவாகவும் செய்விப்பது சிவவழிபாடாமென்பது காண்க. தேவ தேவனுகிய சிவபிரானை வணங்கியபின்பு அச்சிவபிரான் யாது செய்வரெனில் தன்னைத்தொழுத தொண்டர்களை, முன்னர் அவராற் றொழப்பெற்ற மற்றத் தேவர்களெல்லாம் வணங்கத்தக்க உயர்பதவியிலிருத்தியருளுவர்.

"முழுத்தழன் மேனித் தவளப் பொடியன் கனகக்குன்றத்
தெழிற்பரஞ் சோதியை யெங்கள் பிரானை யிகழ்திர் கண்டீர்
தொழப்படுந் தேவர் தொழப்படு வானைத் தொழுதபின்னைத்
தொழப்படுந் தேவர்தம் மாற்றொழு விக்குந்தந் தொண்டரையே"

என்ற தமிழ்வேதவாக்கு மிகப்பாராட்டற் குரியதாம். இவைகளெல்லாம் காலாந்தரத்தில் மாறத்தக்க பதமுத்திகளே யாதலின்

இவற்றிற்குமேலாயதும், இரும்புண்டநீரும், சமுத்திரத்தையடுத்த நீரும் திரும்ப வராததுபோல மீளாவண்ணம் அப்புஅணைந்தஉப்புப் போல ஆன்மா இறைவனைச்சார்ந்து கால் × தலை-காறலை, தாள் × தலை-தாடலை என்றபோது றகர டகரகங்கள் ஒரெழுத்தென்றும் ஈரெழுத்தென்றும் சொல்லமுடியாமல் இருப்பதுபோல் அத்துவிதமாகின்ற முத்தியின்பமும் தரவல்லது இச்சிவவழிபாடேயாம். சரிபைத்தொண்டருக்குச் சிவசாலோகமும், கிரியைத் தொண்டருக்குச் சிவசாமீபமும், யோகருக்குச் சிவசாரூபமும், ஞானத்தவர்க்குச் சிவசாயுச்சியமும் முறையே பயனென்பர்.

சிவபிரான் தன்னடியார்களது உடல்பொருளாவிகளைஎன்றுகொண்டு அவர்களைத் தன்மயமாக்கியருளுவதை

"அன்றே யென்ற னாவியு முடலு முடைமை யெல்லாங்
குன்றே யனையா யென்னையாட் கொண்ட போதே கொண்டிலையோ
இன்றோரிடையூ றெனக்குண்டோ வெண்டோண் முக்கணெம்மானே
நன்றே செய்வாய் பிழைசெய்வாய் நானோ வதற்கு நாயகமே"

என்னும் மணிவாசகப் பெருமான்றிருவாக்காலறிக. இங்ஙனம் உடல் பொருளாவிகளை இறைவன் என்று கொள்ளினும் அவற்றால் இறைவற்கோர் பயனுமில்லை யெனவும், இறைவனைப்பெற்ற நான் அளவற்ற நிரதிசய இன்பமெய்துகின்றனன் எனவும் அந்த மணிவாசகப் பெருமானே வியந்து பாராட்டிக்கூறும் அருமையை

"தந்ததுன் றன்னைக் கொண்டதென் றன்னைச் சங்கரா வார்கொலோ சதுரர், அந்தமொன் றில்லா வானந்தம் பெற்றேன் யாது நீ பெற்றதொன் றென்பாற், சிந்தையே கோயில் கொண்டவெம் பெருமான் றிருப்பெருந் துறையுறை சிவனே, யெந்தையே யீசா வுடலிடங் கொண்டா யானிதற் கிலனோர் கைம் மாறே"

என்னுந்திருப் பாசுரமே யினிது விளக்கும்.

இதனால் இறைவன் ஆன்மாக்கட்குச் செய்யும் பேரருளானது கைம்மாறு கருதாத பெருந் தன்மையதேயாம். உலகில் உற்றுழியுதவிக்காக்கும் கருணையில் தாயானவள் குழந்தைக்குச் செய்யும் தண்ணளியே மிகப் பாராட்டற்பாலது. குழந்தையின் பக்குவத்துக் கேற்ற

வாறு காலமறிந்து பாலும் கஞ்சியும் சோறும் முதலியன கொடுத்து வளர்க்கின்ற மாதாவின் றண்ணளியைப் புகழாதாரில்லை. அத்தாயின் றண்ணளியினுஞ் சிறந்த பேரருள் சிவபிரானுடைய தென்பதைப் பற்றி அந்த மணிவாசகப் பெருமானே ஒருதிருப்பாசுரத் தாலினிது விளக்குகின்றார். எங்ஙனமெனில்,

"பாலினைந் தூட்டுந் தாயினுஞ் சாலப் பரிந்துநீ பாவியே னுடைய, வூனினை யுருக்கி யுள்ளொளி பெருக்கி யுலப்பிலா வானந்த மாய, தேனினைச் சொரிந்து புறம்புறந் திரிந்த செல்வமே சிவ பெருமானே, யானுனைத் தொடர்ந்து சிக்கெனப் பிடித்தே னெங்கெழுந் தருளுவ தினியே"

என்பதாம். இத்திருப்பாசுரத்தின் பொருளருமையைச் சற்றே விசாரிப்பாம்.

தாயானவள் குழந்தை பசியால் அழும்பொழுது அக்குரல்கேட்டு அதன் பசிப்பிணியை நீக்க நினைந்து அன்புடன் பால் ஊட்டுவள். (நினைந்து என்றதால் அந்நினைவில்லாதகாலமு முளதென்றுகொள்ளக் கிடக்கின்றது.) பதிப்பொருளாகியநீபாசப்பிணியால்வாடும்போது மிக வும் தண்ணளியுற்று தன்னையுணர்ந்து அழைக்கும் அறிவாற்றலில்லா திருப்பவும் தானே வலியவந்து தண்ணளிசெய்தலின் 'சாலப்பரிந்து' எனவும், தாய்கொடுத்த பாலால்வரும் மகிழ்ச்சி சிறிது நேரத்திலழி யும், நீயருளும் இன்பமோ எக்காலத்தும் அழியாது. ஆனதுபற்றி "உலப்பிலா ஆனந்தம்" எனவும், ஒருநோயாளிக்கு முதலில் ஒருவயித்தியன்வந்து ஏதாவது மருந்து கொடுத்திருப்பின் பின்புவரும் வயித்தியன் முன்புவந்த வயித்தியன் கொடுத்த மருந்துக்கு விரோத மில்லாத மருந்தை யறிந்து கொடுக்கவேண்டும், அங்ஙனங் கருதிச் செய்யா வழித் தீங்குவிளையும். ஆதலின் முன்னே தாய்கொடுத்தது பால்ஆனதால் அதற்கு விரோதமில்லாமை கருதியே "தேனினை" என வும், தாய்கொடுத்தபாலைக் குறிப்பிடுமிடத்து அதன்சிற்றளவுகருதி "ஊட்டி" என்றமையால், இவண் ஆனந்தத்தேனின் அளவின்மையைக் குறிப்பிக்கவே "சொரிந்து" எனவும், தாயானவள் குழந்தையின் நற்குண தீக்குண பாகுபாடறியாத காலத்தே அக்குழந்தை நற்குணமுடையனாகிப் பிற்காலத்தே தன்னைப் பரிபாலிப்பான் என்று

கைம்மாறுகருதியே தண்ணளி செய்கின்றாள். நீயோ யான் பாசபந்தப் பிணிப்புற்ற பாவியேனுயினேன் என்பதையும் என்னால் உனக்கு எக்காலத்தும் யாதானுமோர் சிற்றுபகாரமு மில்லை யென்பதையும் தெரிந்தும் பேரருள் செய்தாய் என்பதைக் குறிப்பிடவே "பாவியேனுடைய" எனவும், தாய்கொடுத்த பால் வரவர ஊனைப் பெருக்கும். ஊன் பெருத்தலால் யாதொரு நலனும் பெறக் கூடியதில்லை. நீகொடுத்தருளும் ஆநந்தத்தேனோ ஊனையும் உருக்குவதாகின்றது. உருக்கம் பயத்தலால் எல்லாநலனும் எய்தப் பெறலாம் எனக்குறிப்பித்தற்கே "ஊனினை யுருக்கி" எனவும், தாய்கொடுத்த பால் ஊனைப் பெருக்குதலால் ஞானத்தைச் சுருக்குவதேயாகும், நீகொடுத்த ஆனந்தத் தேனோ ஞானத்தைப் பெருக்குவதாகின்றது எனக் குறிப்பிடற்கே "உள்ளொளி பெருக்கி" எனவும், தாயானவள் குழந்தைவீட்டின்உள்ளே யிருக்கும்போது மட்டும் அதனை யருகிருந்து காப்பாளன்றி அது செல்லு மிடங்களிலெல்லாம் உடன் சென்று பரிபாலிக்கும் தன்மையுடையளல்லள், நீயோ யான்எவ்வெவ்வுலகங்களில் எவ்வெப்பிறவிகளில் சென்றாலும் அங்கெல்லாம் என்னைவிடாது தொடர்ந்துவந்து காத்தருளுகின்றாய் எனக்குறிப்பிடுதற்கே "புறம்புறந்திரிந்த" எனவும்; தாயானவள் குழந்தைவேண்டியதை யெல்லாம் கொடுக்கத்தக்க வளல்லள், எல்லாப்பொருள்களும் உடையவளுமல்லள், நீயோ வேண்டுவார் வேண்டுவ வுதவும் வள்ளன்மையும் எல்லாப்பொருள் கட்கும் தலைவனுதற் றன்மையுமுடையாய் என்பதைக் குறிப்பிடுவதற்கே "செல்வமே" எனவும், தாயானவள் இவ்வுலகத்தும் வேண்டியவற்றை யளிக்கும் தரத்தின ளல்லளாகவே மறுமையின்ப மோக்ஷ வின்பங்கள் விஷயத்தில் அவளைப்பற்றி நினைத்தற்கு மிடமில்லை; இம்மை மறுமையின்பங்களை யெல்லாம் கொடுத்தருளுவது மட்டிலமையாது நிரதிசய இன்பத்தையும் கொடுத்தருளுந் தன்னிகரில்லாத் தலைவனுகின்றாய் நீ என்பதைக் குறிப்பிடுதற்கே ஏனை நாமங்களைக்கூறுது "சிவபெருமானே" எனவும், மார்ச்சால நியாயமாக நீயே என்னைத் தொடர்ந்து அருள் செய்பவனுகவும் இப்பொழுது மர்க்கட நியாயமாக நானே உன்னைத்தொடர்ந்து அழுத்தமாகப் பிடித்துக்கொண்டேன் என்பது விளக்கவே, "யானுனைத்தொடர்ந்து சிக்கெனப்பிடித்தேன்" எனவும், வலியவந்து பற்றியாட்கொள்ளுகின்றவனுகிய நின்னை நானேவந்து அழுந்தப் பிடித்துக்

கொண்டே னாதலின் இனி என்னைவிட்டு யாண்டும் எழுந்தருள முடியாது. எளியேனுள்ளமே கோயிலாக வீற்றிருந்தருள வேண்டுவது தான் என்பது விளக்கவே, "எங்கெழுந்தருளுவ தினியே" எனவும் கூறியருளினாரென்று ஒருவாறு பொருள் காணக்கிடக்கின்றது. இன்னும் இதன் பொருளருமைப் பெருக்கத்தை வல்லார் வாய்க் கேட்டுணர்க.

இதுகாறுங் கூறியவாற்றால் சிவவழிபாடு செய்தலால் இம்மை மறுமை வீடு ஆகிய எல்லாப்பலன்களுஞ் சித்திப்பனவாகுமென்பது பெறப்படுமாறு காண்க.

சிந்தனைநின் றனக்காக்கி நாயி னேன்றன்
கண்ணிணைநின் றிருப்பாதப் போதுக் காக்கி
வந்தனையு மம்மலர்க்கே யாக்கி வாக்குன்
மணிவார்த்தைக் காக்கியைம் புலன்க ளார
வந்தனையாட் கொண்டுள்ளே புகுந்த விச்சை
மாலமுதப் பெருங்கடலே மலையே யுன்னைத்
தந்தனைசெந் தாமரைக்கா டனைய மேனித்
தனிச்சுடரே யிரண்டுமிலித் தமிய னேற்கே.

கண்பனியரும்பக்கைகண்மொட்டித்தென்களைகணேயோலமென் றோலிட்
டென்பெலாமுருகுமன்பர்தங்கூட்டத் தென்னையும் புணர்ப்பவன் கோயில்
பண்பல தெளிதேன்பாடிநின்றாடப்பனிமலர்ச்சோலைசூழ்மொழுப்பிற்
செண்பகமரும்பும்பெரும்பற்றப்புலியூர்த்திருவளர் திருச்சிற்றம்பலமே.

நெறிப்படு மகத்திற் றூய்மை நிகரிலாத் தூய்மை யாகும்
புறத்தினிற் றூய்மை தூய்மை யன்றுளம் பொருந்த வுன்னித்
திறப்படச் சேவை செய்தல் சேவையாந் திபானி யாது
முறைப்படச் சேவை செய்தல் சேவையன் றுமான் முன்னில்.

புதியுமோ கத்தான் மானத்தான் மருளாற்பற்றியசார்பினாலுன்னைத்
துதிசெயா திகழ்வோ ரிகழுக கலைசைச் சுந்தரா சிதம்பரே சுரனே
மதிபொ திசடையாயாங்களெல்லோமும்வழிவழியுன்னடித்தொழும்பே
நிதியெனவுடையேமென்றுமிக்கருத்தேநிலைபெறச்செய்துகாத்தருளே.

கண்ணுவா ரேனுமுனைக் கைகுவியா ராயினந்த
மண்ணுவார் நட்பை மதியேன் பராபரமே.

முற்றிற்று.

# (3) அன்பு.

—:o:—

உள்ளமெனுங் கூடத்தி லூக்கமெனுந் தறிநிறுவி யுறுதி யாகத்
தள்ளரிய வன்பென்னுந் தொடர்பூட்டி யிடைபடுத்தித் தறுகட் பாசக்
கள்ளவினைப் பசுபோதக் கவளமிடக் களித்துண்டு கருணை யென்னும்
வெள்ளமதம் பொழிசித்தி வேழத்தை நினைந்துவருவினைகடீர்ப்பாம்.

அன்பு என்னுஞ் சொல்லை நாம் அடுத்தடுத்துக் கேட்கிறோம். சாதாரணமாக ஒருவர்க்கொருவர் கடித மெழுதுங்கால் தங்களன்பன் என்று எழுதுகிறார்கள். கற்றவர்கள் கல்லாதவர்கள் ஆகிய எல்லாரும் மிகச்சாதாரணமாக வழங்கி வரும் அன்பு என்னும் இச் சொல்லை நாம் பலமுறை கேட்டும் சொல்லியும் வருகிறோம். ஆனால் அந்த அன்பு எப்படி யுண்டாவது? எதற்கு உரியது? எத்தனை வகைப்படுவது? இதன் சக்தி என்ன? என்ற ஆலோசனை மட்டும் அநேகமாக நம்மவர் மனத்தில் வருவதில்லை. இவ்வாறு ஆலோசனை செய்து அன்பின் உண்மைத் தன்மையையும் உபயோகப்படுமுறையையும் செவ்வனே அறிந்து கொள்வோமானால் அதைப் பார்க்கினும் சிறந்த பொருள் வேறொன்றில்லையென்று உறுதி கூறலாம். ஒருவனுக்கு இம்மை மறுமை வீடு என்னும் மும்மைப் பயனும் தருதற்கு இந்த அன்பைத் தவிர வேறொன்று வேண்டுவதில்லை. ஆதலின் இதைப்பற்றி ஆராய்ச்சி செய்யப் புகுவாம்.

அன்பு எப்படி யுண்டாவது? நமக்கு .ஏதாவது துன்பம் வந்த போது அதை நீக்கி நன்மை செய்பவர்கள் யாரோ அவர்களைக் காணுந்தோறும் நினைக்குந்தோறும் நம் மனத்தில் ஒருவித விருப்பமாகிய பற்று (நெகிழ்ச்சி) உண்டாகும். நமக்கு நன்மை செய்தவர் அடுத்தடுத்து நம்முடன் பழகுவதாலும் அடுத்தடுத்து நன்மை செய்வதாலும் நமது பற்று நாளுக்கு நாள் அபிவிருத்தி யடையும். இந்தப் பற்று முதலில் தாயிடத்துச் செல்லும். தாயானவள் குழந்தை பசியால் வாடியதறிந்து பால் கொடுத்தும் பிணியால் வருந்துவதறிந்து மருந்து கொடுத்தும் தான் மருந்துண்டு பத்திய மிருந்தும் மற்றும் படாத பாடெல்லாம் பட்டும் குழந்தையைப் பரிபாலிக்கின்றாள். இதுபற்றி முதலில் தாயினிடத்துக் குழந்தையின் பற்றுண்டாகும். சிலநாட்செல்லவே நமக்கு நன்மை

செய்பவர்கள் இன்னும் சிலருள ரெனக்கண்டு தந்தையிடத்து அக் குழந்தையின் பற்றுச் செல்லும். அவ்வாறே செவிலித்தாயரிடமும் சகோதர சகோதரிகளிடமும் பந்துக்களிடமும் உபாத்தியாயரிடமும் சகபாடிகளிடமும் பற்றுண்டாகும். இவ்வாறு தனக்கெனக் கருதப்பட்ட ஆடையணி புத்தகமாதிய எல்லாப்பொருள்களிடத்தும் பற்றுண்டாகும். முடிவில் தாய் தந்தை முதலியவ ரெல்லாம் விட்டுத் தன்னையே கதியென்று நம்பிவந்த மனைவியிடத்தும் அம்மனைவி வயிற்றில் தன் அம்ஸமாகவே தோன்றிய மக்களிடத்தும் பாந்துசெல்லும். பின்னர் தாய் தந்தை மனைவி மக்களைச் சார்ந்த சுற்றத்தாரிடமும், பழக்க முடையாரிடமும் செல்லும். இவ்வாறு நாளுக்கு நாள் பலரிடத்தே பரவிச் செல்லும் இயற்கை உடையது அன்பு என்று தெரிகின்றோம். இங்ஙனம் யாதானுமோர் தொடர்பு பற்றித் தோன்றுவதாகிய மன நெகிழ்ச்சி தான் அன்பு என்று கூறப்படுவது. இது காட்சிப் பொருளன்று. இதனால் நிகழுஞ் செயல்களாலே தான் அறியப்படும்.

நளமகாராஜன் தன்னுருக்கரந்திருந்த காலத்தே தன் மக்களைக்கண்டவுடன் அவன் செயல்களை நினைத்தால் அன்பின் செயலை ஒருவாறு அறியலாம். மக்களைக் கண்டவுடன் தான் உருக்கரந்திருப்பதையும் வேறொரு அரசனுக்குத் தேர்ப்பாகனாகவந்திருப்பதையும் நாடு நகரங்களை யெல்லாம் இழந்து பிறர் பழிக்கும்படியான நிலையடைந்திருப்பதையும் கருதாமல் அவன் என்ன செய்தானெனில்

"மக்களைமுன் காணா மனநடுங்கா வெய்துயிரா
புக்கெடுத்து வீரப் புயத்தணையா—மக்காணீர்
என்மக்கள் போல்கின்றீர் யார்மக்க ளென்றுரைத்தான்
வன்மக் களியானை மன்" என்பதாலும்

"தோன்று வகைகரந்துந் தோன்றலைக்கண் டுண்ணெகிழ்ச்சி
தோன்றநின்றான் முன்புநளன் சோமேசா—தோன்றுகின்ற
அன்பிற்கு முண்டோ வடைக்குந்தா ளரர்வலர்
புன்கணீர் பூசல் தரும்" என்பதாலும் அறியலாம்.

இதன் தோற்றம் ஒருவாறு அறிந்தாம். இனி இது என்ன செய்வது? என ஆராய்வாம். இதன் செயலை வரையறையிட முடியாது. எதையும் செய்ய வல்லது. மேல், கீழ், அவனது, என்னது என்ற பேதத்தை அறவே களைந்து விடுவது. இல்லறம் நடை பெறுதற்கு முதற்கருவி இதுவே. எத்தனை பொன், பூமி, ஏவலர் இருப்பினும் இல்லறம் நடத்தும் தலைவனிடம் அன்பு இல்லையாயின் அது சிறிதும் நடவாது. உடலின் பயனாவது அன்புதான். அன்பு இல்லாத வுடம்பு மாமிசக்கட்டே யல்லது வேறில்லை. அறவோர்க்களித்தல் அந்தணரோம்பல் துறவோர்க் கெதிர்தல் விருந்தெதிர் கோடல் ஆதிய இல்லறத்துச் செய்யும் எல்லாச் செயலுக்கும் அன்பே முதலில் வேண்டப்படு பொருளாகும். அன்பு இல்லையேல் இவற்றில் ஒன்றும் நடை பெறாது. இதனை

"அன்பின் வழிய துயிர்நிலை யஃதிலார்க்
கென்புதோல் போர்த்த வுடம்பு

இடனும் பொருளு மேவலரு மிருந்தும் பயனென் னேவந்த
உடலின் பயனா கியவன்பை யுறாத விடத்து நொதுமலரும்
படர்செய் பகையு முறவாக்கும் பற்று மளிக்கு மனைமைந்தர்
தொடர்பின் வளர்க்கு மன்பதனாற் சோர்ந்து மன்பின் வழுவற்க

புறத்துறுப் பெல்லா மெவன்செய்யு மியாக்கை
அகத்துறுப் பன்பி லவர்க்கு." என்பவற்றாலறிக.

இன்னும் இந்த அன்பானது தனக்கென்னும் பற்றை வேரோடு களைந்து எல்லாப் பொருள்களையும் முடிவில் தன் உடல் உயிர்களையும் பிறர்க்குத் தத்தம் செய்விப்பது. இல்லறத்திலிருக்குங்கால் மனைவி மக்கள் உறவினராதியருடன் உறவு பாராட்டிச் சகல சௌக்கியங்களையும் அனுபவித்துப்பின்பு சுவர்க்க போகமோக்ஷங்களையும் அனுபவிக்கச்செய்வது. துறவறத்திற் சென்று ஐம்புலவொடுக்கத்தானும் விரதம்தவம்முதலியவற்றானும் உடலை வாட்டி வருந்திச்சுவர்க்கதி இன்பமட்டுங் கொள்ளுதலினும் இல்லறத்திலிருந்து இருமையின்பமுங்கொள்ளப் புரிதலால் மிக்க சிறப்புறுதற்குரியது. இதனாற்றான்

"அன்புற் றமர்ந்த வழக்கென்ப வையகத்
தின்புற்றா ரெய்துஞ் சிறப்பு."
"அன்பிலா ரெல்லாந் தமக்குரிய ரன்புடையார்.
என்பு முரியர் பிறர்க்கு" என்றார் தேவர்.

சிபிச்சக்கரவர்த்தி ஒரு புறவுக்காகத் தன்னுடலை யறுத் தறுத்துக் கொடுத்ததும், ததீசி முனிவர் இந்திரனுக்காகத் தன் முதுகந் தண்டைக்கொடுத்ததும் "அன்புடையார் என்பு முரியர் பிறர்க்கு" என்ற பொய்யா மொழியை வலியுறுத்துவனவாம். ஸ்ரீராமபிரான் வேடர்குலத்துக் குகனையும், வானர வர்க்கத்துச் சுக்கிரீவனையும், ராக்ஷத வமிசத்து விபீஷணனையும் சகோதர வுரிமை பாராட்டச் செய்தது யாது? இந்த அன்புதானன்றோ? இது மன நெகிழ்ச்சி யின் ஏற்றத்தாழ்வுக்கேற்ப தலையன்பு இடையன்பு கடையன்பு என மூன்று விதப்படும்.

தலையன்பாவது :—நாயகனது பெயர் குணம் முதலியவற்றைப் பிறன்கூறக் கேட்டவுடன் நாயகியானவள் மனங் குழைந்து இன்ப மெய்துநிலையாம்.

சீதாபிராட்டி இலங்கையில் அசோக மரத்தடியில் வசித்துத் துக்க மிகுதியால் தன்னுயிர்விடுப்பக் கருதியிருக்குஞ் சமயத்தில் அனுமன் சென்று ராமராம என்று கூறியவளவில் தனது நாயகன் பெயர் கேட்டலும் தன்னுயிர் நீத்தலை விடுத்து மனமகிழ்ச்சி யடைந்தாள் என்பதை

"அரக்கனே யாக வேறோ ரமரனே யாக வன்றிக்
குரக்கினத் தலைவ னேதா னுருக கொடுமை யாக
விரக்கமே யாக விங்ங னெம்பிரா னுமஞ் சொல்லி
யுருக்கின னுணர்வு தந்தா னுயிரிதி னுறுதி யுண்டோ"

எனக் கூறுமாற்றாற் றெளியலாம். அன்றியும்

திருஞானசம்பந்த சுவாமிகள் பொய்கைக் கரையில் அழுது கொண்டிருந்ததைக் கண்ணிற்கண்டு பால் கறந்தூட்டிய உமாதேவி யாரைப்பார்க்கினும் இதனைக்கேள்வியுற்றவுடன் முலைசுரந்தமங்கை யர்க்கரசியாரின் அன்பு சிறந்ததா மென்று விளங்கும்படி

சுரந்த திருமுலைக்கே துய்யதிரு ஞானஞ்
சுரந்துண்டார் பிள்ளையெனச் சொல்லச்—சுரந்த
தனமுடையா டென்பாண்டி மாதேவி தாழ்ந்த
மனமுடையா ளன்பிருந்த வாறு.—எனவும்,

இலைபடர்ந்த பொய்கை யிடத்தழுதல் கண்டு
முலைசுரந்த வன்னையோ முன்னின்—னிலைவிளம்பக்
கொங்கை சுரந்தவருட் கோமகளோ சம்பந்தா
விங்குயர்ந்தா ரார்சொ லெனக்கு.—எனவும் பெரியார் கூறிய ருளுவதும் காணலாம்.

இடையன்பாவது:—நாயகனைக் கண்ட விடத்தே நாயகியானவள் முன் நாயகன் மாட்டுத் தான் கொண்ட கோபஞ் சிறிதுந் தோன்றாமல் மகிழ்ந்து கூடுதலாகும். இதனை

"பேணுங்கொழுநற்பிழையனைத்தும்பிரிந்தபொழுதுநினைந்தவரைக்
காணும்பொழுது மறந்திருப்பீர் கனகக்கபாடந் திறமினோ."
என்பதாலறியலாம்.

கடையன்பாவது:—நாயகன் வந்து இன்சொற்கூறிக் கலந்தபோது நாயகியானவள் மனமுருகிப் பரவசப்படுதலாம். ஆகவே கேள்வியால் மனமிளகுவது தலையன்பெனவும், காட்சியால் மனமிளகுவது இடையன்பெனவும், ஸ்பரிசத்தாலும் இன்சொற்களாலும் உவப்பன செய்தலாலும் மனமிளகுவது கடையன்பெனவும் ஒருவாறு கூறத்தகும்.

இது செல்லும் இடம்பற்றி வேறுவகையாகவும் பகுக்கப்படும். அங்ஙனம் பகுக்கப்பட்டபோது வேறு பெயராற் கூறவும்படும்.

1. பாச அன்பு—இதுதான் இதுகாறுஞ் சொல்லப்பட்டபடி தாய்தந்தையராதிய தொடர்புடையாரிடத்து நமக்குளதாகும் மனநெகிழ்ச்சி. இச்சமயத்தில் இதற்குப் பெயர் பற்று.

2. பசுவன்பு—தொடர்புடையாரிடத்துச் சென்று சென்று பழகிய பாசவன்பானது வரவரப் பக்குவப்பட்டு முதிர்ந்து யாதொரு தொடர்புமில்லாத ஏதிலாரிடத்தும் பகைவரிடத்தும் எல்லா

வுயிர்களிடத்தும் ஒருபடித்தாகச் செல்லத் தொடங்கும். இந்த நிலையில் இரக்கம், கருணை, அருள் என்பனவாதிய பெயர்பெறும். சகல சீவர்களிடத்தும் செல்லும் மன நெகிழ்ச்சியாகிய அருளென் பது அன்பினது முதிர்ந்த நிலையேயாகும். காய் கனி என்பது போலச் சொல்வேறுபடுவதல்லது பொருள் வேறுபாடில்லை. நட்பு பகை நொதுமல் என்னும் பேதம் பற்றாது செல்லும் நிலையாதலின் இதனைத் துறவறத்திற்குச்சிறந்த வுரிமைப்படுத்திக் கூறுவர். அன் பின் முதிர்ச்சியே யருளாதல் பற்றி அன்பைத் தாயாகவும் அருளைக் குழவியாகவுங் கொண்டு "அருளென்னு மன்பீன் குழவி" என்பர் பொய்யில் புலவர். இது துறவறத்திற்கு உரியதென்ப தால் இல்லறத்திற்கு வேண்டாவோ வெனின் வேண்டப்படுவதே யாம் என்பதை

"அன்பும் அருளும் தாங்கி யின்சொலின்
விருந்து புரந்தந் தருந்தவர்ப் பேணி"

என இல்லறத்தார்க்கும் வேண்டுமெனக் கூறுமாற்றாலறிக. இல் லறத்திற்கு எல்லாப் பொருள்களிலும் அன்பே சிறந்த கருவியாதல் போல் துறவறத்திற்கு விரத செப தவ முதலிய எல்லாவற்றினும் அருளே சிறந்த கருவியாதல்பெறப்படும். முற்றத்துறந்த தாயுமான வர்

"எவ்வுயிரு மென்னுயிர்போ லெண்ணி யிரங்கவுநின்
றெய்வ வருட்கருணை செய்வாய் பராபரமே." என்றருளினர்.

"யான்பெற்ற இன்பம் பெருக விவ்வையகம்" எனவும், "தேகம் விழுமுன் புசிப்பதற்குச் சேர வாருஞ் செகத்தீரே," எனவும் கூறு மாற்றால் எல்லாவுயிர்களும் இன்பமடைய வேண்டும் என்று சகல வுயிர்களிடத்தும் பரந்து செல்லுவதாகிய கருணையே பசுவன்பாம்.

பாச அன்பாகிய பற்று இல்லறத்தார்க்குச் சிறப்புரிமையும், பசுவன்பாகிய கருணை துறவறத்தார்க்குச் சிறப்புரிமையும் கொண் டுள்ளன. இந்த அருளின் தன்மையை

ஆருயிர் யாதொன் றிடருறி னுங்கதற்
கோருயிர் போல வுருகி யுயக்கொள்ள

நேரி னதுமுடி யாதெனி னெஞ்சகத்
தீர முடைமை யருளி னியல்பே. என்பதாலறியலாம்.

பிறவுயிர்கட்கு இடுக்கண் செய்யாமையும், பிறவுயிர்கட்கு வரும் துன்பத்தை நீக்கலும், பிறவுயிர்கட்கு நன்மை செய்தலும் அருளின் செயல்களாகக் காணப்படும். விரிக்கிற் பெருகும். இதன் விரியைப் பின்னர் விளக்குவாம்.

3. பதியன்பு:—இது நூலுணர்ச்சியானும் குரு உபதேசத்தானும், பூர்வ புண்ணிய வசத்தானும், இறைவன் திருவருள் விசேடத்தானும் கடவுளிடத்துச் செல்வது. இதற்குத்தான் பக்தி என்னும் பெயர். குருவினிடத்தும் சாபாநுக்கிரக சீலரான தவசிரேஷ்டரிடத்தும் செல்லுங்காலும் உயர்வு பற்றிப் பக்தி யென்று கூறலும் இழுக்காது. பிஞ்சு, காய், கனி என்பது போல பற்று, இரக்கம், பக்தி எனப் பெயர் பெறுதலடையினும் அன்பு அல்லது மனம் நெகிழ்தல் என்ற மூலம் ஒன்றுதான். ஆதலின் அன்பு என்ற பதத்தைப் பொதுப் பெயராகவும், பற்று, இரக்கம், பக்தி என்ற பெயர்களைச் சிறப்புப் பெயர்களாகவும் கொள்ளவேண்டும்.

முதலில் தனக்கு நன்மை செய்பவர்கள் எனக்கருதிச் சென்ற மனப்பற்றுனது தாய் தந்தை யுறவினராதிய பலர்பாற் சென்று பழக்கமிகுதியால் தனக்கு நலஞ் செய்தவர்கள் செய்யாதவர்கள் என்ற பாகுபாட்டைக் கடந்து யாரொருவர் வருந்தக் காணினும் அவரிடத்து இரக்க மெய்தித் தானே முந்தி யுபகரிக்கப் புகும். இவ்வாறு புகுந்து வருங்கால் நூலுணர்ச்சியால் அறிவு முதிர்ச்சி பெற்று "தந்தையார் தாயார் உடன்பிறந்தார் தாரமார் புத்திரரார் தாந்தா மாரே, வந்தவா றெங்ஙனே போமா றேதோ" என ஆராய்ச்சி நிகழும். அது நிகழவே தாய் தந்தையராதியரன்பானது நீர்க்குமிழி போல நிலையற்றதான உடம்பின் தொடர்ச்சியா லுண்டானதாதலின் இவ்வுடம்பொழியவே அதுவும் ஒழியும். "அன்னையெத்தனை யெத்தனை அன்னையோ அப்ப னெத்தனை எத்தனையப்பனோ" என்றவாறு இவரும் அளவிடற் பாலரல்லரே. அன்றியும் நாம் தீவினைப் பயனையனுபவிக்குங்கால் இவ்வுறவினரும் பகைவராகின்றனர், நாம் நல்வினைப் பயனை யனுபவிக்குங்கால் இவரல்லாத பகை

வரும் நோதுமலரும் உறவாகின்றனர். மேலும் இவர் நமக்கினிய வராகி நிற்பதும் தம்பயன் குறித்தன்றி எம்பயன் குறித்தன்றே. ஆதலின் இவர் நமக்கு இதஞ் செய்தற் குரியரல்லர். ஏனைய பொன் பூமி வாகனாதி சகல பொருள்களும் நமக்குப்பயன் செய்யச் சக்தியற்றனவே. இவையெல்லாம் பொய்த் தோற்றத்தனவேயா கும். ஆகவே நமக்கு நாமே இனியம். நம்மை நாம் ஒருக்காலும் பகைத்திலம். நமக்கு நன்மை யுண்டாக நாம் எப்போதும் நாடு வம். ஆதலின் நாமே நமக்கு இனியம் எனக்கொள்ளின் அதுவும் பொருந்தாது. என்னை? கேவலாவத்தையில் ஆணவமலமறைப்பால் அறிவுந் தொழிலும் விளங்கப் பெறுமையாலும், சகலாவத்தை யில் அறிவுந் தொழிலும் சிறிது விளங்கப்பெறினும், அவை சிற்றறி வுஞ் சிறுதொழிலுமேயன்றி முற்றறிவு முற்றுத்தொழிலு மன்மை யாலும், நமக்கு நன்மையிது தீமையிதுஎன அறிந்து நினைந்தவாறு நன்மை யடையக் கூடாமையானும் மற்றும் பல காரணங்களாலும் நமக்கு நாமும் இனியமல்லோம். ஆதலின் முற்றறிவும் முற்றுத் தொழிலும் பேரருளுமுடைய இறைவர் ஒருவரே நமக்கு இனிய ராதல் வேண்டும். அவரே நமக்கு நன்மை செய்பவர். அவரைத் தவிர வேறு பொருளில்லை. என ஆராய்ச்சி வகையானறிந்து தெளிந்து

> "கனியி னுங் கட்டி பட்ட கரும்பினும்
> பனிம லர்க்குழற் பாவைநல் லாரினும்
> தனிமு டிகவித் தாளு மரசினும்
> இனியன் றன்னடைந் தார்க்கிடை மருதனே
>
> என்னின் யாரு மெனக்கினி யாரில்லை
> என்னி னும்மினி யானொரு வன்னுளன்
> என்னு ளேயுயிர்ப் பாய்ப்புறம் போந்துபுக்
> கென்னு ளேநிற்கு மின்னம்ப ரீசனே" என்னும் பெரியார்

திருவாக்கைக் கடைப்பிடித்து இறைவனிடத்தே செலுத்தப்படும் அன்புதான் பக்தியெனப்படுவது.

இத்தகைய பக்தியானது மனத்தின் பரிபக்குவ பேதத்தால் நான்கு வகைப்படும்.

(1) மந்ததரபக்தி:—அரக்கானது வெயிலில் இளகுவது போல்வது. சிவசரித்திரங்களைப் பலகால்கேட்டும் சிவனடியாரோடு பலகாற் பழகியும் வருதலால் மனத்தே தோன்றும் சிறு நெகிழ்ச்சியே மந்ததர பக்தி யெனப்படும்.

(2) மந்தபக்தி:—மெழுகு வெயிலில் இளகுவது போல்வது. சிவசரித்திரங்களைச் சிலகாற் கேட்டும் சிவனடியார்களைச் சிலகாற் கண்டு பழகியும் வருதலால் மனத்தே தோன்றுவதாகிய நெகிழ்ச்சியே மந்தபக்தியெனப்படும்.

(3) தீவிரபக்தி:—நெய் சூடுபெட்டவுடன் இளகுவது போல்வது. சிவசரிதங்களைக் கேட்குந்தோறும், சிவனடியார்களைக் காணுந்தோறும், சிவசாதனங்களைப் பூணுந்தோறும், சிவாதிக்கங்களை எண்ணுந்தோறும் மனத்தே சட்டெனத் தோன்றுவதாகிய நெகிழ்ச்சியே தீவிர பக்தி யெனப்படும்.

(4) தீவிரதரபக்தி:—தைலதாரைபோல்வது. எந்தக்காலத்தும் இடையறவுபடாது மனம் இறைவனிடத்தே செல்லவும், கண்கள் இறைவனடியார்களைக் காணவும், செவிகள் சிவசரித்திரங்களைக் கேட்கவும், இவ்வாறே எப்பொழுதும் இறைவனிடத்தே எல்லா இந்திரியங்களும் பற்றி நிற்கும் நிலையே தீவிரதரபக்தி யெனப்படும்.

"ஐந்துபே ரறிவுங் கண்களே கொள்ள அளப்பருங் கரணங்க ளுன்குஞ், சிந்தையே யாகக் குணமொரு மூன்றுந் திருந்துசாத் துவிகமே யாக, இந்துவாழ் சடையா ராடுமா நந்த வெல்லையி றனிப்பெருங் கூத்தின், வந்தபே ரின்ப வெள்ளத்துட் டிளைத்து மாறிலா மகிழ்ச்சியின் மலர்ந்தார்."

என்ற வாறு நிற்கும் நிலையே தீவிர தரபக்தியாம்.

இத்தகைய பக்தியானது பற்பல பிறவிகளிலே கலைஞானத்தால் உலகத்தை யுவர்த்து எல்லாப் பற்றையும் விட்டு இறைவனிடத்தே மனத்தைச் செலுத்தி வருதலால் சிவபுண்ணிய மேலிட்டு இறைவன் திருவருட்குப் பாத்திரமாகிப் பூரணப்படவேண்டும்.

இதனை "அவனருளாலே யவன்றாள் வணங்கி" எனவும், "ஆங்கவ னருளாற் பத்திநன் குண்டாம் பத்தியர் லவனரு ளுண் டாம், வீங்கிய பத்தி பற்பல பிறப்பில் வேதங்க ளுரைத்திடும் படியே, தீங்கறு கரும மியற்றிய பலத்தாற் சிவனருள் செய்திட வருமால், ஓங்கிய பத்தி யாற்சிவ தரும மொழிவறப் புரிந்திடப் படுமால்" என்வும்,

"அற்றுமன் றறியச் சுருங்கயா னுரைப்ப னுபிழை பாகன்வார் கழ லிற், றெற்றென வறிவாற் பத்திமை யெய்தல் வேண்டுமாற் சிறந்த பத்திமையான், மற்றிணை யில்லா முத்தியெய் திடுமான் மாசிலா தாயபத் திமையு, முற்றிழை பாக னருளினு லெய்தல் வேண்டு மான் மொழிந்திடுங் காலே."

எனவும் வரும் பெரியார் திருவாக்குக்கள் வலியுறுத்தா நிற்கும்.

பத்தியென்பது முதலில் நூலாராய்ச்சியாற் றெளிந்து செய்ய ப்படுவதாயின் கண்ணப்பநாயனுர் ஒப்புயர்வற்ற பத்தி யெய்தப் பெற்றவரன்றே, அவர் நூலாராய்ச்சி செய்ததாகக் கேட்டிலம், ஆதலினிம்முறை பொருந்துமா றில்லையாலோ எனின்? அற்றன்று. இவர் பூர்வ ஜன்மத்தில் பாண்டவ ரைவருள் நடுமணிபோன்ற அருச்சுனவதார மூர்த்தியாய் கண்ணபிரானிடத்தே அறநூற் பொருள்களைக் கேட்டுத் தெளிந்து நற்றவ சீலராகி யிருந்தவ ராத லின் அதன்றொடர்ச்சி இச்சன்மத்தில் வந்து கைகூடியதென்பதை

"முன்புசெய் தவத்தி னீட்ட முடிவிலா வின்ப மாய
அன்பினை யெடுத்துக் காட்ட வளவிலா வார்வம் பொங்கி
மன்பெருங் காதல்கூர வள்ளலார் மலையை நோக்கி
யென்புநெக் குருகி யுள்ளத் தெழுபெரு வேட்கை யோடும்"

என்னும் சேக்கிழார் சுவாமிகள் திருவாக்காற்றெளிக. அன்றியும்,

"வீங்கிய பத்தி பற்பல பிறப்பில் வேதங்க ளுரைத்திடும் படியே தீங்கறு கரும மியற்றிய பலத்தாற் சிவனருள் செய்திட வருமால்"

என முன்னர் எடுத்துக் காட்டியதும் கவனித்தற் பாலதாம்.

இனி இதன் சக்தி மிகவும் பெரிது. உலகமுழுதும் தன்வசப் படுத்துவது. சகல நன்மைகளையும் தருவது. சிறிதும் பேதமற் றது. இறைவனை விரைவிற் கூட்டுவிப்பது. இறைவனுந் தானும் அபேதமாகுந் தன்மையைத் தரத்தக்கது. சுருக்கிச் சொல்லுமிடத்து எல்லாப் பேற்றையும் எளிதிற் றருவது இதுவேயாம். இந்த உண்மையை அடியில் வரும் திருப்பாசுரங்க ளினிது விளக்குவன வாகும்.

ஆரேனு மன்புசெயி னங்கே தலைப்படுங்காண்
ஆரேனுங் காணு வரன்.

அன்பு சிவமிரண் டென்ப ரறிவிலார்
அன்பு சிவமாவ தாரு மறிகிலர்
அன்பு சிவமாவ தாரு மறிந்தபின்
அன்பே சிவமா வமர்ந்திருப் பாரே.

கருமமா தவஞ்செ பஞ்சொல் காசறு சமாதி ஞானம்
புரிபவர் வசம தாகிப் பொருந்திடோம் புரையொன் றின்றித்
திரிவறு மன்பு செய்வோர் வசமதாச் சேர்ந்து நிற்போம்
உரைசெய்வோ மவர்மு னெய்தி யவருளத் துறைவோ மென்றும்.

மாறிநின் றென்னை மயக்கிடும் வஞ்சப் புலனைந்தின் வழியடைத் தமுதே, யூறிநின் றென்னு ளெழுபரஞ் சோதி யுள்ளவா காணவந் தருளாய், தேறலின் றெளிவே சிவபுரத் தரசே திருப்பெருந் துறையுறை சிவனே, யீறிலாப் பதங்கள் யாவையுங் கடந்த இன்பமே என்னுடை யன்பே.

இன்னும் பத்தியின் பெருமையைக் கூறப்புகின் மிகவிரியும். சிவானந்தலகிரியில் கூறப்பட்ட ஒரு விஷயத்தை மட்டுங்கூறுவாம். வழியிலிடப்பட்ட செருப்பானது பசுபதியின் றிருமேனிக்குக் கூர்ச்சமாகின்றது. வாய் நிறைந்த நீரால் நனைத்தல் புரப்பகைவருக்குத் திவ்வியாபிஷேக மாகின்றது. சற்றே புசிக்கப்பட்ட மாமிச சேஷத்தின் கவளமானது திவ்யோபகார மாகின்றது. வனசரன் பக்த சிரேஷ்டனாகின்றான். பத்தி எதைத்தான் செய்கின்றலது?

பக்தியின் பெருமைக்கு இதைவிட வேறு கூறவும் வேண்டுமோ? இக்கண்ணப்ப நாயனார் செய்கை முற்றும் உலகத்தார்

வெறுக்கத்தக்கனவாம். இவ்வாறே சண்டீசநாயனார் தந்தை காலை வெட்டியதும் வெறுக்கத்தக்கதாம். இங்ஙனமே பக்தி மேலிட்டார் செயல்கள் ஒப்பத் தக்கனவா யில்லையே. இவர்கட்கெல்லாம் இறைவ னருள்புரிந்தமை பொருந்துமா? எனக் கருதவேண்டாம். இப்பெரியோர்களெல்லாம் பசுபோதங்கெட்டுச்சிவபோத மேற்பட்டு நின்ற புண்ணிய மூர்த்திகளே யாதலின் இவர்கள் செய்வன யாவும் பரம கருணாநிதியாகிய சிவபெருமான் திருவுள்ளத்துக்கு உகந்தனவேயாம். இறைவர் திருவுள்ளத்துக்கு உவப்பான செயல்களைப் பற்றி உலகத்தார்கள் உவந்தாலென்? வெறுத்தாலென்? யானென்னும் அகப்பற்றும் எனதென்னும் புறப்பற்றும் அற்று அவனே தானாய் நிற்கும் இந்த மஹான்களை விதிவிலக்குகள் பந்திக்கமாட்டாவென்க. இதனை

தாதையைத் தாளற வீசிய் சண்டிக்கு மண்டத் தொடுமுடனே
பூதலத் தோர்கள் வணங்கப் பொற்கோயிலும் போனகமும்மருளிச்
சோதி மணிமுடித் தாமமு நாமமுந் தொண்டர்க்கு நாயகமும்
பாதகத் துக்குப் பரிசுவைத் தானுக்கே பல்லாண்டு கூறுதுமே.

என்பதாலறிக. அன்றியும்

கண்ணப்பநாயனார் காளத்திநாதர் முன்பு நின்று தம் வாய் நீரால் அபிஷேகஞ் செய்து தமது தலையிலுள்ள மலரால் அலங்கரித்து தாம் சுவைத்துப்பார்த்த ஊனை நிவேதித்துச் சென்றபோது இந்த அலங்கோலத்தைக் கண்டு மனம் இடிந்து பதைத்த சிவகோசரியார் ஆறுதலடையும்படி காளத்தி நாதர் சிவகோசரியாருக்குக் கட்டளையிடு மிடத்து

அவனுடைய வடிவெல்லா நம்பக்க லன்பென்றும்
அவனுடைய வறிவெல்லா நமையறியு மறிவென்றும்
அவனுடைய செயலெல்லா நமக்கினிய வாமென்றும்
அவனுடைய நிலையிவ்வா றறிநீயென் றருள்செய்வார்.

எனத் திருவாய் மலர்ந்ததும் பிறவும் நோக்கினால் உண்மையன்பின் பெருமை தெள்ளிது புலனாகும்.

காரைக்காலம்மையார் அன்பு கசிந்து என்புருவம் பெற்றுக் கயிலைக்குச் செல்லுங்கால் அதுகண்ட உலகத்தார் ஓ ஓ ஈதென்ன பேய்வருகிறதென்று திகைப்பும் பயமுங் கொண்டோடுவாராக அம்மையார் இறைவர் என்னை அறிவராயின் உலகத்தார் அறிந்தாலென் அறியாதொழியிலென்? என்னை யறியவேண்டியவர் இறைவரொருவரேயெனக்கூறிச் செல்லுந் திடபக்தியைப்பாராட்டாதாருமுண்டோ?

கண்டவர் வியப்புற் றஞ்சிக் கையகன் றோடு வார்கள்
கொண்டதோர் வேடத் தன்மை யுள்ளவா கூறக் கேட்டே
அண்டர்நா யகனு ரென்னை யறிவரே லறியா வாய்மை
எண்டிசை மாக்கா ளுக்கியா னெவ்வுரு வாயென் னென்பார்.

என்னுந் திருவிருத்தம் இவண் சிந்தனைக்குரிய தொன்றும்.

உண்மை யன்புடையவர்கள் எக்குலத்தவராயினும் எவ்வேடத்தவராயினும் எத்தொழிலினராயினும் அவர் இறைவனோடு இரண்டறக் கலப்பதாகிய முத்தி யின்பத்தைப் பெறுவர்.

மனத்தினிடத்து மெய்யன்பு கொள்ளாதவர் எந்தவுயர் குலத்திற் பிறப்பினும் எத்தனை சிவசாதனங்களைப் பூணினும் எத்தனை தீர்த்தங்களால் அபிஷேகம் செய்யினும் எத்தனை கனிவர்க்கங்களை அமுதுவர்க்கங்களை நிவேதிப்பினும் எத்தனை தோத்திரங்களைப் பாடினும் எத்தனை மந்திரங்களைச் செபிப்பினும் எத்தனை தானதர்மங்களைச் செய்யினும் எத்தனை சிவாலயங்களைக் கட்டுவிப்பினும் அவரிடத்தில் இறைவன் றிருவருள் சேர்தலில்லையென்பது அடியில் வரும் பிரமாணங்களா லறியப்படும்.

ஆசறு மனத்தெழு மன்பை யன்றியே
பூசனை யுவக்கிலன் புராரி சென்னிமேல்
வீசுறு திரையினு மிக்க தோசொலாய்
ஊசல்கொண் மனமுடை யொருவ னுட்டுநீர்.

என்பே விறகா விறைச்சி யறுத்திட்டுப்
பொன்போ லெரியிற் பொரிய வறுப்பினும்
அன்போ டுருகி யகங்குழை வார்க்கன்றி
என்பொன் மணியினை யெய்தவொண் ணாதே.

நெக்கு நெக்கு நினைப்பவர் நெஞ்சுளே
புக்கு நிற்கும்பொன் னார்சடைப் புண்ணியன்
பொக்க மிக்கவர் பூவுநீ ருங்கண்டு
நக்கு நிற்ப னவர்தமை நாணியே.

அன்பேயென் னன்பேயென் றன்பா லழைத்தழைத்திட்
டன்பேயன் பாக வறிவழியும்—அன்பன்றித்
தீர்த்தந் தியானஞ் செபதவங்கள் செய்யுமது
சாத்தும் பழமன்றே தான்.

தேவ தேவன்மெய்ச் சேவகன் றென்பெருந்துறை நாயகன்
மூவ ராலு மறியொ ணாமுத லாய வானந்த மூர்த்தியான்
யாவ ராயினு மன்ப ரன்றி யறியொ ணாமலர்ச் சோதியான்
தூய மாமலர்ச் சேவ டிக்கணஞ் சென்னி மன்னிச் சுடருமே.

எனப்பலவாம். எல்லாவுயிர்களும் விரும்பற்பாலன இகபர இன்பங்களேயாம். அவ்வின்பங்களை யருள்புரியு முதல்வன் உயிர்க்குயிராகிய சிவபிரானேயாம். சிவபிரானையறிந்து அடைவார்க்கு மனவாக்குக் காயங்கள் உண்மைப்பத்தி வழியில் வருவனவாம். அத்தகைய பத்திவழி வருவார்கட்கு சிவனடியார்கள் திருவேடமே சிவபெருமான் றிருமேனியாக நின்று துன்பந்தவிர்த்து இன்பந் தந்தருளும் எனவும், அதனால் சிவபத்தரிடம் அன்பு செலுத்த வேண்டுவது முக்கியமானதெனவும் கூறுவார் பெரியோர். இதனை

எனைத்துயிர்க்கு முறுதியிக பரமென்ப வவைகொடுப்பா னெல்லாந் தானு, யனைத்துயிர்க்கு முயிராகு மரனென்ப வவனறிவார்க் கங்கம் வாக்கு, மனத்துறுமெய்ப் பத்திவழி வருமென்ப வப்பத்தி வழிநிற் பார்க்கு, வினைத்துயர்தீர்த் திடவெடுத்த வடிவென்ப தவ னடியார் வேட மன்றோ.

அன்பர்பணி செய்யவெனை யாளாக்கி விட்டனையேல்
இன்பநிலை தானேவந் தெய்தும் பராபரமே.

என்னும் இத்தகைய மெய்ஞ்ஞானிகள் திருவாக்கைக் கடைப்பிடித்து இறைவனிடத்தும் அடியாரிடத்தும் அன்பு செலுத்திப் பேரானந்தப் பெருவாழ்வு பெறுவோமாக.

# (4) திருநீற்றின் பெருமை.

திருநீறுதரிக்கும் சைவ சமயிகள் பல்லாயிரக்கணக்காயுள்ளா ரெனினும் திருநீறு என்பது யாதெனவினவில் அது நெற்றியிற்ற ரித்துக்கொள்ளும் விபூதி யென்றும், சாணியைச் சுட்டெடுத்தது என்றும் விடைகூறுபவரே பலராவர். இந்நீறு எப்படியுண்டாயி ற்று? இதற்குரிய பெயர்கள் என்னபொருளை யுடையன? இது எத் தனை வகைப்படும்? இதன் நிறபேதங்களெவை? இதை வைத்திருக் கத்தக்க பாத்திரங்களெவை? இதை எவ்வாறு தரிக்கவேண்டும்? எவ்வெந்நீறு எவ்வெவர்க் குரிமை பெறும்? இதன் தத்துவங்க ளென்ன? இதனால் அடையும் பயன்யாது? இதன் பிரத்தியட்ச சக்தி யாது? மற்ற மதத்தினர்களில் இதைக் கொண்டாடுபவ ருண்டோ? என்பனவாதிய கேள்வி கேட்பின் சரியான விடைகூறு வார் மிகச் சிலரேயாவர். ஆதலின் நம்மவர் யாவரும் எளிதில் அறிந்துகொள்ளுமாறு திருநீற்றின் பெருமையை இவண் விரித்துக் கூறுதும்.

(1) **தோற்றம்:**—சர்வசங்காரகாலத்திலே சிவபெருமான் தமது நெற்றிக்கண் ணெருப்பினாற் சகல பொருள்களையும் சாம்பலாக்கி அச்சாம்பல் தமது திருமேனியில் தோயுமாறு நிர்த்தனஞ் செய்து முடிவில் முன்போல் உலகத்துள்ள யாவற்றையும் தோற்றுவித்துத் தம் திருமேனியிற் றோய்ந்த சாம்பலைத் தம் திருக்கரத்தால் வழித் துத் தமது வாகனமாகிய ரிஷபத்தின்முன் எறிந்தனர். அந்த ரிஷ பம் அச்சாம்பலை யுட்கொண்டு தன் வீரியத்தைப் பசுக்களிடம்விட் டது. அதனால் அப்பசுக்களின் சாணமாகிய கோமயம் திருநீற்று க்கு மூலமாகிச் சிறந்ததாயிற்று. இதனை:—

"சான்ற நூல் புகல் சர்வசங் காரகா லத்திற்
றோன்றும் யாவுந்தன் னுதல்விழி யங்கியாற் றொலைத்து
நான்ற வார்குழை பாகனம் மயானத்து நடித்தா
னொன்ற நீறெலாந் தோய்ந்திட மேனியி லவற்றை"

"திருக்க ரத்தினால் வழித்தெறிந் தனன்றிகழ் விடைமுன்
விருப்பி னலவை யயின்றந்த விடைதன்வீ ரியத்தை
யருப்ப மீக்கொளப் பசுக்கள்பால் விட்டதப் பசுக்கள்
பெருக்கு கோமயம் விபூதிக்கு விசேடம்பே சினவால்"

எனவரும், கடம்பவனபுராணப் பாடல்களாற் காண்க. அன்றியும் சர்வசங்கார முடிவில் எல்லாத்தேவர்களையும் சகல அண்டங்களையும் சிவபெருமான் தமது நெற்றிக்கட் பொறியினாலே நீறாக்கி, அச்சாம்பலைத் தமது திருமேனி முற்றும் பூசிக்கொண்டமையால், சகலதேவர்களும் அவயவங்களில் வசிக்கப்பெற்ற பசுவின் சாணத்தைப் பொடித்த திருநீற்றை அதற்கறிகுறியாக யாவரும் பூசிக்கொள்ளும்படி விதித்தருளினர். எனவுங் கூறுவர். இதனை:—

"விண்ணவ ருடல முழுவதும் பொடித்த வெண்பொடி யணிந் தரு ளிறையப், பண்ணவர் முழுது முறுப்பினு ளடங்கும் பசுமயம் பொடித்தவெண் ணீறு,புண்ணியம் வளர்க்கு முயிர்க்கெலாந் தரிப்பப் புகன்றனன்" எனவரும் தணிகைப் புராணத்தாற் காண்க.

(2) இதன் பெயர்கள்:—பூதி, பசிதம், சாரம், காப்பு, நீறு என்பனவாதிய பலவாம். இவற்றின் பொருள்:—பூதி—ஐசுவரியத்தைத்தருவது. பசிதம்-சிவத்துவத்தைவிளக்குவது. சாரம்-(உயிர்களின்) மலத்தைக் கழுவுவது-காப்பு (ரக்ஷை) பேய்பிணியாதியவற்றால் வருந்துன்பங்களை நீக்கிக்காப்பது. நீறு-பாவங்களைத் தகிப்பது. இங்ஙனமே இதன் பெயர்கள் ஒவ்வொன்றும் ஒவ்வொரு பொருளைத்தருவனவாம்.

"தொகுத்த வாழ்க்கையாற் பூதியும் சோதிமேற் றாலாற்
பகுத்த நூல்புகல் பசிதமும் படுமலம் பிணிமா
சுகுத்த லாலுயர் சாரமுங் காத்தலாற் காப்பு
மிகுத்த தீதுநீற் றிடுதலா னீறும்பேர் விளம்பும்"

எனவரும் அப்புராணக் கவியானே யிதனை யுணர்க.

(3) இதன்வகை:—இது—"வைதிகநீறு, லௌகிகநீறு" என இருபெரும் பிரிவையுடைத்தாகும். இவற்றுள், வைதிகநீறு-"புராதனி, சத்தியோசாந்த" என இருவகைப்படும். "புராதனி" யென்பது பிரமன் யாககுண்டத்தி லுண்டாவது. "சத்தியோசாதை" யென்பது அந்தணர்கள் யாக குண்டத்திலுண்டாவது. இதனை:—

"தகுபுரா தனியே யென்றுஞ் சத்தியோ சாதை யென்று
மிகலில்வை திகவெண் பூதி யிருதிற னாகு நேரே

புகழ்தரு வேத ஞேம குண்டத்துப் பூப்ப தொன்று
பகர்தரு மறையோ ரோம்பு மங்கியிற் படுவ தொன்றும்”

எனவரும், பேரூர்ப் புராணத்திருவாக்கா னறிக.

லௌகிகநீறு--சைவநீறு, அசைவநீறு என இருவகைப்படும், அவற்றுள் சைவநீறு-சிவதீக்கையுடையவர்களணியத்தக்கது. இது-கற்பம், அநுகற்பம், உபகற்பம் என மூன்று பகுப்பினையுடையதாகும். இவற்றுட் கற்பமாவது:—ஈன்றணிணியதும், ஈனுததும், சூலுடையதும், இருகன்றீன்றதும், முதிர்ந்தகன்றுடையதும், கன்றிழந்ததும், நோயுடையதும், மலடும், மலந்தின்பதும், வளைந்தகாதுள்ளதும், கொம்பொடிபட்டதும், வாலற்றதும், கிழமும் ஆகிய இவை போன்ற குற்றங்களில்லாது, வயலில் நெல்லந்தாள் மேய்ந்துவரும் பசுக்களின் சாணத்தை பங்குனிமாசத்து அட்டமி, சதுர்த்தசி, பௌரணை யென்னும் திதிகளிலே, பூமியில் விழாமுன்னர் சத்தியோசாதமந்திரங்கூறித் தாமரையிலையில் ஏற்று வழும்பு நீக்கி, வாமமந்திரமோதி கௌவியம் வார்த்து, அகோரமந்திரம் ஓதிப் பிசைந்து, தற்புருடமந்திரமோதி உருட்டி, ஓமத்தீயாகிய சிவாக்கினியில்வேகவைத்து, நன்றாகவெந்து சூடுமுழுவதுந்தணிந்து ஆறிய பின்பு ஈசானமந்திரமோதி யெடுக்கவேண்டும். இங்ஙனம் எடுத்த நீற்றை புதுவஸ்திரத்தில் வடிகட்டிப் புதுப் பாண்டத்திலடக்கி, காயத்திரிமந்திர செபஞ்செய்து சுத்தமான இடத்தில் வைத்து மல்லிகை முல்லைபாதிய நல்ல வாசனைமலர்களைப் பெய்து புதுவஸ்திரத்தால் கவசம் செய்து வைத்துக் கொள்வதாம். இங்ஙனம் அன்றெடுத்த *கோமயத்தை அன்றே நீற்றிக் கொள்வதன்றி முற்கூறியாங்கு திரள் செய்த சாணத்தை வெயிலில் உலர்த்திக் காய்ந்தபின் மேற் கூறியவாறு சிவாக்கினியி லிட்டெடுத்துக் கொள்வதும் கற்பமேயாகும்.

அநுகற்பமாவது:—வனத்திலும் பசு மந்தையிலும் தானேவிழுந்து உலர்ந்துகிடக்குஞ் சாணத்தை, சித்திரை மாசத்திலே எடுத்து வந்து முன்சொல்லிய முறைப்படியே சிவாக்கினியிலிட்டு விளைவித்து எடுத்து வைத்துக் கொள்வதாம்.

---

* கோமயம் - பசுவின் சாணம்.

உபகற்பமாவது:—வனத்தில் காட்டுத்தீயால் இயல்பாக வெந்துகிடக்கும் சாம்பலை யெடுத்துவந்து பஞ்சகௌவியம் விட்டுப் பிசைந்து உருட்டி முன்சொல்லிய முறைப்படியே சிவாக்கினியிலிட்டு விளைவித்து எடுத்துவைத்துக் கொள்வதாம். இவற்றின் விதிகளை:—

இலௌகிக பூதி தானு மிருதிற னுகும் பாவ
முலைவுற வாற்றுந் தீக்கை யுற்றவர்க் குரிய தாக
நிலைபெற நிறுவுஞ் சைவ நீறென்றுந் தீக்கை யின்றி
யலைவுறு மாந்தர் தங்கட் கடுத்திடு மசைவ மென்றும்.

கற்பமநு கற்பமுப கற்பமென மூன்று
மற்பினொடு சைவரணி யுந்தவள நீறு
பொற்பவவை மூன்றுதிற னும்புகறல் கேளாய்
விற்புருவ வேற்கண்விது வாணுதன் மடந்தாய்.

கன்றுபய வாதகளி நாகுபுனிற் றுக்கோ
கன்றிறுதி யுற்றகபி லைக்குல மலட்டான்
கன்றுதுணை யீன்றகர வைத்திரண் முதிர்ந்த
கன்றுறு பசுக்கரு வயிற்றுவளர் பெற்றம்.

வார்ந்தசெவி கோடுநெடு வாலிவைக டம்மிற்
றீர்ந்தசுர பித்தொகுதி தீதுவளர் டவ்வீ
யார்ந்துவரு காலிபிணி யான்றகுடஞ் சுட்டெடன்
றோர்ந்தவிவை நீங்கவெழி லோங்கிவளர் கற்றான்.

பங்குனியி னெல்லரி பணைக்கணுறு தாண்மேய்ந்
தங்கவை விடுத்தமப மட்டமியி ரேழிற்
றங்குபதி ஊந்தின்வளர் சாதமநு வோதி
மண்டனில் விழாமுன்மறை மெல்விலையி னேற்று.

வழும்பொருவி வாமமநு வோதிவளர் கவ்வம்
பொழிந்ததில கோரமநு போற்றுபு பிசைந்து
செழும்புருடம் விண்டுதிரள் செய்துதிக ழோமத்
தெழுந்தழன் மடுத்தபி னெடுத்திடலீ சானம்.

புதிய வறுவை கொடுவடித்துப் புதிய கடத்திற் கொளவமைத்துக்
கதிசெய் மநுக்கா யத்திரியைக் கழறிப் புனித நிலத்திருத்தி
மதுவின் றொழுகு மலர்சாத்தி மறுவி றுகிலால் வாய்ப்பெய்தல்
விதியின் றழலி னிடாதுணக்கி விளைவித் திடனு முறையாமால்.

கனத்திற் கரிய பூங்குழலாய் கற்ப முரைத்தா மநுகற்பம்
வனத்தி லுணங்கு மயமேட மதியிற் கொணர்ந்து பொடித்ததன்க
ணினத்திற் சிறந்த கோசலம்வார்த் தெடுத்து நவின்ற முறையானே
யனற்றி விளைத்துக் கொளலாகு மறைது முபகற் பமுங்கேளாய்.

வளர்தீ யியல்பிற் கவர்ந்துண்ட வனத்துப் பொடியி லானைந்துந்
தளரா தொழுக்கி மொழிந்தபடி தழல்வைத்தெடுத்துக்கொளலாகும்

என்னும் பேரூர்ப்புராணக் கவிகளா லுணர்க.

அசைவநீறு:—இருவகைப்படும் (1) சிவாலயத்து மடைப்பள்ளியிலும், சிவனடியார் மடைப்பள்ளியிலும் வெந்த சாம்பல். இது சிவதீக்ஷையில்லாத சூத்திரர்கட்குரியது. (2) காடுகளிலே தானுகவெந்து கிடக்கும் சாம்பல். இதுசங்கரசாதியார்கட்கு உரியதாகும். இதனை:—

" மறையின் வழிச்செந் தீவேட்டு மறைஞர் முதலோர் மூவர்க்கு
மறைவை திகவெண் பொடியாகுமசைவமெனமுன்மொழிந்தபொடி
பறையு மெழிலா லயத்துமடைப் பள்ளிப் பொடியு மடியர்மடத்
துறையு மடைப்பள் ளிப்பொடியு முயர்கான்வெந்த பொடியுமாம்."

"தீக்கை புரியாச் சூத்திரர்க்குச் சிறப்ப தாகு மடைப்பள்ளி
யாக்கும் பொடிகான் வெந்தபொடி யடுப்ப தாகுஞ் சங்கரர்க்கு"

எனவரும் அப்புராணத்தாலறிக.

இங்கே கூறிய அசைவ நீறென்பதையே அகற்பம் எனப் பெயரிட்டுக்கூறுவர் சேக்கிழார்சுவாமிகளும், கடம்பவனபுராணக் காரரும். இவர் சைவநீறு என்பதே கற்பம், அநுகற்பம், உபகற்பம், அகற்பம் என நால்வகைப்படுமென்பர். இவ்வாறு கூறினும் கருத்து ஒன்றே யாதல் தெற்றென விளங்கும். கற்பம் என்பது சிவாகமத்துட் கூறிய விதிமுறையிற் சிறிதும் வழாது மந்திரோக்தமாகச்செய்யப்படுவதென்பதும், அநுகற்பமென்பது அவ்விதிகளிற்

சில சுருக்கிச்செய்யப்படுவதென்பதும், உபகற்பமென்பது அதினுஞ் சில விதிகளைச் சுருக்கிச்செய்யப்படுவதென்பதும், இம்மூன்றும் சிவ தீக்கையுடைய எல்லா வருணத்தார் கட்கும் உரியனவாகு மாதலின் சைவநீறு என்று பெயர்பெறுமென்பதும் பெற்றும். அகற்ப மென்பது யாதேனுமோர் விதிமுறையாற் செய்யப்படாது தானே தகிப்புற்றுக் கிடப்பதாமாதலின் அதை அகற்பமென்று கூறி சிவ தீக்ஷையில்லாதார்கட்கு உரிமைப்படுத்துவாராயினர். கூன்பாண்டி யன் சிவதீக்ஷைப் பேறுபெறுது புறமதப்பற் றுண்டிருந்தமையான் அகற்பமாகிய திருமடைப்பள்ளிநீற்றை ஸ்ரீஞானசம்பந்தசுவாமிகள் கட்டளையிட்டருளியவாறும் காண்க. அன்றியும் மகாபற்பம், பற் பம் என இருவகைப்படுமெனவும், இவற்றுள் மகாபற்பம் என்பது சிவபெருமானே யெனவும், பற்பமென்பது சிரௌதம், சமார்த்தம், லௌகிகம் என மூன்று வகைப்படுமெனவும், இவற்றுள் சிரௌதம் வைதிக சம்பந்தமாயுள்ளதாகவும், சமார்த்தம் ஸ்மிருதி சம்பந்தமா யுள்ளதாகவும், இவ்விரண்டும் மறையவர்க்குரியனவெனவும், லௌ கிகம் உலகசம்பந்தமானதாகவும், அதுவனைய யாவர்க்கு முரியதெ னவும் சூதசங்கிதை கூறும்!

முழுஞான மினிதளித்து மகாபாவ முருக்குதலான்
மழுமானங் கைப்பசனே மகாபற்ப மெனப்படுவான்

"அரிசறுநன் மகாபற்ப சொரூபம்விளங் குறப்பெற்றோ
னரியசிவ னெனயாரு மறைவர்மறை முதலான
பெரியநூ லோதுபயன் பிறங்குறு மகாபற்ப
முரியதிரு ஞானமடை குதலாகு முணர்வுடையீர்"

"சீர்மருவு பற்பந்தான் சிரௌதமே சமார்த்தமே
யேர்மருவி லௌகிகமே யெனமூன்று வகையிவற்றுட்
பார்மருவு முன்னிரண்டும் பார்ப்பார்க்காம் பின்னொன்று
பேர்மருவு மற்றையர்க்கு மாகுமெனப் பேசுவரால்."

என்னுங் கவிகளாற் காண்க.

(4) இதன் நிறபேதவகை:—கருநிறவிபூதி பிணியைத்தரும். செந்நிறவிபூதி - கீர்த்தியைப்போக்கும். புகைநிறவிபூதி - வாழ்நாளைக் குறைக்கும். பொன்னிறவிபூதி - சம்பத்தை நீக்கும். வெண்ணி

றவிபூதி - அளத்தற்கரிய புண்ணியத்தையும், சித்த சுத்தியையும், மோக்ஷத்தையும் தரும். இதனல் வெண்ணிற விபூதியே சிறந்த தென்பதாயிற்று, இதனை:—

"பரவு நீலந்தீப் பிணிசிவப் பிசையின்மை பகர்தூம்
பிரபி றத்தவா யுகந்தெறும் பீதநல் குரவா
கிரவு மித்திற நிறம்படா தெடுத்திடு நீற்றி
னுரவு வெண்ணிற மெண்ணிலாப் புண்ணிய முதவும்"

எனவருங் கடம்பவன புராணத்தானும்,

"அளவாப் பிணியைத் தருநீல மாயு ணீக்குந் தாமிரஞ்சீர்
பிளவா விசையைத் தருஞ்செம்மை பீத மளிக்கு நல்குரவே"

"வெண்மை யளவில் புண்ணியத்தை விளைக்கு மதனு லதுதரிக்கும் வண்மையுடையது." எனவரும் பேரூர்ப் புராணத்தானும் அறிந்துகொள்க.

(5) கோள்கலம்:—மான்றேல், புலித்தோல் பட்டு முதலிய வற்றால் 12 விரலளவுயரமும் 8 விரலளவகலமும் கொள்ளத் தைப் பித்த பைகளும், சம்புடம், வில்வக்குடுக்கைகளும் ஆகியவைகளே சிறந்தனவாம். விபூதியைப் பரமசிவமாகவே கொள்ளவேண்டும். இத னூற்றான் விபூதி வைத்திருக்கும் பையை விபூதிக்கோயில் என்று உயர்வுபடுத்திக் கூறுவர். விபூதிக்கோவில் சத்திவடிவம், அதில் தைக்கப்பட்டுள்ள நூல் பிரமன் வடிவம், பந்திக்குங் கயிறு விஷ்ணு டிவம், அதனுள்ளுறுந் திருநீறு சதாசிவ வடிவம் என்று வேத சிவாகமங்கள் முறையிடுகின்றன. இதனை:—

"பூதி யாவயுஞ் சத்தியன் னதிற்புனை தருநூ
லாதி நான்முகன் பந்திக்குங் கயிறுமா லதனுட்
டீது தீர்தா வுறைவெண்ணீ றருட்சதா சிவமாம்
வேத வாகம மித்திறம் புகன்றிடு மெய்ம்மை"

என்னும் கடம்பவன புராணத்தாற் காண்க.

(6) தரிக்குமுறை:—உத்தூளனம், திரிபுண்டரம் என இருவகைப்படும்.

(1) உத்தூளனவாவது:—கிழக்கு முகமாகவேனும் வடக்கு முகமாகவேனு மிருந்துகொண்டு விபூதியை நிலத்திலே சிந்தாமல் வலக்கையி லெடுத்து தலையை நிமிர்த்து சிவ சிவ சிவ எனச்

செபித்து நடுவிரல் மூன்றினாலும் சிரசு நெற்றி முதலிய தானங்களில் நீர்விட்டுக் குழையாமல் தரித்துக் கொள்ளுதலாம்.

(2) திரிபுண்டரமாவது:—இயன்ற வகையாற் சரீரசுத்தி செய்துகொண்டு சுத்தமான இடத்திலிருந்து சிவத்தியானத்துடன் வலக்கரத்தால் விபூதியை யெடுத்து இடக்கரத்தில் வைத்து விதிப்படி சுத்திசெய்து சம்ஹிதாமந்திரத்தால் அபிமந்திரித்து நீரிற் குழைத்து வலக்கை நடுவிலரல் மூன்றினாலும் சிரசு, நெற்றி, மார்பு, கொப்பூழ், முழந்தாள், புயங்கள், மணிக்கட்டுகள், விலாப்பக்கங்கள், முதுகு, காதுகள், கண்டம் ஆகிய இவைகளில் மந்திரபூர்வமாக முறையே தரித்துக்கொள்ளவேண்டும். நெற்றியில் இரண்டு புருவங்களின் கடைவரையும், மார்பிலும், புயங்களிலும் தனித்தனி ஆறுஅங்குல நீளமும், கண்டத்தில் அதன் சுற்றளவு முழுதும், மற்றைத் தானங்களில் ஒவ்வோ ரங்குல நீளமும் நன்ருகத் தரித்துக்கொள்ளவேண்டும். இங்ஙனம் தரிக்குமுன் உத்தூளனமாகத் தரித்துக்கொண்டு தான் அதன்மேல் திரிபுண்டரந் தரிக்கவேண்டும்.

இவ்வாறு உண்மையான பத்திசிரத்தையுடன் விபூதி தரிக்க வேண்டும். தலையை நடுக்கிக்கொண்டும், கவிழ்ந்து கொண்டும், சிரித்துக்கொண்டும், நடந்துகொண்டும், படுத்துக்கொண்டும், அசுத்த நிலத்திலிருந்துகொண்டும், ஒரு விரலாலும், சண்டாளர் முன்னும், சிவநிந்தகர்முன்னும் தரிக்கலாகாது.

சூரிய உதய அஸ்தமனகாலங்களிலும், ஸ்நானஞ்செய்தவுடனும், பூசை போஜனம் நித்திரை இவற்றுக்கு ஆதியிலும் முடிவிலும், *சரியக்க சௌசம்பண்ணி ஆசமித்தபின்னும், பூனை முதலிய அசுத்த பிராணிகள் தீண்டிய காலத்தும் அவசியம் விபூதி தரித்துக் கொள்ளவேண்டும்.

குருவாயினும், சிவனடியாராயினும், தம்மிற் பெரியோராயினும் விபூதி தந்தால், மும்முறை நமஸ்கரித்து எழுந்து கும்பிட்டுப் பயபத்தியுடன் இரண்டு கரங்களையும் நீட்டி வாங்கித் தரித்துக்கொள்ள வேண்டும். இவர்கள் முன்னும், சுவாமிமுன்னும், சிவாக்கினிமுன்னும் முகத்தைச் சற்றுத் திருப்பி நின்று விபூதிதரிக்க வேண்டும்.

---

* மலஜலவிசர்ச்சனம்.

சிவப் பிரசாதமாகிய விபூதியை சிவதீக்ஷை முதலியவற்றால் தம்மினும் மேம்பட்டவர்கள் கொண்டுவரின் அவர்களைப் பன்முறை நமஸ்கரித்து அன்புடன் பெற்றுத் தரித்துக்கொள்ளவேண்டும். தம்மினும் குறைந்தவர் கொண்டுவரின் அப்பிரசாதத்தை சுத்தமான ஒரு ஆசனத்தில் வைக்கச்செய்து நறுமலர்கொண்டு அருச்சித்து வணங்கியெடுத்துத் தரித்தல்வேண்டும். தீக்ஷையுடையவர் சந்தியாகால மூன்றினும் தீக்ஷையில்லாதவர் மத்தியானத்துக்குமுன்னும் சலத்தில் குழைத்தும், மற்றைக்காலங்களில் சலத்தில் குழையாமலும் தரித்துக்கொள்ளவேண்டும்.

(7) நீற்றின் தத்துவம் :—பசுவின்மலம் ஆன்மமலத்தையும், சாணத்தை சிவாக்கினியால் தகித்தல் ஆன்மமலத்தை ஞானக்கினியால் தகித்தலையும், அதிற்றோன்றும் வெண்ணிறம் ஆன்மமலந் தகிக்கப் பட்டபோது தோன்றும் சிவத்துவப்பேற்றையும் விளக்கிநிற்கும்; இரகசியம் சைவசமயத்தவரெல்லாரும் உய்த்துணரத்தக்கது.

இந்த உண்மையை இங்கே நாமெல்லாங் கூடியிருந்து அளவளாவிப் பெருமகிழ்ச்சி யநுபவித்தற்கு மூலகாரணமாகிய ஸ்ரீமந் மாணிக்கவாசக சுவாமிகள் கூறியருளியதாகப் பரஞ்சோதி முனிவர் கூறிய திருவிளையாடற் புராணத்துள் "மறைகளா லளவை தன்னாற் றேவரான் மனத்தால் வாக்கால், அறிவருஞ் சோதி யெங்கோ னவன்றிரு நீற்றுத் தொண்டின், குறிவழி யன்றிக் காணுங் கொள்கையா னல்ல னென்றார்" எனக்கூறுமாற் றானும், "கொக்கிற கணிந்தா னன்பருலர்ந்தகோ மயத்தை வாங்கிச், செக்கரந் தழல்வாய்ப் பெய்து சிவந்திட வெதுப்பி வாங்கி" "இவ்வண்ண மிருக்கு மெங்க ளிறைவண்ண வடிவு மங்கச், செவ்வண்ண மேனி பூத்த திருவெண்ணீறதுவு மென்ன" எனவும் கூறுமாற்றானுங்காண்க.

அன்றியும் ஆணவம் கன்மம் மாயை என்னும் மும்மலங்களும் தகிக்கப்பட்டமைக்கறிகுறியாகவே விபூதி திரிபுண்டரமாகத் தரிக்கப்படுதலும் கருதற்பாற்று.

(8) திருநீற்றாலடையும்பயன் :—வைதிகநீறு இகபோகத்தை மட்டுமே கொடுக்கும். சைவநீறு இகபோகத்தையுங் கொடுத்து மன மாசகற்றி மலங்களைத்தொலைத்துச் சிவத்துவத்தை விளக்கிவிடுபேற்றையும் தரும். இதனை :—

"உலகருக் குரிய மறைவழி வேட்கு மோங்கிய விரசையிற்பொடித்த விலகுவெண் ணீறு வைதிக பூதி யின்னது புத்தியே யளிக்கும்"

" முத்தியே யன்றிப் புத்தியும் வெஃகின் முகிழ்க்குமாற் சைவவான் பூதி" எனவரும் தணிகைப் புராணத்தானும்.

கங்காளன் பூசுங் கவசத் திருநீற்றை
மங்காமற் பூசி மகிழ்விரே யாமாகிற்
றங்கா வினைகளுஞ் சாருஞ் சிவகதி
சிங்கார மான திருவடி சேர்விரே.

என்னும் திருமந்திரத்திருவாக்கானும், சேக்கிழார்நாயனர் அருளிச் செய்த முழுநீறு பூசிய முனிவர்புராணத் திருவாக்குகளானும், மற்றும் பல நூல்களானும் நன்கு தெளிந்துகொள்ளலாம்.

திருமால் மாயை யொழித்துச் சிவதரிசனம் பெற்றுப் பிரமனைப் பிள்ளையாகப் பெற்றதும் இத்திருநீற்றாலென்பார். இதனை:—

"வெள்ளொ ளித்திரு நீற்றினு லாலிலை மேலோன்
கள்ள மாயைபோய்க் கண்ணுதற் காண்குறப் பெற்றான்
பிள்ளை யாமென மலரயற் பயந்தனன் பெரியோ
ருள்ள மோர்வது திருவெண்ணீ றல்லதொன் றுளதோ"

என்னும் உபதேசகாண்ட மொழியாற் காண்க. திரிபுர தகனத்துக்குச் செல்லுங்கால் சாரதியாகிய பிரமன் பாரதிபிரிவாற்றாது மயங்கி வருந்தி யறிவுகெட்டுழல, அப்போது சிவபிரான் பாரதி வடிவாய் விபூதி பூசி அவன் முன்னின்று பாண்டரங்கக் கூத்தாடி விபூதி கொடுக்க, பிரமன் அதைத்தரித்து மயக்கநீங்கி யறிவுபெற்றான். என்பர். இதனை "தேர்முன் னின்ற திசைமுகன் காணப், பாரதி யாடிய வியன்பாண் டரங்கமும்" என்னும் சிலப்பதிகாரத்தாற் காண்க. முழுநீறுபூசிய முனிவர்பல்லோர் முத்தியுற்றதும் பெரியபுராணத்தானே தெற்றென விளங்கும். இவ்வாறே விபூதியாற் பேறு பெற்றார் சரிதம் புராணங்கடோறும் பிரசித்தமாம், ஆங்காங்கு கண்டுகொள்க.

(9) பெருமை:—வண்ணனொருவன் உயர்மட்சுமைமைத்தாங்கி வருங்கால் மழையால் நனைந்துவழிந்து உலர்ந்து அவன் மேனிமுற்றும் (விபூதி தரித்தவாறாக) வெண்ணிறமுற்று விளங்கக்கண்ட சேரமான் பெருமாணாயனர் யானையினின்றிழிந்து அடியற்ற மரம்போல்

வீழ்ந்து நமஸ்கரித்ததும், அவன், "அடியேன் வண்ணான்" என்று அஞ்சிக்கூறிய காலையும் "அடியேனும் அடிச்சேரன்" எனக்கூறியதும் இத்திருநீற்றின் பெருமையைக்கருதியேயன்றோ? மெய்ப்பொருணாயனார் தம்முயிர் விடுங்கால் தம்மவரை நோக்கி "பரவிய திருநீற்றன்பு பாதுகாத் துய்ப்பீர்" எனக்கூறியருளியதும், இவ்விபூதி மகத் துவத்தை யுணர்ந்தமையானன்றோ? கூன் பாண்டியனுடைய கூனையும் சுரத்தையும் நீக்கி ஆட்கொண்டு சைவத்தைத் துலக்கியதும் இத்திருநீற்றின் மகத்துவமேயன்றோ? இன்னும் இதன் பெருமையை நன்கு விரித்தோதுவது விபூதியுபநிடதமாம். இது பஸ்மசாபால உபநிடதம் எனப் பெயர்பெறும். இது நூற்றெட்டுபநிடதங்களுள் எண்பத்தேழாவது உபநிடதமென்பர். அதர்வணவேதபாகமாயுள்ளது. மற்ற உபநிடதங்களினும் விபூதி மகிமை கூறப்பட்டதாயினும் இவ்வுபநிடதம் இதற்கென்றே எழுந்ததென்க. வேதம், சிவாகமம், உபநிடதம், ஸ்மிருதி, புராணம் ஆகிய ஆப்த வாக்கியங்களால் விரிவுறக்காணத்தக்க இதன் பெருமையைப்பற்றிப் புகல்வதென்னே! இனி "வேதத்திலுள்ளது நீறு" மந்திரமாவது, தந்திர மாவது, துதிக்கப்படுவது, தக்கோர் புகழ்வது, எண்டிசைப் பட்ட பொருளார் ஏத்துந்தகையது, ஓதத்தகுவது, பயிலப்படுவது, பேசவினியது, பரவ இனியது, உண்மையிலுள்ளது, சத்தியமாவது, அருத்தமதாவது, தத்துவமாவது, சுந்தரமாவது, காணவினியது, பூசவினியது, புண்ணியமாவது, முனிவரணிவது, வானவர்மேலது, இராவணன்மேலது, வருத்தந்தணிப்பது, உடம்பிடர் தீர்ப்பது, அவல மறுப்பது, பத்திதருவது, இருமைக்குமுள்ளது, வானமளிப்பது, முத்தி தருவது என ஸ்ரீஞானசம்பந்தசுவாமிகள் இத்திருநீற்றுக்கே ஒரு பதிகம் திருவாய் மலர்ந்து பலபடப்பாராட்டி சுவர்க்க மத்திய பாதலத்துள்ள சகலராலும் அணியத்தக்கதெனவும், முத்தி சாதனமானதெனவும் புகழ்ந்துரைத் தருளுவராயின் இதன் பெருமையை முற்றக்கூற வல்லுநர்யாவர்? "திருவெண்ணீறணியாத திருவிலூரும் அவையெல்லாமூரல்ல அடவிகாடே" என ஸ்ரீதிருநாவுக்கரசு சுவாமிகளும்,

"பிணியெலாம் வரினு மஞ்சேன் பிறப்பினோ டிறப்புமஞ்சேன்,
துணிநிலா வணியி னான்றன் றொழும்பரோ டழுந்தி யம்மா, திணிநி

லம் பிளந்துங் காணுச் சேவடி பரவி வெண்ணீ, றணிகிலா தவரைக் கண்டா லம்மநா மஞ்சு மாறே" என ஸ்ரீமாணிக்கவாசக சுவாமிகளும் கட்டளையிட்டருளியதும் இதன் மகிமையை யுணர்ந்தன்றோ?

பேய்பிடித்தாட்டல் முதலிய கொடுந்துன்பங்களை விலக்குதற்கு எச்சமயத்தாருக்கும் இத்திருநீறே சாதனமாக இருப்பதென்பதை யிற்றைக்கும் பிரத்தியக்ஷப் பிரமாணமாகக் காணலாம்.

"பகைபிணி மண்ணைபன் மந்தி ரத்தினு
மிகையறன் கடையுள வெருட்சி பித்திடர்
வகையெனைத் தையுமற மாற்றி யாவர்க்குந்
தகைநல மளிப்பது தவள நீறரோ"

"அலகை பூதம் வேதாள மடர்மந் திரத்தா னலைப்புறுத்தும்
பலதெய் வதங்க ளிடரச்சம் பழிபா வங்கண் மடமென்னுங்
கலதி முழுது மெளிதகற்றிக் காப்புக் கொளலாற் காப்புமா
நிலவைப் பிடத்தினதன்பெருமை நிகழ்த்த லரிதா மடமாதே'

என்று ஸ்ரீகச்சியப்பசுவாமிகள் கட்டளையிட்டருளலும் காண்க. இத்தகைய பெருஞ்சிறப்பினை நன்கு திருவுள்ளங் கொண்டன்றோ "நீறில்லா நெற்றிபாழ்" என்று நம் ஔவைப்பிராட்டியார் திருவாய்மலர்ந்தருளினர்? நெற்றியின் அமைப்பு திரிபுண்டரதாரணத்துக் கென்றே கருதிச் செய்துவைத்தது போற்றோன்றுவதும் காண்க.

(10) பிரத்தியட்சசக்திகள்:—மேற் கூறியவாறு சுருதியுக்திப் பிரமாணங்களால் திருநீற்றின்பெருமைவிளங்குவதொன்றோ! இதன் பிரத்தியட்ச சக்திகள் பலவற்றைப் பிரத்தியக்ஷப் பிரமாணத்தாலும் காட்டலாம். இது சரீரத்திலுள்ள விஷச்சந்துக்களைப் போக்கும். விஷக்கிருமிகள் அணுகவொட்டாது காக்கும். பல ரோகங்களை நீக்கும். அவரைச்செடி முதலிய படர் பயிர்களில் புழுக்கள் விழாதபடி பாதுகாப்பதற்கும், துவரை முதலிய பயறுகளில் புழுக்கள் விழாதபடி பாதுகாப்பதற்கும் சாம்பலைத்தூவி வைப்பதும், அங்ஙனம் தூவி வைப்பதால் அவற்றில் சிறுஜெந்துக்கள் விழாதிருத்தலும் நம் இல்லத்துப்பெண்களும் நன்றாகத் தெரிவாரன்றோ? நீர்ப்பிணியைத் தீர்ப்பது யாவருமறிந்ததொன்றே. இங்ஙனமாக வயித்திய சாஸ்திர முறைப்படியும் திருநீறுதரித்தல் அவசியமென்பது பெறப்பட்டதாகும்.

(11) புறமதத்தார்க்குமுண்டெனல்:—சைவ சமையத்தினர் இத்திரு நீற்றுப்பெருமையை நன்கு தெரிந்து மிகப்போற்றுகின்ருர்கள். புறமதத்தினரும் இதன் பெருமையையறிந்து போற்றி வருகின்ருர்கள் என்பதும் காட்டுவாம். மகமதியமதத்தினர் தமது பள்ளிவாசலில் சர்க்கரை கொண்டுவந்து பாத்திபா செய்கின்றவர்கட்கு அவணுள்ள குருக்கள் சாம்பலையே அள்ளித்தருகின்றனர். அதற்கு நாறுஷா எனப்பெயர் கூறுவர். அதனைப்பெற்ற அம்மதத்தினர் வாயிலிட்டு உட்கொள்கின்றனர். இது இன்றும் எல்லாப் பள்ளிவாசல்களிலும் நிகழ்வதாகும். கிறிஸ்தவர்களோ விபூதித்திரு விழா என்று ஒரு காலத்தை யேற்படுத்திக் கொண்டாடுகின்றனர். இதனை கிறிஸ்தவவேதமாகிய பைபில் புத்தகத்தில் எண்ணுகமம் 19-ம் அதிகாரம் 5, 9, வசனங்களிலும், புதிய எபிரேயர் 9, 13, லும், சுவிசேஷம் 9 4, விலும் யாத்திராகமம் 12, 22, 23 லும் வரைந்துள்ள வாக்கியங்களால் யாவரும் நன்ருகக்காணலாம். இன்னும் விரிக்கிற்பெருகும்.

இங்ஙனம் புறமதத்தாரும் மெய் மகிமையையுணர்ந்து போற்றத் தக்கதாகிய திருநீற்றை உரிமைவாய்ந்த நம்மவர்கள் அந்தரங்க பத்திசிரத்தையுடன் அணியாது "ஏதோ தகப்பனுர் பூசினுர் நானும் பூசுகிறேன்" என்று அலக்ஷியபுத்தியுடன் தரிக்கின்றனர் பல்லோர். எக்காரியத்தையும் அதன் உண்மையையறிந்து ஏற்றவாறுசெய்தால் விரைவில் நற்பலனைப்பெறலாகும். ஆதலின் விபூதியைப்பற்றிய விஷயங்களை யெல்லாம் நன்கு தெரிந்து விதிப்படி முழு அன்புடன் அணிந்து சிவபெருமான் திருவருட்பேற்றை யடைந்துய்யுமாறு நம்மவரைப்பிரார்த்திக்கின்றனன்.

"நிரந்தமன வாக்குடலா லணைந்த கன்ம நீங்குவதெவ் வாறெனவே யியம்ப வேண்டா, பரந்தகொலைப் பாதகன்கைக் கத்தி யேனும் பரிசனவே தியைப்பரிக்கப் பொன்னு மாபோல், விரிந்தமரத் தமர்ந்தபல பறவை யெல்லாம் விரைந்தொருக லெறிந்திடவிட்டேகு மாபோ, லரன்திருநா மத்தையுரைத் தொருகால் வெண்ணீ றணிந்திடவெவ் வினையனைத்து மகன்று போமே" என் பதாதியவற்ருல் இதன் பெருமை நன்கு காண்க.

முற்றிற்று.

# (5) உருத்திராக்கத்தின் பெருமை.

—(*)—

சைவ சமயத்தவர்கட்கு உரியனவாகிய விபூதி உருத்திராக்கமெ ன்னும் இவ்விரண்டும் சிவசாதனங்கள் எனப்பெறும். இவற்றுள் விபூதியைப்பற்றி முன்னர்க் கூறினும். ஓர் நாயகனை மணந்த கற்பு டைய மனைவிக்கு மங்கல நாண்போன்று பசுபதியாகிய சிவபிரானை நாயகனாகக்கொண்டொழுகும் பக்குவான் மாக்கட்கு இன்றியமையா த் திருவாபரணமாகிய உருத்திராக்கத்தின் விஷயங்களை வகைப்படு த்தி ஆராய்வாம்.

1. உற்பத்தி:—தாரகன் தாரகாக்ஷன் வித்துன்மாலி என்ற மூன்று அசுரர்கள்; பொன், வெள்ளி, இரும்பு என்னுமூன்று லோகங் களால் மூன்று கோட்டைகளையுடைய நகரங்களைச் செய்து அவற்றி லிருந்து கொண்டு பிரமன் முதலிய எல்லாத் தேவர்களையும் துன்பு ப்படுத்தி வந்தனர். இவர்களியற்றும் இன்னலையாற்றாத பிரமன் விட்டுணு இந்திரன் முதலிய தேவர்கள் பரமேசுவரனை நோக்கி ஆயிரந்தேவ வருடந்தவம் புரிந்தனர். அவர்கள்செய்யுந் தவத்தைப் பரம கருணாநிதியாகிய சிவபிரான் தமது திரிநேத்திரங்களாலும் பார்த்தருளுங்கால் அக்கண்களினின்று புனல் துளித்தது. சூரியவ டிவாகிய வலக்கண் பொழிந்த நீர்த்துளிகளில் 12 உருத்திராக்க மர ங்களும், சந்திரவடிவாகிய இடக்கண் பொழிந்த நீர்த்துளிகளில் 16 உருத்திராக்க மரங்களும், அக்கினி வடிவாகிய நெற்றிக்கண் பொழி ந்த நீர்த்துளிகளில் 10 உருத்திராக்க மரங்களும் உதித்தன.

இவற்றுள் வலக்கண்ணினின்று கபிலநிறமணியும், அதினின்று செந்நிற மணியும், அதினின்று பொன்னிற மணியுந்தோன்றின. இடக்கண் பொழிந்த நீரிலே வெண்ணிறமணியுதித்தது. அக்கினி க்கண் பொழிந்த நீரிலே கருநிறமணி பிறந்தது. பின்னர் சிவபிரான் கட்டளையிட்டருளியவாறே தேவர், முநிவர் முதலிய சகலரும் அவற் றைப்புனைந்து துன்பம்நீங்கிச் சிவபுண்ணியப் பேற்றையடைவாராயி னர்.

2. பெயரும், காரணமும்:—இம்மணிகள் அக்கம், கண்டி, கண் டிகை, கண்மணியெனப்பல பெயர்பெறும். பரமசிவனுடைய அரு ணோக்கமானது ஆன்மாக்களின் மலங்களை நீக்கித் திருவருளுருவாக்

கி முத்திப்பேற்றையளிக்குமாறு போன்று, பாசநீக்கமுடன் அருட்டன்மையும் முத்திப்பேறும் தருதலால் அக்கம் என்பர். பாவங்களையும் துன்பங்களையும் கண்டித்தலானே கண்டி, கண்டிகை என்பர். சிவபெருமானின் கண்களிற்றோன்றிய முத்துப்போன்ற நீர்த்துளிகளிலுற்பவித்தமையானும், இரவியினொளியைக்கவர்ந்து மனத்திற் சேர்த்துவிளக்கும் கண்ணின் ஒளிமணிபோல, ஈசுவரனின் அருளொளியைக்கவர்ந்து ஆன்மாக்களிடம் சேர்த்து விளக்குதலானும் கண்மணி யென்பர். இனியிவற்றின் பரியாய நாமங்களாவனவே பிறவனைத்து மெனக. இவ்வுண்மைகளை யெல்லாம்

"பரசிவன்கண் ணொளிபோலப் பரித்தவரைப் பவமாற்றி
அருளுருவிற் செய்தலான் அக்கம்உண்மா சோடரந்தை
ஒருவுறக்கண் டித்தலினாற் கண்டி, கண்டி கையெவற்றும்
பெருமைமிக லான்மணியென் றெருவேதம் பேசிற்றால்"

எனவரும் தேவிகாலோத்தரச் செய்யுளாற் காண்க.

3. பெருமை:—அறம், மகம், செபம், தவம் முதலிய எவ்வித நற்கருமத்தைச் செய்யினும் விபூதியுருத்திராக்கந் தரியாது செய்யின் அவை பயன் தராவென்பதும், இவற்றைப்பூண்பார்க்கே முத்தி கிடைத்தல் எளிதென்பதும், அவரிடத்துச் சிவபெருமான் அருண்மயமாய்வீற்றிருப்பரென்பதும், அவரைச்சிவபிரானாகவே கருதிவணங்கவேண்டு மென்பதும், கண்மணியின் தோற்றமாதிய பலவிசேடங்களும் வேதசாரமாகிய உபநிடதங்கள் முறையிடுகின்றன. 108 உபநிடதங்களுள் திரிபுரோபநிடதம், திரிபுரதாபனியுபநிடதம், பஸ்மசாபாலோபநிடதம் முதலிய பலவற்றில் இதன் பெருமை ஆங்காங்குக் கூறப்படும். சாமவேத பாகமாகக் காலாக்கினி ருத்திரபகவானால் புசுண்டமகா முனிவருக்குக் கூறியருளப்பெற்ற உருத்திராக்க சாபால உபநிடதமும், இருக்குவேதபாகமாகப்பிரமதேவனுக்கு முருகக்கடவுளுபதேசித்தருளிய அக்ஷமாலிகோபநிடதமும் அக்கமணிகளின் தோற்றமாதிய பெருமைகளைத் தேற்றமாகக் கூறுவனவாம். இவற்றின் பெயர்களே இதனை நன்கு விளக்குதல் காண்க. சிவாகமங்களும் சைவபுராணங்களும் இதன் பெருமை பேசுவன பலவாம்.

4. வகையும், வருணமும்:–இதுவெண்ணிறமணி, கபிலநிறமணி, செந்நிறமணி, பொன்னிறமணி, கருநிறமணி என ஐந்து வகைப்படும். இவை யொவ்வொன்றும் ஒன்று முதல் பதினாறு முகம்வரை கொள்ளலால் எண்பது வகையாகுமென்க. இவற்றுள் வெண்ணிறமணி அந்தணசாதி யெனவும், பொன்னிற மணியும் செந்நிறமணியும் க்ஷத்திரியசாதியெனவும், வெண்மையும் செம்மையுங்கலந்துள்ள கபிலநிறமணி வைசியசாதியெனவும், கருநிறமணி சூத்திரசாதியெனவும் நூல்கள் கூறும். வெண்ணிறமணி அந்தணருக்கும், கபிலநிறமணியும் செந்நிறமணியும் அரசருக்கும், பொன்னிறமணி வைசியருக்கும், கருநிறமணி சூத்திரருக்கும் உரிமை பெறும் என்பர். இத்தகைய உருத்திராக்க மணி கிடையாவேல் மண், மரம், கல் இவற்றிலொன்றால் கண்மணிபோல முகமும், வரையும், அடியும் பொருந்தச் செய்வித்து அணிந்துகொள்ளலா மெனவும், அங்ஙனஞ் செய்தமணிகள் "பார்த்திவருத்திராக்கமணி" யெனப் பெயர்பெறு மெனவும், இதனையணிந்தவர்களின் 21வமிசத்தாரும் முத்திபெறுவரெனவும், செயற்கை மணிதரும் பலனே யித்தகையதாயின், இயற்கை மணிதரும் பலனை யளவிட்டுக்கூறுவார் யாவர்? எனவும் ஆன்றோர் மொழிவர்.

"கண்டியரி தாகின்மண் ணாலே பணிக்கண்டி
கொண்டணிவார் மூவேழ் குலத்தோடும்—பண்டைவினை
வீட்டிவிண் ணுள்வ ரெனின்வியன் கண்டிக்குக்
காட்டிடுவா ரார்பலத்தைக் கண்டு" என்றார் மறைஞான சம்பந்தர். அன்றியும் பொன்னாற்செய்து தரிப்பதுமுண்டு. அதற்கு "ஆக்கினேயமணி" என்று பெயர் கூறுவர்.

5. அளவும், தொடையும், அணியுந்தான, காலங்களும்:–சிகையிலே ஒரு மணியும், தலையிலே 36 மணியும், காதுகளிலே ஒவ்வொன்று அல்லது அவ்வாறு மணிகளும், கழுத்திலே 32 மணிகளும் புயங்களில் தனித்தனி 16 மணிகளும், கைகளிலே தனித்தனி 12மணிகளும், மார்பிலே நூற்றெட்டு மணிகளுங் கொண்ட மாலைகள்தரிக்கலாகும். இங்ஙனம் எண்ணிக் கோவை செய்து தரித்தலன்றி

தலை, கழுத்து, மார்பு, கை முதலியவற்றில் அவ்வவற்றின் பெருமை சிறுமைக்கேற்ப இடங்கொண்ட அளவு கோவை செய்து தரித்தலுந் தகும். அக்கமணியை இங்ஙனந் தொடுக்குங்கால் முகம் முகத்தைப் பொருந்தவும், அடி அடியைப் பொருந்தவும், இடையிடையே பொன், வெள்ளி, தாமிரம், முத்து, பவளம், பளிங்கு, வில்வக்குடுக்கைவில்லை இவைகளிலியன்றதைச் சேர்த்துக்கொண்டு, வெண்பட்டு நூல், பருத்திநூல், பொற்கம்பி, வேள்ளிக்கம்பி இவற்றிலொன்றால் 27 இழைகொண்டு கோவை செய்து நுனியிரண்டனையும் ஒன்றாகக்கட்டி நாயகமணியிட்டு முடித்துத் தரித்துக்கொள்ளவேண்டும். கழுத்தில் ஒன்று அல்லது 3 மணிகளைத் தரித்தல் பொருந்தும். உருத்திராக்க மணியிற்றோய்ந்து வடியும் நீர் கங்கைநதியினும் சிறந்ததென்று வேதாகமோபநிடதங்கள் முழங்குவ ஆதலின் சிகையில் ஒற்றை மணிதரித்தல் மிகவும் விசேடமென்பர். தியானம், செபம், பூசை, தரிசனம், தேவார திருவாசக சிவபுராண பாராயணம், நீராடல், விரதமநுட்டித்தல், சிராத்தம் செய்தல், யாகாதிகாரியமியற்றல் முதலிய விசேடகாலங்களில் அவசியம் கண்டிகை புனையவேண்டும். நித்திரை, மலசலமோசனம், ஆசௌஸம் முதலிய காலங்களில் சிகையும் காதும் ஒழிந்த மற்றைத்தானங்களில் கண்மணியணிதல் கூடாதென்பர்.

6. அதிதேவதைகள்:—ஒரு முக மணிக்குத் தற்பரசிவனும், இருமுகமணிக்குச் சீகண்டபரமசிவனும், மும்முகமணிக்கு அக்கினிதேவனும், நான்குமுகமணிக்குப் பிரமனும், ஐம்முகமணிக்குக்காலாக்கினியுருத்திரனும், ஆறுமுகமணிக்கு எமதிறைவனாகிய சண்முகக்கடவுளும், எழுமுகமணிக்கு ஆதிசேடனும், எண்முகமணிக்கு விநாயகக்கடவுளும், ஒன்பதுமுகமணிக்கு வைரவமூர்த்தியும், பத்துமுகமணிக்குத் திருமாலும், பன்னொருமுகமணிக்குப் பதினொரு உருத்திரரும், பன்னிருமுகமணிக்குப் பன்னிரு சூரியரும், பதின்மூன்று முகமணிக்குக் குமரக்கடவுளும், பதினான்கு முகமணிக்குச் சிவமும் சத்தியும், பதினைந்து முகமணிக்குச் சதாசிவ மூர்த்தியும், பதினாறு முகமணிக்கு அனந்தேசுவரரும் அதிதேவதைகளாவர்.

7. பலன்:—ஒரு முகமணி தரிக்கிற் பிரமகத்தியைப் போக்கும். இருமுகமணி தரிக்கிற் கோகத்தியை நீக்கும். மூன்றுமுகமணி

யணிந்தவர் ஸ்திரீகத்தி நீங்கப் பெறுவர். நான்குமுகமணி யணிந்தவர் நரகத்தி தொலையப் பெறுவர். ஐந்துமுகமணி யணிந்தாற் புணரத் தகாதவர்களைப் புணர்ந்ததால் வரும் பாவமும், புசிக்கற்பாலனவல்லாதவற்றைப் புசித்ததனல் வரும் பாவமும் போம். ஆறுமுகமணி தரிக்கின் அது பிரமகத்தி முதலிய மகா பாதகங்களை யெல்லாம் நாசமாக்கும். ஏழுமுகமணி தரிக்கின் கோகத்தியையும், பொற்களவையும் போக்கும். எட்டுமுகமணி யணிந்தாற் குருபன்னியைப் புணர்ந்த பாவமும், பொற்களவும், துலாபுருட தானம், இரணிய கருப்பதானம், திலபதும தானம், சொன்ன பூமி தானம், சொன்னதேனு தானம், இலக்குமிதானம், திலதேனுதானம், சகத்திர கோதானம், இரணிய வசுவதானம், இரணிய கன்னிகாதானம், சொன்ன கசமுதலிய தானங்களை வாங்கிய பாவமும், பிறர் அன்னத்தைக் கவர்ந்துண்ட பாவமும் நீங்கும். ஒன்பதுமுகமணி தரிக்கின் ஆயிரம் பிராமணகத்தியும், நூறுபிரமகத்தியும், பூதம், பிசாசம், சர்ப்ப முதலியவற்றாலாகும் விக்கினங்களும் நீங்கும். அணிமா முதலிய சித்திகளும் முத்தியுமுண்டாம். பத்துமுகமணி தரிக்கின், அது நாள்கோள் பேய் பூதம் பிரமராக்கதம் முதலியவற்றாலுண்டாகுந் தீங்குகளெல்லாவற்றையும் போக்கும். பதினொருமுகமணி தரித்தால் அது ஆயிரம் அசுவமேத பலத்தையும், இலக்ஷங் கோமேத பலத்தையும் கொடுக்கும். பன்னிரண்டுமுக மணி தரிக்கின் அது கோமேத பலத்தையும், அசுவமேத பலத்தையும், சுவர்ணதான பலத்தையுங் கொடுக்கும். பதின்மூன்று முகமணி தரிக்கின் அது சர்வாபீஷ்டத்தையுஞ் சர்வ சித்தியையுங் கொடுக்கும்; பிதாவையும், மாதாவையும், சகோதரரையும், புத்திரரையும், கருவையுங் கொன்ற பாவத்தையும் போக்கும். பதினான்கு முகமணி தரித்தால் தேவர் முனிவர் முதலாயினோரெல்லாரையும் வசப்படுத்திச் சிவ பதத்தைக் கொடுக்கும். பதினைந்து முகமணி தரிக்கின் சகல பாவங்களையும் நீறாக்கும்; இந்திரன், பிரமன், விஷ்ணு முதலினோரது பதவிகளினுள்ள போக வின்பங்களையும் வசமாக்கும். பதினாறு முகமணி தரிக்கின் சிவசாயுச்சிய வாழ்வை யளிக்கும். இவற்றுள் பதினாலு, பதினைந்து, பதினாறு முகமணிகள் கிடைப்பதருமை பருமை.

8. பூசித்தல்:—அக்கமணியை இங்ஙனம் அணிதலையன்றி, சுத்தாசனத்தமைத்து நறுமலரிட்டருச்சித்துப் பூசித்தலும் விதியாம். அப்பூசையை யன்புடன் செய்துவரின் அது சிவபூசைப் பலன் முழுதுந்தரும்.

9. செபமாலை:—ஸ்ரீ பஞ்சாக்கர முதலிய மந்திர செபஞ் செய்யுங்கால் வலக்கரத்து நடு மூவிரல்களிலிட்டுப் பெருவிரலாற்றள்ளிக் கணக்கிடுதற்குக் கோவை செய்துகொள்ளும் மாலை செபமாலையாகும். அது நெல்லிக்கனி, இலந்தைக்கனி, கடலை அளவினமைந்த அழகிய அக்கமணிகளாற் கோவை செய்யப்படும். 108, 105, 50, 32, 30, 28, 27, 26, 25. 6, 5 என்னும் எண்ணுள்ள மணிகளால் தொடுக்கப்படவேண்டும். இவற்றுள் 108-ம் 30-ம் புண்ணியச் செல்வத்தையும், 105 போக மோட்சங்களையும், 50 இஷ்ட சித்தியையும். 32 வெற்றியையும், 28 பலத்தையும், 27 தேவபதவியையும், 26 செல்வ விருத்தியையும், 25 சிவசாயுச்சியத்தையும், 6 சாந்தியையும், 5 போகத்தையும் கொடுக்கும். 15 அபிசாரபலனைத்தரும் இம்மாலைகளின் இருதலையுஞ்சேர்த்து மேல்வைத்துள்ள நாயகமணியைக்கணக்கிற் சேர்க்காமல் விட்டுச் செபிக்கவேண்டும். துறவிகள் மணிகளை மேனோக்கித்தள்ளியும், இல்லறத்தார் கீழ் நோக்கித்தள்ளியும், மணிகளைப் பிறர்காணாதபடி பரிவட்டத்தால் மூடிச்செபிக்கக் கடவர். மனை, மடம், பசுத்தொழு, நந்தவனம், மலை, தீர்த்தக்கரை, ஆலயம், சிவசந்நிதானம் இவ்விடங்களிலிருந்து செபிக்க வேண்டும். இவை முறையே யொன்றற் கொன்றதிக பலனைத் தரும். கடவுள் சந்நிதியில் கடவுளுக்கு எதிர்முகமாக இருந்து செபித்தல் நன்று. கிழக்கு முகமுற்றால் விரும்பிய பலனுண்டாகும். வடக்கு முகம் விபாதி நீங்கும். மேற்கு முகம் இஷ்ட சித்தியாம். தெற்கு முகம் அபிசாரபலனாம். செபமாலையானது சங்குமணி, பவளம், முத்து, பொன், தாமரைமணி முதலிய பலவற்றாற் செய்யப்பெறுமாயின் இவ்வெல்லாவற்றிலும் மிகச்சிறந்த விசேடமுடையது கண்மணி மாலையேயாம். செபிக்குங்கால் மான்றோலாசனம் ஞானவிர்த்தியையும், புலித்தோல் முத்தியையும், கம்பளி துன்ப நிவிர்த்தியையும், ஆடை பிணி நீக்கத்தையும் தருவனவென்க.

“கருமா னுரிஞான விர்த்தியினைக் காட்டும்
வரிவேங்கைத் தோன்முத்தி வாய்க்கும்—உரமுடைய
கம்பளந் துன்பங் களையு மிழைக்கலிங்கம்
வெம்புமுட னோயினைவிட் டும்.” (உருத்திராக்கவிசிட்டம்)

10. **உண்டாகுமிடமும் கிடைக்குமிடமும்:**—ஒரு முகமணி முதற் பதினாறு முகமணிவரையுள்ள நன்மணிகளும், சிவமும் சத்தியும் ஒன்றுபட்டுள்ள உண்மையை விளக்கும் வடிவுவாய்ந்த கௌரிசங்கமணியும், சாலக்கிரமமும் இந்தியாவின் வடபாகத்திலுள்ள நேபாள தேசத்திலே விளைகின்றன. அத்தேசத்தை ஆளும் தனியரசராகிய சுதேசமன்னர் தமது பூசை மடத்திலே இவ்வெல்லாமணிகளையும் அமைத்துத் தினமும் அவற்றைப் பூஜித்து வருகின்றனர். செபமணிகள் சிங்கப்பூரில் விளைகின்றன. இவையெல்லாம் காசிநகரிற் கொண்டுவரப்பெற்று, துளையிட்டு ஒருங்குபெற மாலைகளாக்கப்பட்டு அங்கிருந்துதான் ஏனைய எல்லா இடங்கட்கும் வந்துகொண்டிருக்கின்றன.

11. **அணிவோர் நிலை:**—இத்தகைய சிவ சாதனங்களைப் புனைவோர் ஆசார சீலராகி, கொலை களவு பொய் விபசாரம் முதலிய தீத்தொழில்களைவிட்டு, அறச்செயல்களைக்கொண்டு சித்தசுத்தியுடையராயிருக்கவேண்டும். இங்ஙனம் ஒழுகுவார்கட்கே மேற்குறித்தவாறு பலன்கள் கிடைப்பனவாம். இவ்வுண்மையை யுணராது கொலைமுதலிய கொடுந்தொழில்புரிந்து அசத்தியம் பேசி மதுவாதியுண்டு வாழ்கின்ற மகா பாதகர்கள் உழக்கு விபூதியைப் பூசினும், ஒரு ஆட்சுமை அக்கமணியைத் தாங்கினும் அவற்றாலவர் அடைவது தெய்வதண்டனையே. வயித்தியன் கொடுத்த மருந்தையுட்கொண்டோன் அவ்வயித்தியன் கூறியவாறு பத்தியமிராது அபத்தியம் புரிவானாயின் முன்னுள்ள நிலையினும் மிகக்கொடிய துன்பத்தை யனுபவித்தல் போலவே, சிவ சாதனங்களையணிந்தும் தீவினை புரியும் பாவிமக்களுக்கு ஒருநாளும் உய்தியில்லை யென்க.

“இரவெலாங் காமக் கணிகையர் முயக்கி னின்பமுற் றியற்பகலெல்லாங், குரவரா யணிவெண் ணீறுருத் திராக்கங் கோலமார்ச்சாலமாங் குழைவும், பரவுபா வனையுந் தேவதார்ச் சனையும் பண்ணல்

போலுருப்பல பரப்பி, விரவுமா மணிதொட் டாட்டலும் பார்க்கின் மிகக்கொடி திவர்வஞ்ச வேடம்''

என்றபடி, பிறரை வஞ்சித்தற் பொருட்டே வீபூதியுருத்திராக்க தாரணம் பூண்டுவாழும் பசுத்தோல் போர்த்த புலிபோன்ற கள்ளவேடச் சாமியார்கள் பல்லோர் திரிகின்றார்களாதலின் அவர் பொருட்டே யிங்கு இவ்வண்ணம் கடிந்து கூறத்துணிந்தனமென்க.

12. மின்சாரசக்தி:—இக்கண்மணிகள் சூரிய சந்திர அக்கினி ஆகிய ஒளிப்பிழம்புகளினின்றும், அவற்றிற்கெல்லாம் ஒளி கொடுக்கும் பேரொளிப்பிழம்பாகிய பரமேசுவரர் வழியாகத் தோன்றினமையால் இவற்றில் மின்சாரசக்தி மிகவும் நிறைந்திருப்பதாம். இச்சக்தி இவற்றினிடத்து மிக்கிருத்தலைப் பொருட்குண பரீக்ஷாசாத்திரிகளான எல்லா மதத்தினரும் ஒப்புகின்றனர். ஆதலின் எந்த எந்த அவயவங்களில் இம்மணிகள் அணியப்படுகின்றனவோ அந்த அந்த அவயவங்கள் மின்சாரசக்தியைப் பெற்றுப் பலப்பட்டுப் பிணி நீக்கமும் சுகப்பேறு முடையனவாகிச் சித்த சுத்தியை யுதவு மென்பதைப் புறமதத்தினரும் அங்கீகரிக்கின்றனர். சித்தசுத்தியால் எய்தாத பேறுமுண்டோ? எல்லாப்பேற்றையும் தரவல்லதாகியசித்த சுத்தியைத் தரவல்லன இம்மணிகளாயின் அப்பேறெல்லாம் இம் மணிகள் தந்த பேறுதான் என்பதிற் சந்தேகமில்லை யென்க. இவ்வாறாக உயிர்க்குறுதி பயக்கத்தக்க இவ்வுருத்திராக்க மணிகளையணியும் சைவ மணிகளாகிய நம்மவர்கள்

"உன்னைச்சிங் காரித் துனதழகைப் பாராமல்
என்னைச்சிங் காரித் திருந்தேன் பராபரமே''

என்ற தாயுமானவர் திருவாக்குக்கு இலக்காக, தங்கங்கட்டி மணிகளிழைத்துப் பளபளென மின்னக் கழுத்திலணிந்து கண்ணடியிற் பார்த்து மகிழ்ச்சியடைதல் மட்டில் நில்லாது, இம்மணிகளின் பெருமைகளைச் சற்றேகருதி யுற்றுநோக்கி யுள்ளுருகி அன்பும் அருளும் கலந்து மேற்கொண்டு வாழ்வார்களாயின் இக பர லாபத்துடன் சிவபெருமான் திருவடிப்பேறு பெறுதற்குரியராய் நீங்காத பேரின்பத்தை யடைவார்க ளென்பது சத்தியம்.

உருத்திராக்கத்தின் பெருமை முற்றிற்று.

# (6) சிவத்தியானம்.

உலகத்திற்றேன்றிய உயிர்களெல்லாம் இன்பத்தையே விரும்பும். அதிலும், சின்னுளிலொழிவதாகிய சிற்றின்ப போகாதிகளை யொழித்து என்றும் அழியாத பேரின்பத்தையே விரும்புவது அறிவறிந்த மக்கள் கடனும். ஆகவே காலவரையறைக்குட்பட்டொழிவதாகிய சிற்றின்பம் யாது? கால வரையறைகடந்து என்றும் நிலைத்துள்ள பேரின்பம் யாது? என விசாரிக்கப்புகின்; பூவுலகத்து அரசபதவியும்,பிரமாதி தேவபதவிகளும் அவ்வவற்றிற்குரிய காலங் கழிந்தவுடன் ஒழிந்து விடுதலால் அழிதற்றன்மைன சிற்றின்பங்களேயாகும். இங்ஙனம் காலத்தின் அளவுக்குட் படாததும், என்றும் மாருததும் ஆகிய மோக்ஷசாம்ப்ராச்யமான நிரதிசயாநந்த மொன்றே பேரின்பமெனப்பெறும். இத்தகைய பேரின்ப நிலையே தத்துவ நூலுணர்ந்த வித்தகர்களாகிய மெய்ஞ்ஞானிகள் யாவராலும் விரும்பப்படும் பெரும்பேறும். பெறுதற்கரிய பெரும்பேருகிய இதனை அடைதற்குச் செய்யும் உபாயமே மேற்குறித்த சிவத்தியான மென்றுணர்க. சிவத்தியானம் என்ருல் சிவபிரானைத் தியானித்தல் என்று பொருள் தரும்.

மனம், வாக்கு,காயம் என்னும் திரிகரணங்களின் மூலமாகவே எல்லாச் செயல்களும் நிகழ்வனவாம். இம்மூன்றனுள்ளும் காயத்தின் வழிப்படும் செயலுக்கும், வாக்கின் வழிப்படும் சொல்லுக்கும் மூலமாக நிற்பது மனத்தின் செயலாகிய நினைப்பே யென்பதும்; மனத்தில் நினைப்புத்தோன்றிய பின்னரே சொல்லுதலும் செய்தலும் நிகழ்வனவல்லது மனம் ஒன்றை நினையாதபோது சொல்லுதலும் செய்தலும் நிகழாவென்பதும் யாவரும் அறிந்தனவே. ஆதலின் திரிகரண சுத்திவேண்டுமாயின் முதலில் மனமொன்றை மட்டும் சுத்தப்படுத்திக் கோடலே சாலும். மனச்சுத்திவந்தவுடன் ஏனைய இரண்டும் தாமே வரும். கற்றுக்கேட்டுச்சிந்தித்துத் தெளிந்து நிஷ்டாபரராக இருந்த பெரியோர் பலரும் மனத்தின் தன்மையை நன்குணர்ந்தமையாலன்றே அம்மனத்தை அடக்கவேண்டுமெனவும், மனம் அடங்காவழி நன்மையடைய முடியாதெனவும்,

மனம் ஒன்றை மட்டும் தன் வசப்படுத்திக்கொண்டால் உடனே மோக்ஷ வீடு சித்திப்பது நிச்சயமெனவும், மனத்தைச் சீர்ப்படுத்த முடியாமல் அது போனவழியே விட்டுவிட்டால் மீளா நரகிற்கே ஆளாகவேண்டுமெனவும் கூறுவாராயினர்? மனமானது எதனிடத்துப் பற்று வைத்ததோ அதனிடத்து முற்றும் ஈடுபட்டு அதன்மயமாகி விடும். தான் நன்மையான தொன்றைச் சிந்திப்பின் அச்சிந்தனை முதிர்ச்சியால் எல்லாம் நன்மையாகவே காணும். தீமையான தொன்றைச் சிந்திப்பின் எல்லாம் தீமையாகவே காணும். ஒருவன் ஒரு புலியைக்கண்டு மனம் பதறி மிக்க பயங்கொண்டுவரின் அவன் கண்ணுக்கு எதிர்ப்பட்டனவெல்லாம் புலியாகவே தோன்றும். இங்ஙனம் மனத்தின் நினைப்புவலிமையால் தோன்றும் உருவை உருவெளித்தோற்றம் என்பர். சீதையின் வடிவழகைச் சூர்ப்பநகை சொல்லக்கேட்டு ஆசைமேலீட்டால் அச்சீதையின் நினைவைத்தவிர வேறெல்லாம் மறந்த இராவணன் எங்கே பார்த்தாலும் தன் கண்களுக்குச் சீதையின் வடிவமே தோன்ற அதைக்கண்டு ஆச்சரியமுடைந்து தங்கையாகிய சூர்ப்பநகையை வரவழைத்து "ஏ தங்காய்! இவள்தானோ நீ கூறிய சீதை" எனக்கேட்டான். இராமனது வடிவழகிலீடுபட்டு ஆசைமீறி எல்லாம் இராமனின் திருவுருவாகவே கண்டு நிற்கும் சூர்ப்பநகை தான் நிற்கும் இடமும் தமையன் கேட்பதும் மறந்து "இவன் தான் இராமன்" என்றுவிடை பகர்ந்தனள். அது கேட்ட ராவணன் வியப்பெய்தி நான் கண்டது பெண்ணுருவமாக நீ ஆணுருவென்று கூறுவதென்னையோ? என வினவ "அண்ணா தாங்கள்கண்ட உருவம் சீதையன்று. இங்ஙனம் தோன்றுவது தங்கள் ஆசைப் பெருக்கத்தால் தோன்றும்உருவெளித்தோற்றமேயாகும்" என்றாள். ஆயின் யான்கண்டது சரி. நீ இராமனிவனென்றனையே அதன் காரண மென்ன" என வினவ, "இராமன் என் மூக்கை யறுத்து மானபங்கம் செய்ததுமுதல் அச்சம் அதிகரித்தமையால் எனக்கு எங்குப்பார்த்தாலும் இராமன்வடிவமே காணப்படுகின்றது" என்றாள்—எனக்கம்பர் கூறுகின்றனர்.

"பொய்ந்நின்ற நெஞ்சிற் கொடியாள் புகுந்தாளை நோக்கி
நெய்ந்நின்ற கூர்வாளவ னேருற நோக்கு நங்காய்

மைந்நின்ற வாட்கண் மயில்நின்றெனை வந்தென் முன்னர்
இந்நின்றவ ளாங்கொல் இயம்பிய சீதை யென்றான்.

செந்தாமரைக் கண்ணொடுஞ் செங்கனி வாயி னோடும்
சந்தார்தடந் தோளொடுந் தாழ்தடக் கைக ளோடும்
அந்தாரக லத்தொடும் அஞ்சனக் குன்ற மென்ன
வந்தானிவ னாகுமவ் வல்வில் இராமன் என்றாள்.

பெண்பாலுரு நானிது கண்டது பேதை நீயீண்
டெண்பாலும் இலாததொ ராணுரு என்றி என்னே!
கண்பாலுறும் மாயை கவற்றுதல் கற்ற நம்மை
மண்பாலவ ரேகொல் விளைப்பவர் மாயை யென்றான்.

ஊன்றும்முணர் வப்புற மொன்றினு மோட லின்றி
ஆன்றும்முள தாநெடி தாசை கனற்ற நின்றாய்க்
கேன்றுன்னெதி ரேவிழி நோக்கும் இடங்கள் தோறும்
தோன்றும்அனை யாள்இது தொன்னெறித் தாகும் என்றாள்.

அன்னாளது கூற அரக்கனும் அன்ன தாக
நின்னால்அவ் விராமனைக் காண்குறும் நீரென் என்றான்
எந்நாள்அவன் என்னையித் தீர்வறும் இன்னல் செய்தான்
அந்நாள்முதல் யானும் அயர்த்திலன் ஆகும் என்றாள்."

ஆஆ! மனத்திற்கு எவ்வளவு வன்மையிருக்கின்றது? ஒருவனுயிர்க்கு நன்மை செய்வதும் கேடுசெய்வதும் இம்மனத்தை யன்றிப்பிறிதொன்றுண்டோ? மனம் யாதானும் ஒன்றை ஊன்றி நினைக்குமாயின் நினைக்கின்ற தான்வேறு; நினைக்கப்படுபொருள் வேறு என்பதின்றித் தானே அதுவாய்விடுகின்றது. இக்கருத்தையே இராவணன் சீதையை நினைத்து மோகித்த சமயத்தில் அவனது நிலையைக் கூறவந்த கம்பநாடர்

"சிற்றிடைச் சீதையென்னும் நாமமுஞ் சிந்தை தானும்
உற்றிரண் டொன்றாய் நின்றால் ஒன்றொழித் தொன்றை யுன்ன
மற்றொரு மனமும் உண்டோ மறக்கலாம் வழிமற் றியாதோ
கற்றனர் ஞானம் இன்றேல் காமத்தைக் கடக்க லாமோ"

எனக்கூறியிருக்கின்றார். இஃதென்னே! செய்யுளிலக்கணம் கற்கப்புக்க மாணாக்கனொருவன் அதே சிந்தனையாக உருப்போட்டுக் கற்றுவருங்கால் அவனுக்கு உணவுபடைத்த அன்னை நெய்யூற்றுதற்கு மறதியால் வேப்பெண்ணெயை எடுத்து ஊற்றினாளாக, அவன் சிந்தனை படிப்பிலேயேயீடுபட்டிருந்தமையால் கசப்பறியாது வழக்கப்படி யுண்டு சென்றான். அன்னையோ தான் மறதியால் வேப்ப நெய்யை யூற்றியதையும், மகன் படிப்பிற் கொண்ட காதல் மிகுதியால் கைப்பறியாதுபுசித்தகன்றானென்பதையும் கருதி இவனுக்குப் படிப்பில் எத்தனைகாலம் இந்த ஊக்கமிருக்கின்றதென்பதை யறிந்து கொள்ளும் பொருட்டுத் தினமும் நிம்ப தைலத்தையே சோற்றிற் பெய்துவந்தனள். இங்ஙனம் சின்னாட் சென்றபின் யாப்பிலக்கணபாடம் படித்து முடிந்தவுடன் மைந்தன்மனம் முன்னிருந்த நிலையைவிட்டுத் திரும்பிற்று. அன்று வந்து வழக்கப்படி யுண்ணும்போது "தாயே நெய் கசக்கின்றதே" என்றான். தாயுமதுகேட்டுக் "குழந்தாய்! இன்றுதான் உனக்குப் படிப்பும் கசந்தது போலும்" எனப்பகர்ந்தனள். பின்னர் அன்னை தான் செய்து வந்ததைக் கூற, மைந்தன் தான் காரிகை நூற் பாடந் தொடங்கிக் கவலையுடன் கற்று முடித்தமையைக்கூற, இருவரும் மகிழ்ந்தனர். எனக் கர்ணபரம்பரையிற் கூறுங் கதையை நோக்கினும் மனத்தைப் பற்றி மேலே கூறிப்போந்தவை யனைத்தும் மெய்ம்மை யென்பது தெள்ளிதாமன்றோ?

இந்த மனம் என்னும் யானையானது காமாதி மதங்கொண்டு, பிரபஞ்சக் காட்டிற்புக்கு, அறவகைத் தருக்களை யொடித்து, துயரக் கடலில் ஆழ்ந்து கெடாதபடி அறிவென்னும் அங்குசத்தாலடக்கி, நல்லொழுக்க மென்னும் பாசத்தாற் பிணித்து, தியானம் என்னும் கூடத்தில் நிறுத்தினால், அருளென்னுந் தெண்ணீர்பருகி யின்புறுதற்குரியதாகும். இங்ஙனம் செய்வித்தல் ஞானமென்னும் பாகனது கடமை. பாகனாகிய ஞானம் தன் கடமையைச் செய்யாவழி மதம் பொழியும் யானை தன்பாகனைக் கொன்று தொலைத்தல் போலவே மனமும் தன்பாகனாகிய ஞானத்தைக் கொன்று விடுதல் ஒருதலை.

மனத்தை யடக்குவதென்றால் சுலபமான காரியமன்று. அது கல்லினும் கடிது; கல்லைச் சிற்றுளியால் எவரும் தகர்த்துவிடலாம். இதனைத்தகர்த்தலரிது. காற்றினும் கடிது; வாயுவேகமெனக் கூறத் தக்க பிரசித்திபெற்ற காற்றுப் பொதியமலையிலிருந்து இமயமலைக் குச் செல்வதென்றால் சில காலஞ்செல்லும். மனமோ லோகாந்த ரங்கட்கும் கால் நிமிஷத்தினும் முந்திச் செல்லும். தீயினும் கொடி து; தீயை நீராலவித்து விடலாம். கடற்குள் புகினும் அருவியில் தோயினும் மனத்தீயை அவித்தலியலாது. கடலினும் பெரிது; தோணியின்றுணையால் யாவரும் கடலைக் கடத்தலமையும். இம் மனத்தைக் கடத்தல் மிக அரிது. யமனினும் அஞ்சத்தக்கது; யமன் நியதிபெற்ற ஒரு காலத்தில் கொல்வான். இப்பாவிமனமோ நிமிஷந்தோறும் கொன்றுகொண்டிருக்கும். அம்மம்ம! இதன் செய்கையை உற்றுநோக்கினால் சாபாநுக்கிரஹசீலர்களும் நடுநடுங்கி அங்கங்குலைவரன்றோ! "சிந்தையை யடக்கியே சும்மா விருக்கின்ற திறமரிது" என்றார் தாயுமானவரும்.

முற்பிறப்பிலே நாம் செய்த புண்ணிய பாவங்களெல்லாம் இப்பிறப்பிலே நாமனுபவிக்கும் சுகதுக்கங்களாக வந்து பரிணமிக் கின்றன. இப்பிறப்பிற் செய்யும் நன்மை தீமைகள் இனிவரும் பிறப்பிற்கு வித்தாகி அப்போது நமது சுகாசுகங்களாகின்றன. ஆகவே நன்மை தீமை யிரண்டும் பொன்விலங்கும் இருப்பு விலங் கும் போற் பந்தித்து நிற்பனவேயாகும். ஆகவே இருவினைப் பற் றையும் ஒழித்து "என் கடன் பணிசெய்து கிடப்பதே" எனவும், "கூடும் அன்பினிற் கும்பிட லேயன்றி, வீடும் வேண்டா விறலின் விளங்கினார் "எனவும், அருட்பெருந்தகையாளர் கட்டளை யிட்டரு ளியவாறு எவ்வித இன்பங்களையும் விரும்பாது சிவபிரான் திருவடி மலர்களையே சிந்தனை செய்யவேண்டும். இச்சிந்தனைதான் பிறவிப் பிணிக்கு மருந்தாவது. முழுமுதற் கடவுளுடன் இரண்டறக் கலப்ப தாகிய சிவசாயுச்சிய பதவியைத் தருவது. ஒருவன் மரணாந்த காலத்தில் அவன் மனம் எதைப் பற்றுகின்றதோ அதுவே அவ னுக்கு அடுத்த பிறப்பாக வந்து கூடும்.

ஆதலின் இறுதிக்காலத்தில் உலகப்பற்றில் மனம் புகாமல் சிவபிரான் திருவடி மலர்களையே மெய்யன்புடன் சிந்தனைசெய்ய

வேண்டும். உள்ளநாளுள்ளமட்டும் மாயாவலையிற் சிக்கிப்பந்திக்கப் பட்டுநின்று, பண்ட பதார்த்த பெண்டு பிள்ளைகளிடத்தே பற்று மிகக்கொண்டு வாழ்ந்து, இறுதிக்காலத்தே திடீரென்று எல்லாப் பற்றையும் விட்டொழித்து இறைவன் றிருவடி மலர்களைத் தியானிப்பதென்றால் முடியக்கூடிய தொன்றன்றே! பன்னாட் பழகிய வாசனைதானே மேலெழுந்து நிற்கும். மனைவி என் செய்வாள்? புத்திரனுக்கு விவாகமாக வில்லையே? வீடு கட்டி முடிக்கவில்லையே? யென்பன வாதிய பலவகைப் பந்தங்கள் வந்து சூழ்ந்து மனத்தைப் பிணித்துக் கொள்ளும். இந்தச் சமயத்தில் இஞ்சி தின்ற குரங்கு போலப் பசபசவென்று விழித்து மதிமயங்கிக் கண்ணீர் வடித்து மெய் நடுநடுங்கிக் கைகால் சோர்ந்து வாய் புலர்வுற்று நெட்டுயிர்ப் பெய்தி விம்மி விம்மித் தியங்குவதல்லது பரம கருணாநிதியாகிய சிவபிரான் றிருவடி நீழலைச் சிந்தித்தல் சாத்தியமன்றே? ஆதலின் கடைக்காலத்திற் சிவத்தியானம் செய்தற்கு வழி யாது? என்பதே இனி ஆராய்ச்சிக் குரிய விஷயமாயிற்று.

மரிப்பவன் மனமானது மனைவி மக்கள் பொன் பூமி முதலியவற்றைச் சிந்திப்பதற்கு என்ன காரணம்? மனத்துக்கும் அவைகட்கும் என்ன சம்பந்தம்? எதனால் இச்சிந்தனை யெழுகின்றது? என்று நீளநினைப்பிடத்து மனமானது இப்பொருள்களுடன் பிறந்ததன்று. வளர்ந்ததுமன்று. பன்னாட்பழகிய பழக்க மேலீட்டால் வந்த பற்று மிகுதியே யொழிய வேறில்லை. மனம் எதனிடத்தே அடுத்தடுத்துப் பழகுகின்றதோ அதனிடத்தே பற்றுதல் மிக்கு அதன் மயமே யாகின்றது. ஆனது பற்றி நாம் திடகாத்திரத்துடன் இருக்கும்போதே உலகப்பற்றுக்க ளெல்லாவற்றையும் சிறுகச் சிறுக விட்டு, விட்ட அளவிற் கேற்ப இறைவனிடத்தே பற்றுதலைச் செலுத்தி வருவோமாயின், நாளடைவில் எல்லாப் பற்றுக்களும் முற்று மொழிந்து சிவத்தியானமே மேற்பட்டு நிலைபெறும். இத்தியானம் வேரூன்றித் தங்கப்பெற்றால் கள்ளக் காதலனிடத்தன்பு கலந்து வைத்தொழுகும் உள்ளக் காரிகைபோல "எத்தொழிலைச் செய்தாலும் ஏதவத்தைப் பட்டாலும், முத்தர் மனமிருக்கு மோனத்தே" என்றவாறு எந்தத்தொழிலைச் செய்யுங்காலத்தும் ஈசுவரத்தியானமே முற்பட்டு நிற்பதாகும். நாம் உண்பன

உடுப்பன யாவும் சிவார்ப்பணமாகவும், எல்லாம் இறைவன் செயலே யெனவும் கடைட்பிடித்து, இன்பமெய்தினும் துன்ப மெய்தினும் சிவா என்ற மெய்ம்மொழியை மறவாது கூறிவரவேண்டும். இங்ஙனமே பழக்கத்திற் கொண்டு வந்து விட்டால் இறுதிக்காலத்தும்சிவ சிந்தனையே நிலையுறு மென்பது நிச்சயம். இதனை யல்லாது வேறு எவ்வித வுபாயங்களும் இத்துணைப் பயனுதவுவதன்று. அவாவே பிறவிக்கேது வென்பதை "அவாவென்ப வெல்லா வுயிர்க்குமெஞ் ஞான்றுந், தவாஅப் பிறப்பீனும் வித்து" என்னும் திருவள்ளுவரானும், இறுதிக்கட் போதரும் சிந்தனை அடுத்துவரு பிறப்பாகு மென்பதையும், அப்போது ஈசுவரத்தியானம் வருதற் பொருட்டு எப்போதும் அத்தியானத்திலேயேபழகிவரவேண்டுமென்பதையும்,

"மரிக்கும்போ துன்னும் வடிவினை யாவி
பரிக்கும் நினைவு பரித்து"

"ஆதலினுற் சுற்றத் தவரைநினை யாதமலன்
பாத நினைக பரிந்து" என்னும் சோமவார விரத கற்பத்தானும்,

"நின்று மிருந்துங் கிடந்து நடந்துநினை [னும்
என்றுஞ் சிவன்ற ளிணை" என்னும் வருத்த மறவுய்யும் வழியா

"உடம்பி னீங்குங் காலத்து அதனல் யாதொன்று பாவிக்கப் பட்டது அஃது அதுவாய்த்தோன்று மென்பது எல்லா ஆகமங்கட்குந் துணிபாதலின்,வீடெய்துவார்க்கு அக்காலத்துப் பிறப்பிற்கேதுவாய பாவனை கெடுதற் பொருட்டுக் கேவலப் பொருளையே பாவித்தல் வேண்டும். அதனல் அதனை முன்னே பாவித்தலாய இதனின் மிக்க வுபாய மில்லையென்பதறிக" என்னும் பரிமேலழகர் கருத்து முதலியவற்றுனும் நன்கு தெளியலாம்.

"அழுக்கு மெய்கொடுன் றிருவடி யடைந்தே
னதுவு நான்படப் பாலதொன் றுனல்
பிழுக்கை வாரியும் பால்கொள்வ ரடிகேள்
பிழைப்ப னுகிலுந் திருவடிப் பிழையேன்

வழுக்கி வீழினுந் திருப்பெய ரல்லான்
மற்று நானறி யேன்மறு மாற்றம்
ஒழுக்க வென்கணுக் கோர்மருந் துரையா
யொற்றி யூரெனு மூருறை வானே"

என்னுஞ் சுந்தரமூர்த்தி நாயனர் திருவாக்கும்,

"அங்கத்தை மண்ணுக் காக்கி யார்வத்தை யுனக்கே தந்து
பங்கத்தைப் போக மாற்றிப் பாவித்தேன் பரமா வுன்னைச்
சங்கொத்த மேனிச்செல்வா சாதல்நாள் நாயேன் உன்னை
எங்குற்றா யென்ற போதில் இங்குற்றேன் என்கண் டாயே"

என்னும் திருநாவுக்கரசு நாயனர் திருவாக்கும் மேற்கூறிப் போந் தவற்றையே வலியுறுத்துவனவா மென்க.

இதுகாறுங் கூறிப் போந்த உண்மையைக் கைக்கொண்டு எக் காலத்தும் சிவத்தியானத்தை மறவாது பயின்று வருவோமாயின் "பழக்கங் கொடியதுபார் பாறையையும் கோழி, கிழிக்கும்" என் றாங்கு எச்சமயத்தும் சிவா என்ற மெய்ம்மொழியே நாவிற் பதிந்து மேலிடும். "நற்றவாவுனை நான் மறக்கினுஞ் சொல்லு நாநமச்சிவா யவே" என்ற வண்ணம் பயிற்சி பண்ணிக் கொண்டால் எல்லாப் பேறும் எய்தல் எளிதாம். ஆதலின், "சிவாயநம வென்று சிந்தித் திருப்பார்க் கபாய மொருநாளு மில்லை" என்ற முதுமொழியையே பின்பற்றவேண்டும்.

அங்ஙனம் சிவத்தியானம் செய்து வருவோமாயின், எல்லாப் பொருள்களிடத்தும் பாலினுள் நெய்போல் வெளிப்படாதிருக்கும் பரம்பொருள் நம்மிடம் தயிரினுள் நெய்போல் வெளிப்பட்டு நின்று உண்ணப்படுவனவாகிய உண்டிப் பொருள்களானும், அநுபவிக்கப் பெறும் மனைவி முதலியோரானும், யாவரும் வணங்கத் தக்கதா கிய அரசாட்சியானும் அடையும் இன்பத்தினும் சிறந்ததொரு நல்வி ன்பத்தையே நாளும் நல்கி வினைக்கீடாய யாக்கை யொழிவில் முத் திப் பேரின்பத்தையும் தந்து வாழ்வித்தல் ஒருதலையென்க. இத னாலன்றோ? "கனியி னுங்கட்டி பட்ட கரும்பினும், பனி மலர்க்கு ழற் பாவைநல் லாரினும், தனி முடிகவித் தாளும் அரசினும், இனி யன் தன்னடைந் தார்க்கிடை மருதனே" என்றார் திருநாவுக்கரசு நாயனர்.

சங்கராசாரிய சுவாமிகள் சிவபிரானைப் பிரார்த்திக்கு மோரி டத்தில் "சுவாமி! அடியேன் மனம் குரங்கா யிருக்கின்றது. இத னால் எனக்குச் சிறிதும் நன்மையில்லை. தேவரீரோ பிக்ஷாடண மூர்த்தியாகிக் கையில் ஓட்டெடுத்துத் திரிபவராதலால் இக்குரங்கை தேவரீரே ஏன்று கொள்ளவேண்டும். பிச்சை புகுபவர் குரங்கைக் கைக்கொண்டு சென்றால் எளிதிற் பிச்சைகிட்டும் ஆதலின் தேவரீ ருக்கே ஏற்றதாகும்" என்று இக்கருத்தையே நன்கு விஸ்தரித் துக் கூறியிருத்தலும் நோக்கத் தக்கதாம். இதனால் மனத்தைச் சிவ பிரானிடத்தே சேர்க்கவேண்டு மென்ற ரகஸ்யமும், அது மிகவும் அருமையாதலின் "அவனருளாலே அவன்றாள் வணங்கி" என்ற வண்ணம் இறைவன் திருவருளாற்றான் கிடைப்பதாகும் என்ற வுண்மையும் விளக்கப்பெற்றிருத்தல் மிகவும் பாராட்டற் பால தொன்றேயாம்.

மனமானது அறிவின் வசப்பட்டு நிற்குமாயின் அதை விடப் பெறும் பேறு பிறிதொன்றில்லை. தற்காலம் மேனாட்டுக் கலைஞர் கள் 'மெஸ்மரிஸம்' என்று சொல்வதெல்லாம் தம் மனத்தைத் தாம் வசப்படுத்திக்கொண்டு தாம் மனத்துக்கு அடிமையாகாமல் நடக் கும் சிறந்த முறையேயாகும். நமது முன்னோர் கருடபாவனை என்று கூறுவதைக்கேட்டிருக்கின்றோமே. அதுதான் யாது? ஒரு வனுக்கு விடந்தீண்டிய வழி அதைத் தீர்க்கப்புக்க மாந்திரீகன் தன் ஆன்மாவை கருடனுக்கு அதிதெய்வ மாகிநிற்கும் மந்திர மூர்த்தியாகப் பாவித்துச் செபித்தலேயாம். அங்ஙனஞ் செபித்த வாலே விடந்தீர்ந்து சுகமுறுதல் பிரத்தியட்சமாம். இதனாலும் நாமறியக்கிடக்கின்றது மனத்தின் பாவனசத்தி விசேடமேயன்றோ? சிவோகம் பாவனை செய்துவரும் சீவன் முத்தர்கள் சிவமாந்தன் மைப் பெருவாழ்வெய்து தலைநூல் வாயிலாக அறிகின்றோம். சிவத்தி னிடத்தே மனத்தைச் செலுத்தி நிற்கும் பெரியாராவார் முப்பத் தாறு கருவிகளுங் கழன்று அருளிடத்தே நின்று ஞேயத்தழுந்துவ தாகிய சாக்கிராதீதா வஸ்தையுடையராய் விதி விலக்கின்றிச் செய் வனவெல்லாந் தவமாக்கொண்டொழுகுதலும், விழித்த கண்ணின ராயும் புறப்பொருளைக் காணாதலும், அங்ஙனமே செவி முதலிய

வும் புறப்பொருள்களைப் பற்றப் பெறாதலும் எதனாலெனின் அவர் தம் மனம் இறைவனிடத்திற் பின்னிக்கலந்து பிணிப்புண்டு கிடத்தலால் வேறொன்றிற் செல்லற்கிடனின்றி மனமிறந்து நிற்றலுற்றமையாலே யென்க.

"ஒழித்த நோன்பின ராடலர் பாடல ருலகம்
பழித்த செய்கைய ரழுகையர் நகையினர் பாசங்
கழித்த கண்களா லரனுருக் கண்டுகொண் டுலகில்
விழித்த கண்குரு டாய்த்திரி வீரரும் பலரால்"

என் பதாதியாக வரும் பெரியார் திருவாக்குக்களால் இதனுண்மை யறியத்தகும்.

"சினமிறக்கக் கற்றாலுஞ் சித்தியெலாம் பெற்றாலும்
மனமிறக்கக் கல்லார்க்கு வாயேன் பராபரமே"

"நின்னை யறப்பெறு கிற்கிலே னன்னஞ்சே
பின்னையான் யாரைப் பெறுகிற்பேன்—நின்னை
யறப்பெறு கிற்பேனேற் பெற்றேன்மற் றீண்டு
துறக்கந் திறப்பதோர் தாள்"

"உள்ளு ரிருந்துந்தம் முள்ளமறப் பெற்றாரேற்
கள்ளவிழ் சோலையாங் காட்டுள்ளார்—காட்டுள்ளும்
உள்ள மறப்பெறு கல்லாரே னூட்டுள்ளு
நண்ணி நடுவூரு ளார்"

என்பனவாதியாக மனத்தை வசப்படுத்துவதன் சிறப்பைப் பற்றி நம்முதியோர் கூறிவைத்த அற்புதச் செய்யுட்கள் பலவுண்டு, அவற்றையெல்லாம் விரிப்பிற்பெருகும்.

இதுகாறுங் கூறிப்போந்த வண்ணம் இடையறாப் பேரன்பு கொண்டு சிவத்தியானம் செய்து வரும்பொருட்டு வேண்டுவார் வேண்டுவதேயீயும் பரம கருணாநிதியாகியமுழுமுதற் கடவுள் முன்னின்று திருவருள் சுரந்து காத்தருள்க.

சிவத்தியானம் முற்றிற்று.

# * கல்வியறிவொழுக்கச் சிறப்பு.

கல்வி, அறிவு, ஒழுக்கம் என்ற முப்பொருள்களும் எல்லாமதத்தினர்களாலும் பாராட்டிச் சிறப்பித்துக் கூறப்பெற்றுள்ளனவாம். இவற்றின் சம்பந்தங்களையும், இவற்றின் சிறப்புக்களையும், இவை தம்முள் ஒத்த சிறப்பினவோ அன்றி ஏற்றத்தாழ்வுண்டோ என்பதையும் இனி ஆராய்வாம்.

கல்வியால் அறிவும், அறிவால் ஒழுக்கமும், இவற்றால் சிறப்பும் வருதல் பற்றி இவை ஒன்றற்கொன்று காரண காரிய சம்பந்தம் பெற்றிருத்தல் ஒருதலையென்க. ஆயின் கல்லாரிடத்து அறிவும், கல்வியுமறிவும் இல்லாரிடத்து ஒழுக்கமும், இம்மூன்றும் பெறாப்பாற் சிறப்பும் ஒரோவழிக் காண்டுமாதலின் மேற்கூறியவாறு இவற்றின் காரண காரிய சம்பந்தம் உறுதிப்பாடுறுமாறு யாங்ஙனமெனின், அற்றன்று. "கல்லாதானொட்பங் கழியநன்றாயினுங் கொள்ளாரறிவுடையார்" என்பவாகலின், கீடாக்கரம் போற் கல்லார்கட் டோன்றுமறிவு அறிஞராற் கொள்ளப்படாததும் பயன் செய்யும் ஆற்றலில்லதுமாதல் பற்றிச் சிறப்பெய்துமாறில்லையென்க. அங்ஙனமே அறிவில்லார் மேற்கொண்டுள்ள ஒழுக்கங்களும் நிகழ்ச்சிவகையால் பிறழ்ச்சியுற்றுப் பிற்பயன் விளைத்தலின் முற்பட்டு நில்லாது காலத்தால் மாறுபட்டுப் போதலுறும். இவ்வொழுக்கத்தாற் பயனென்னையோ என வினவுவார்க்கு ஏற்றவாறு விடையிறுக்கக் கூடாமையின் பிறனைத்தன் வசப்படுத்தி ஒழுக்கத்திலாக்கும் ஆற்றல் ஒருசிறிதும் பெறாது. ஆதலின் அறிவிலார் ஒழுக்கம் பயன்செய்யும் வகையிற் குறைவுபட்டதேயாம். இம்மூன்றுமில்லார் பொருளாலாதல் அதிகாரமுதலிய பிறவற்றானாதல் பிறர் மதித்தற் சிறப்புறக் காண்டுமாயினும் இச்சிறப்பு உண்மைச் சிறப்பாகாது. அவரைப் பிறர் மதித்தல் அவர்பாற் பெறும் பொருள் கருதியேனும், அவர் கொண்டுள்ள அதிகாராதிகட்கு அஞ்சியேனும் நிகழ்வதாதலின் பொருளும் அதிகாராதியும் ஒழிந்தவழி முன்னர் மதித்தவரனைவருமே முன்னிற் பன்மடங்கு பழித்தலும், அவையிருக்குங் காலத்தும் முகமனாக அவர் முன்னிலையில் மதிப்புரை கூறுவதல்லது பிற

---

* இது மேலைச்சிவபுரிச் சன்மார்க்க சபையின் ஐந்தாம் வருஷ பூர்த்திக் கொண்டாட்ட காலத்தில் (20-4-14) மு. ரா. கந்தசாமிக்கவிராயர் எழுதி வாசித்தது.

ண்டுப் பழிப்புரையே பகர்தலும் கண்கூடாக யாவருமறிவர். பயன் கருதியேனும் அச்சத்தாலேனும் மதித்தல் மதிப்பாகாது. "அவம திப்பு மான்ற மதிப்பு மிரண்டு மிகன்மக்களான் வழங்கற்பால" என் பவாகலின், தக்கார் மதித்தலே சிறப்பாகும். கல்வி யறிவொழுக்க ங்களாலடையும் இன்பத்துக்கேதுவாகிய புண்ணியப்பேறே உண் மைச்சிறப்பாம், அதனை, உண்மையில் அவற்றைப் பெற்றார் எய்தல் கூடுமேயன்றி வஞ்சித்தொழுகும் மதியிலிகட்குக் கூடாது. கூடா மையொன்றோ! அதற்கு மாறான பழியும் அதன்பலனான துன்பமும் கூடும். ஆதலின் கல்வி யறிவொழுக்கங்களை உண்மையாகப் பெற் றுச் சிறப்பெய்த வேண்டுமென்பதும், இவை யொன்றற்கொன்று காரண காரிய சம்பந்த முடையனவே யாமென்பதும் உறுதி பெற் றமை காண்க.

கல்விச்சிறப்பு:—தேயமிடை யிட்டவற்றையும் காலமிடையிட்ட வற்றையும் உள்ளவாறுணர்த்தும் ஞானக்கண்ணாதலும், தாயத்தார் கள்வராதியராற் கொள்ளப்படாமையும், கொடுக்கக் குறைபடாது வளர்தலுடைமையும் பெற்றுள்ள கல்வியென்பது தமக்கும் பிறர்க் கும் நல்லனவென்று ஆன்றோர் ஆய்ந்தறிந்துள்ள அரிய பெரிய விஷ யங்களை அவர் பொறித்து வைத்த நூல்கள் வாயிலாகவேனும், அவரு டனிருந்து பெறும் பழக்கவாயிலாகவேனும் நாம் அறிந்து கோடலே (கல்வி)யாகும். இக்கல்விதான் மனிதனை மனிதனாக்குவது. இக்கல்வி யில்லான் வடிவால் மனிதனாகத் தோற்றப்படினும் மிருகத்தோடு வைத்தெண்ணப்படுவான். "விலங்கொடு மக்க ளனைய ரிலங்கு நூல் கற்றாரோ டேனை யவர்" என்பதனுலிவ்வுண்மை காணலாம்.

கற்குமுறை:—இலக்கிய இலக்கணாதி நூல்களை நன்கு கற்றறி ந்தவர்களிடம் ஐயந்திரிபின்றித் தெளிவுறக் கற்கவேண்டும். கல்வி யறிவு நிரம்பாதவர்களிடம் கற்கப்புகுதல் குருடுங் குருடுங் கூடிக் குழியில் விழுந்தாங்கு, உள்ள அறிவையும் கெடுக்குமேயல்லது நல் லறிவைத்தராது. "கற்க கசடறக் கற்பவை" என்பது சிந்திக்கற் பாலது. நல்லாசிரியனை யடுத்து நல்ல நூல்களைக் கற்றறிவதுபோல் நல்லொழுக்கமுடைய ஆன்றோரையடுத்து நன்னடையைப் பழகிக் கற்றுக்கொள்ளல் வேண்டும். இங்ஙனமாக நன்கு கற்றார்க்கு எந்த நாடும் நாடாம். எந்த வூரும் ஊராம். எல்லாருமவரை மதிப்பர். "யாதானு நாடாமா லூராமால்" என்பது தேவர் வாக்காம். "மன் னர்க்குத் தன்றேச மல்லாற் சிறப்பில்லை கற்றோர்க்குச் சென்றவிட

மெல்லாஞ் சிறப்பு" என்பர் பெரியார். இங்ஙனம் யாண்டும் மதிப் பெய்தற்குக் காரணம் இவர் கற்கும் நூல்களானும் அறிவானும் உலகுமெய்தும் பயன்பற்றியதேயாம்.

அறிவின் தன்மை:—அறிவு, இயற்கை செயற்கை என இருவகைப்படும். இவற்றுள் இயற்கையறிவு, ஐயறிவு பகுத்தறிவு என இருவகைத்து. செயற்கையறிவு, நூலறிவு தத்துவ அறிவு என இருவகைத்து. இவையிற்றுள் ஐயறிவென்பது ஐம்பொறி வழியாக யாமும் விலங்காதிகளும் ஒப்பக்கொண்டுள்ளதே. பகுத்தறிவென்பது ஐம்பொறி வழித்தாகவன்றி மனவுணர்ச்சியாலறிவது. அதுவும் சாதாரணப் பகுத்தறிவென்றும், விசேடப் பகுத்தறிவென்றும், இருபிரிவிற்றாகும். நெருப்புச் சுடும். வெள்ளம் இழுத்துச் செல்லும். பாம்பு விஷமுடையது. என்பதாதிய சாதாரணப் பகுத்தறிவு விலங்குகட்கும் நமக்கும் பொதுவாக இயற்கையிலேயே யமைந்துள்ளது. விசேடப் பகுத்தறிவென்பது செய்யத்தக்கதின்னது, செய்யத்தகாததின்னது, இன்னது செய்தா லின்னது விளையும் என்பனவாதியாகப் பொதுவகையிற் பருப்பொருட்டாக வுணரும் மனவுணர்ச்சியேயாகும். இது விலங்கினங்கட்கின்றி மக்கட்கே விசேடமாக அமைந்துள்ளது. நூலறிவென்பது புண்ணிய பாவங்கள் மோக்ஷ நரகங்கள் இவற்றினிலையை யறிதலும், அவ்வறிதலை இடனறிந்து செலுத்தலும், இதனை இப்பொழுது இன்னவாறு இதனாற் செய்யவேண்டும், இச்செயலின் அளவிது, இச்செயலால் விளையும் பயனிது, செய்யாவழிப்படுந் தீங்கின்னது என்பனவாதி நுட்பங்களையும் நம்முன்னோர் கூறிவைத்தருளிய விதிகளையும் நூல்வழியாகத் தெரிந்து கோடலும் பிறவுமாம். இதனை

"தொட்டனைத் தூறு மணற்கேணி மாந்தர்க்குக்
கற்றனைத் தூறு மறிவு."

"இருவிழிகள் வாண்முகத்தி லிருந்தாலும் வானிரவி யெழுந் தா லன்றிக், கருதுநிலப் பல்பொருளுங் காண்டலரி தாமுலகிற் கண்போல் யாரும், பெருகியசெல் வமுமறிவும் பெற்றாலு நூற்கேள்வி பெறுவார்க் கன்றித், திருவளர்புண் ணியபாவ மிம்மைமறு மையும் வீடுந் தெரியா வன்றே".

என்பனவற்றாற்காண்க. குருவுபதேசத்தானும் பயிற்சியானும் நிலை நிலையாமை யுணர்ந்து உலகத்தையுவர்த்து வீடுபேற்றைக்

காதலித்து விரதம் தவம் முதலியவற்றைப் பற்றி நிற்கச்செய்வதே தத்துவ அறிவெனப்படும். இதனை "பிறப்பென்னும் பேதைமை நீங்கச் சிறப்பென்னுஞ் செம்பொருள் காண்ப தறிவு" என்பதனு னுணர்க. இவையிற்றுள் இயற்கையறிவின்பாற் பட்ட பகுத்தறிவும், செயற்கை யறிவின்பாற் பட்ட நூலறிவும் ஒன்றேடொன்று சேர்ந்தே பெரும்பயன் செய்யும். பகுத்தறிவு ஒரு முளைபோலும். நூலறிவு மழைபோலும். பகுத்தறிவு கண்ணெளி போலும், நூலறிவு கதிரொளி போலும். பகுத்தறிவு ஒரு புரவிபோலும், நூலறிவு அதனைநடத்தும் பாகன்போலும். பகுத்தறிவில்லார் எத்தனை நூல்களைப்படிப்பினும் பயிரில்லா விடத்து மழையும், கண்ணில்லார் முன்பு ரவியும், புரவியில்லாவிடத்துப் பாகனும் போலப்பயன்படுமா றில்லை. அங்ஙனமே நூலறிவில்லாதபோது பகுத்தறிவானது மழை முகங்காணு முளையும், ரவி யொளி காணு விழியும், பாகனில்லாத பரியும்போலப் பயன்படுமாறில்லை. சிலர் பல நூல்களைக் குருட்டுப்பாடம் பண்ணி உருப் போட்டிருந்தும் அந்நூல்களா லடையும் பயனை அவரும் பிறரும் அடையாமையும், சிலர் கூரிய மதியுற்றிருந்தும் நூலறிவின்மையால் அவர் அறிவு நேர் வழியிற் செல்லாது போதல் பற்றி அவர்க்கும் பிறர்க்கும் பயனற்றுமையும்நேரிற் காண்டுமன்றே. ஆதலின் இவ்விருவகை யறிவும் ஒருசேரப் பெற்றுரே அறிவுடையாராவர். அவரெய்தாப் பொருள் எதுவுமில்லை. அவரையே யாவரும் மதித்துப் பின் பற்றுவர். அல்லாதார் எத்தனை பொருள் பெற்றிருப்பினும் இல்லாரேயாவர் "அறிவுடையா ரெல்லா முடைய ரறிவிலார், என்னுடைய ரேனு மிலர்" "அறிவுடையோனுறரசுஞ் செல்லும்" என்பன பெரியார் பணித்தவையாம்.

ஒழுக்கம்:—கல்வியின்பயன் அறிவாதல் போல் அறிவின் பயன் ஒழுக்கமாம். எவரும் தத்தம் வருணச்சிரமங்கட்கு ஏற்ப ஆன்றோர் ஒழுகியவாறே விதித்தன செய்தும் விலக்கியன வொழித்தும் நடத்தலே ஒழுக்க மெனப்படும். இதனல் இது இத்தனை வகைப்படுமென வரையறுக்க முடியாவாறு பல வேறுவகைப் படுமேனும் இல்லற வொழுக்கம் துறவற வொழுக்கம் என இருபிரிவினுள் பெரும்பாலும் அடங்குமென்க. இல்வாழ்வுழி விருந்தோம்பலாதியவற்றின் வழுவாமை வேண்டும். துறந்துழி மெய்யுணர்தல் அவாவறு

த்தல் முதலியவற்றின் வழுவாமை வேண்டும். இங்ஙனம் ஒழுகு முறையின்கண் "இல்லறம் பொருளளவிற் கேற்பவும், துறவறம் யாக்கைநிலைக் கேற்பவும் செய்யலாம்" என்பவாகலின், விதித்தனசெய்தல் தத்தமக்கியன்றவரை வஞ்சமின்றிக் கொள்ளலாம். விலக்கியன வொழித்தல் விஷயத்தில் இவ்விதி செல்லாது. விலக்கியன வற்றை விலக்கியே தீரவேண்டும். விலக்குங்கால் இயன்றளவு விலக்குவேனென்றல் பொருந்தாது. இங்ஙனம் திடமாகக் கொண்டு உண்மையினின்று சிறிதும் பிறழாது ஒழுகுதலே ஒழுக்கமெனப்படும்.

ஒழுக்கச்சிறப்பு:—இல்லறத்தார் துறவறத்தார் இன்னவ ரிருவரும் இன்னின்னவற்றைச் செய்யவேண்டும், இன்னின்ன வற்றை விலக்க வேண்டும் எனத் தேவர் கூறிய ஒவ்வோ ரதிகாரங்களுமே ஒழுக்கமாகவும், ஒழுக்கம்என உடன்பாட்டு முகத்தாலோ ரதிகாரமும், கூடாவொழுக்கம் என, எதிர்மறை முகத்தாலோ ரதிகாரமும் வேறு வேறு பிரித்துக்கூறியதை நோக்குங்கால் ஒழுக்கத்தின் பெருஞ்சிறப்பும், அஃதின்மையின் அவமதிப்பும் நன்கு வலியுறுத்துவதே அவர் கருத்தாதல் எளிதுபுலனும். ஒவ்வொருவருக்கும் தம்முயிரினுஞ் சிறந்தபொருள்பிறிதில்லை. அவ்வுயிரினுஞ் சிறந்தது ஒழுக்கமென்பார். ஏனெனில், உயிர்தானே விழுப்பந்தருவதில்லை. ஒழுக்கமோ எல்லாவிழுப்பத்தையும் தானே தரவல்லதாகும். நல்லொழுக்கத்தாற் சகல நன்மையையும் அடைதல் கூடும். இம்மை மறுமை யிரண்டிடத்தும் புகழையும் வீடு பேற்றையும் தருவது ஒழுக்கமேயாம். ஏனைத் தீ யொழுக்கமோ இம்மையிலிழிவையும் மறுமையில் நரகையும் தந்து இரண்டிடத்துந் துன்பத்துக்கே யாளாகச் செய்யும்.

"ஒழுக்கம் விழுப்பந் தரலா னொழுக்கம்
உயிரினு மோம்பப் படும்"

"நன்றிக்கு வித்தாகு நல்லொழுக்கந் தீயொழுக்க
மென்று மிடும்பை தரும்" என்பனவற்றை நோக்குக.

•• கல்வியும் அறிவும் ஒழுக்கமில்வழி யொருசிறிதும் பயன் படாவாம். கல்வியின்பயன் அறிவும், அறிவின்பயன் ஒழுக்கமுமாமென மேலே கூறினுமாதலின்; ஒழுக்கமற்றவர் கல்வியறிவு, ஒளியற்றவிழி

யும், மணமற்றமலரும், உயிரற்ற வுடலும் போலும். தற்பயனிழத்தலால் ஒளியற்ற விழியெனவும், பிறர்க்குப்பயன்படாமையாலும் பிறரால் விரும்பப்படாமையாலும் மணமற்ற மலரெனவும், தன்னைச்சார்ந்தாரே யருவருத்துப் புறங்காட்டிட் டொழித்தலால் உயிரற்ற வுடலெனவும் மூன்றுவமைகள் கூறவேண்டிற்றென்க.

"உலகத்தோ டொட்ட வொழுகல் பலகற்றுங்
கல்லா ரறிவிலா தார்"

"உலகத்தா ருண்டென்ப தில்லென்பான் வையத்
தலகையாய் வைக்கப் படும்"

"ஓதி யுணர்ந்தும் பிறர்க்குரைத்துந் தாமடங்காப்
பேதையிற் பேதையா ரில்"

"ஓதலிற் சிறந்தன் றொழுக்க முடைமை"

என்பனவற்றால் இம் மூன்றனுள்ளும் ஒழுக்கமே சிறந்த தென்பது நன்கு தெளிவுறுத்தப்பட்டமை காண்க.

ஒழுக்கமில்லாதவர் எத்தனைதான் அறநூற்பொருள்களை விரித்துரைத்தாலும், எவ்வளவுதான் இனிமையாகப் பேசினாலும் அவர் கூற்றுப் பிறர்க்கு நலஞ்செய்யாது. அதனை உலகமுங் கொள்ளாது. அவர் கூறும் விஷயம் மிகவுயர்ந்ததாயினும் அவரது அசுத்தவாயிற் பட்டுவருதலால் அதன் பரிசுத்தமிழந்து அங்கணத்துப்பட்ட அமுதம்போலாமென்க. "கற்றுப்பிறர்க்குரைத்துத் தாம்நில்லார் வாய்ப் படூஉம் வெற்றுரை" என்பதும் இதனாலேயாம். ஒழுக்கமுடையவரிடத்திலே தான் அறவுரைகளைக் கேட்க வேண்டும். அவருரையே மெய்ந்நூற் பொருள்களை வேறுபாடின்றிக் கரதலாமலகம் போல் விளக்கிப் பெரும்பயன் விளையச் செய்யும்.

"இழுக்க லுடையுழி யூற்றுக்கோ லற்றே
யொழுக்க முடையார்வாய்ச் சொல்"

"வறுமையான் மடமை தன்னால் வருந்திநெஞ் சழியுங் காலை
உறுதிசெய் துணையாங் கற்ற வுணர்வினை வளர்க்கு மென்றும்
இறுதியில் லாத வின்ப மீட்டுமா தலினாற் கற்று
மறுவறுமொழுக்கமுள்ளார்வாய் மொழிபோற்றல்வேண்டும்."

என்பன வாதிய பிரமாணங்கள் பலவுண்டு.

ஆயினும் ஒழுக்கமென்பது தற்பயன் குறித்த தாகும். அவர் நடையைப் பின்பற்ற வேண்டுமென்பது சரி. ஒழுக்க மில்லாதவர் அறநூற்பொருள்களை யுள்ளவாறு கூறுவாராயின் அதனைக் கேட்டலால் தீங்குண்டோ? என்னின், கூறுதும். ஒழுக்க மில்லாதவர் சொல்லுங்கால் நூற்பொருள்களை யுள்ளவாறே கூறிவருவாராயினும் அவர் நெஞ்சம் தமது தீயொழுக்கத்தை மறைக்கும் வஞ்சகமுடைத்தாதலால் கேட்பவரது அறிவைத்தமது சொற்சாதுரியத்தால் மயக்கித் தம்வசப்பட்டபோது சிறுகச் சிறுகத் தமது போலிக்கொள்கைகளை அற்றம் பார்த்துப் புகட்டி நம்பச்செய்து பிற்கேடு பெரிதுவிளைத்துவிடுவர். ஒழுக்க முடையவரோ மறந்தும் இவ்வாறு கூறார். "ஒழுக்க முடையவர்க் கொல்லாவே தீய, வழுக்கியும் வாயாற் சொலல்" என்பது மெய்ம்மொழியாகும். ஒழுக்கமற்றவராயிருந்தும் ஒழுக்கமுள்ளவர்போலவேடத்தானுலகை வஞ்சிப்பவர் அதிபாதகரேயாவர். இத்தகைய போலி வேடதாரிகளைக் கண்டு வேட மாத்திரையால் மயங்கி அவர் சொற்குச் செவி கொடுத்தால் இருமையினும் தீங்கு பயக்கும். இவரது சொல்லும் செயலும் மாறுபாடுடைமையாலும் இவரால் உலகத்துக்குப் பல்வகையானும் தீங்கு பலித்தலானும் இவரைப் பற்றி நமது புலவர் பெருமான்கள் கூறும் சில கவிகளை யீண்டுத் தருதும்.

வேதாகமங்கண் மிருதிநூல் புராண மிக்கவெக் கலைகளும் பயின்று
போதமே சொல்லிப் போதமங் குணராப் புலையருங்கழுதையு நிகராங்
கோதிலா வாசங் குங்குமம் பளிதம் குலவிய புழுகடை பாணி
யேதமே சுமந்த கழுதையீங்கிவனி னேற்றமாம்வஞ்சமின்மையினால்.

மிக்கவறி வுடையாரைப் போன்றுமுடற் பற்றனைத்தும் விடுத்தார் போன்றும்
தக்கவழக்கிடத் தினுயர் திணைவினைபஃறிணைவினையாச்சமையச்சொற்றும்
தொக்கபடர்க் கைப்பெயர்முன் னிலைப்பெயரா கிடவுரைத்துஞ் சூழ்வதெல்லாம்
பக்குவமின்மடவோரைமயக்கியவர்கைப்பொருளைப்பறித்தற்கன்றே.

"நெஞ்சிற் றுறவார் துறந்தார்போல் வஞ்சித்து
வாழ்வாரின் வன்கணாரில்."

எனப்பலவாம். இவற்றால் ஒழுக்கந் திறம்பியவர் கல்வி யறிவுஒருவர்க்கும் பயன்படா வென்பதுபெறப்பட்டது.

உலகியலாகிய இருளை யகற்றுதற்குக் கல்வியறிவை விளக்கென வும், அவ்விளக்கிற்கு அருளே நெய்யெனவும், அந்நெய்யைத் தரும் பாலே ஒழுக்கமெனவும் கூறுவர். இதனால் ஒழுக்க முடையவரே அருளுடையராவர். அருளுடையரே அறிவுடையராவர். அறிவு டையரே உலகிருளைக் கடந்துய்வர் என்பது பெறப்படும். இத னால் எல்லாநலனையும் தருவது ஒழுக்கமே யாமென வலியுறுத் தியவாறும். இங்ஙனம் கூறுவது அறநெறிச் சாரம்.

"இருளே யுலகத் தியற்கை யிருளகற்றுங்
கைவிளக்கே கற்ற வறிவுடைமை—கைவிளக்கி
னெய்யேதன் னெஞ்சத் தருளுடைமை நெய்பயந்த
பால்போ லொழுக்கத் தவரே பரிவில்லா
மேலுலக மெய்து பவர்" என்பதாம்.

இதுகாறுங் கூறியவாற்றான் கல்வி யறிவொழுக்கங்களின் தன் மைகளும், அவற்றை யுண்மையாகப் பெற்றாரே பெற்றாராவரென் பதும், மற்றோர் அற்றார் என்பதும், இவையொன்றற் கொன்று கார ணகாரிய சம்பந்தமுள்ளன வென்பதும், கல்வியின் சிறப்பு இத்த கைபதென்பதும், கற்குமுறையித்தகையதென்பதும், அறிவின்வகை விரிகள் இன்னின்ன வென்பதும், அறிவின்பயன் இத்தகையதென்ப தும், ஒழுக்கம் இன்னதென்பதும், அஃது இத்தனைவகைப்படுமென் பதும், ஒழுக்கத்தாலாம்பயனின்னதென்பதும், தீயொழுக்கத்தாலாம் தீமையின்ன தென்பதும், கல்வியும் அறிவும் ஒழுக்கமுற்று லன்றிப் பயன்றராவென்பதும், கல்வியறிவினும் நல்லொழுக்கமே மிகச் சிறந்ததா மென்பதும், நல்லொழுக்க முடையவரே யறநூற் பொருள்கூறற் குரியாரென்பதும், அஃதில்லார் கூறினும் கேட்டல் அடாதென்பதும், மெய்யொழுக்கமற்றவர் வேடமாத்திரையானே உலகத்தை வஞ்சிக்கும் கொடியரென்பதும், அத்தகையார் வேட த்தைக் கண்டு மயங்கலாகாதென்பதும், இருமைப்பயனையுந்தருவது ஒழுக்கமேயாமென்பதும் பிறவும் விளங்கும்.

கல்வியறிவொழுக்கச் சிறப்பு முற்றிற்று.

# (8) முத்தி நெறி.

திருச்சிற்றம்பலம்.

மாசில் வீணையு மாலை மதியமும்
வீசு தென்றலும் வீங்கிள வேனிலு
மூசு வண்டறை பொய்கையும் போன்றதே
யீச னெந்தை யிணையடி நீழலே.

உள்ள மலநீக்கி யோங்கு சிவாநந்த
வெள்ளந் திளைத்துவாய் மேவுதலே—கள்ளவிழ்பூங்
கொத்தார் விரிசடையார் கூறுஞ் சிவாகமத்திற்
சித்தாந்த முத்தியெனத் தேர்.

முத்திநெறியென்பது முத்தி + நெறிஎன இருசொற்கள் சேர்ந்த ஒரு தொடர்மொழியாம். முத்தி, மோக்ஷம், வீடு என்பன ஒரு பொருட்பன்மொழிகளே. முன்னிரு மொழியும் வடசொற்கள். ஈற்றது தமிழ்ச் சொல். இம் மும்மொழிகளும் ஒரு பொருளையே பயப்பன. வீடௌனற்கு விடுதலென்பதே பொருளாம். நெறிஎன ற்கு வழியென்பது பொருளாம். இருசொற் பொருளுஞ் சேருங் கால் விடுதற்கு வழியென்பது பெறப்படும்.

இனிவிடுவது யாது? விடப்படுவது யாது? ஏன்விடவேண்டும்? விட்ட வழிப்படும் பயன் என்னை? விட்டபின் செல்லும் நெறியாது? அந்நெறியிற் சேறற்கு வேண்டுவன யாவை? என்பனவாதிய வினுக்கள் நிகழும். இவைகளைப்பற்றி ஆராய்ந்து கூறுவாம்.

(1) விடுவது யாது? யாதா மொருபொருளைத் தனதெனக் கொண்டவனே அப்பொருளை விடுதற்குரியனுவன். ஆதலின் அநாதியேயுள்ள பதி பசு பாசம் என்னும் முப்பொருள்களுள் பசு மாத்திரமே பாசத்தைக் கொண்டதாயிருத்தலின் அதுவே விடுதற்கு உரிமை யுடைத்தாகும். என்னை? உடைமையாதற்குரிய பாசம்

சடப்பொருளாதலின் அதுநீங்க உடைமை கோடற்குரிய சித்துப் பொருளாகியபதி பசு இரண்டில் பதி ஒன்றையும் பற்றாது நின்மலமாய் நிர்விகாரமாய் விளக்க மெய்தியிருப்ப பசுமாத்திரம் பாசமாகிய சடப்பொருளைப்பற்றி மலபந்த முடையனுய் விகாரியாயினமையால் அப்பசுவே விடுதற்கு உரிமை பெற்றவாறு காண்க.

(2) விடப்படுவது யாது? மேற் கூறப்பட்ட முப்பொருள்களுள் சர்வ வியாபகமாயிருக்கிற பதி முற்றுணர்வு முதலிய குணங்களையுடைய கடவுளாதலாலும், பசு அக்கடவுட்கு அடிமையாதலாலும் பதியை விடுமாறில்லை. ஏனைப்பாசம் சடப்பொருளாதலாலும் பசுவைப் பற்றுதலும் விடுதலும் அதனியல்பாதலாலும் அப்பாசமே விடப்படு பொருளாகும். பாசமெனவே ஆணவமாயை கன்மங்களாகிய யாவுமடங்கும்.

(3) ஏன் விடவேண்டும்? பாசமானது பசுவின் அறிவை மயக்கி இச்சையையுண்டாக்கித் தனுகரணபுவன போகங்களைக் கொடுப்பித்து நல்வினைதீவினைகளிற் புகுத்தி இன்பதுன்பங்களை யடைவித்து இறைவனடிமலர் சேரவொட்டாது பந்தஞ்செய்திருக்தலால் அதனை விடவேண்டுவது அவசியமாம். நல்வினையும் வேண்டப்படாததோவெனில், பொன்விலங்குபோலப் பந்திக்குஞ் சுபாவத்ததேயாதலின் அதுவும் வேண்டப்படாத தென்பதே முடிவாம்.

(4) விட்டவழிப் படும்பயன்யாது? பாச சம்பந்தமிருக்குங்காறும் இறைவனடிமலர் காணப்பெறுமாறில்லை. பந்த நீக்க மெய்திய வழியே இறைவனடிகாண்டல் கூடும். இதனை "செம்மலர் நோன்றாள் சேரலொட்டா அம்மலங்கழீஇ" என்பதனானறிக. முன்னர்த் தடைசெய்து நின்ற பாசம் நீங்கவே இருள் நீக்கத்தில் ஒளிதோன்றுதல் போலப் பாசநீக்கத்தில் அருளொளி தோன்றும். அதுவே துரிய நிலையெனப்படும் அருணிலையில் தோன்றும் சுகப்பிரபையாம். இந்நிலையில் ஆன்மா சென்று பற்றற்கு வேறு பொருளின்மையால் பதியையே முற்றும் பற்றிநிற்கும். அந்நிலையே அதீதநிலையாம். அதில் அடைவதே சிவத்துவ விளக்கமாகிய பரமசுகமாம். இந்தப் பரமசுகமே நித்தியானந்தமாம். இதனையடைதலே பாசத்தை விட்ட வழிப்படும் பயனும்.

இங்ஙனம் பாசநீக்கமாகிய முத்தியைக் கூறுமிடத்து உலகத்தி லுள்ள பலவேறு சமயத்தாரும் தத்தம் அறிவிற் கேற்பத்தாம் தாம் கண்டவாறே யானைகண்ட குருடர்போன்று இதுமுத்தி இதுமுத்தி யென்று பலதிறப்படுத்திக் கூறுவர்.

மகளிரின்பமே முத்தியென்ப ரொரு சாரார். ஐந்து கந்தமுங் கெடுதலே முத்தியென்ப ரொரு சாரார். முக்குணமும் அடங்குதலே முத்தியென்ப ரொரு சாரார். மலநீக்கமே முத்தி யென்ப ரொரு சாரார். யாக்கை யழியாமையே முத்தியென்ப ரொரு சாரார். ஊகித்தறிதலே முத்தி யென்ப ரொரு சாரார். உயிர்க்கேடே முத்தியென்ப ரொரு சாரார். அட்டமா சித்தியடைதலே முத்தி யென்பரொரு சாரார். யாதொரு புலனுமின்றிக் கல்லைப்போற் கிடத்தலே முத்தி யென்ப ரொரு சாரார். இவை யனைத்தையும் பூர்வ பக்கஞ்செய்து கீழ்ப்படுத்தி உயர்வுடையதாக விளங்கு வதுதான் சித்தாந்தமுத்தி யெனப்படும். அதுதான் ஆன்மா பாச நீக்கமெய்திச் சிவத்தோடிரண்டறக் கலந்திருத்தலாம். இதனை

"அரிவையரின் புறுமுத்தி கந்த மைந்தும்
அறுமுத்தி திரிகுணமும் அடங்கு முத்தி
விரவுவினை கெடுமுத்தி மலம்போம் முத்தி
விக்கிரக நித்தமுத்தி விவேக முத்தி
பரவுமுயிர் கெடுமுத்தி சித்தி முத்தி
பாடாண முத்தியிவை பழிசேர் முத்தி
திரிமலமு மகலவுயிர் அருள்சேர் முத்தி
திகழ்முத்தி யிதுமுத்தித் திறத்த தாமே"

என்னும் சிவபிரகாசத் திருவிருத்தத்தான் நன்குணரலாம்.

இத்தகைய சித்தாந்தமுத்தி அபரமுத்தி பரமுத்தியென இரு வகைப்படும். இவற்றுள் அபரமுத்தியாவது:—

சாலோக சாமீப சாரூப சாயுச்சியம் என நால்வகையாம்.

சாலோகமாவது:—அவ்வவர் தொண்டிற்கேற்ற புவனபதி புல கங்களினெய்தி ஒருவர் மனையிற் பணிசெய்யும் அகத்தொண்டர்க் குளதாம் உரிமைபோல அவ்வவ்வுலகத்துள் யாண்டுந் தடையின்றி யியங்கி அவ்வப்போகங்களை நுகர்ந்து வாழ்வதாம்.

சாமீபமாவது:—அவ்வளவேயன்றி மைந்தர்க்குளதாம் உரிமை போல அவ்வப்புவன பதிகட்கு அணுக்கராய் வைகி அவ்வப்போக விசேடங்களை நுகர்ந்து வாழ்வதாம்.

சாரூபமாவது:—அவ்வளவே யன்றித் தோழற் குரிய உரிமை போல அவ்வப்புவன பதிகளோடொத்த வடிவமும் ஒத்த அணிகல னும் ஒத்த போகநுகர்ச்சியும் பெற்று வாழ்வதாம்.

சாயுச்சியமாவது:—அவ்வப்புவன பதிகளோடொத்த வடிவின ராய் வாழ்தன் மாத்திரையேயன்றி அவ்வப்புவன பதிகளான் அதி ட்டிக்கப்பட்டு அவ்வவ்வதிகாரங்களை அவ்வவர் போலவே செய்து கொண்டு வாழ்வது. இது அபரமுத்திக்கட்படும் சாயுச்சியமல்லது பரமுத்தியாகிய முடிவான சாயுச்சியமன்று. அது பின்னர்க்கூறப் படும்.

இந்திரன் பிரமா விட்டுணு ருத்திரன் முதலியோரது பதவிக ளெல்லாம் அபரமுத்தியாகிய பதமுத்திகளேயாம். இப்பதமுத்திக் குக் காலவளவுண்டு. அததற்கேற்பட்ட காலங் கழிந்தபின்னர் மீட் டும் பிறந்து பக்குவ மெய்தியக்கால் பரமுத்தி பெறுவர். இதனை

"தானமியா கந்தீர்த்த மாச்சிரமந் தவங்கள்
சாந்திவிர தங்கன்ம யோகங்கள் சரித்தோ
ரீனமிலாச் சுவர்க்கம்பெற் றிமைப்பளவின் மீள்வ
ரீசனியோ கக்கிரியா சரியையினி னின்றோ
ரூனமிலா முத்திபதம் பெற்றுலக மெல்லா
மொடுங்கும்போ தரன்முனிலா தொழியினுற்ப வித்து
ஞானநெறி யடைந்தடைவர் சிவனை யங்கு
நாதனே முன்னிற்கி னணுகுவர்நற் றாளே"

என்னுஞ் சிவஞான சித்தித் திருவிருத்தத்தானறிக.

பரமுத்தியாவது:—முடிவான சாயுச்சிய முத்தியாம். இதனை நெறிகூறுமிடத்து விளக்குதும். இது ஜீவன்முத்தி விதேகமுத்தி என்றிருவகைத்தாம்.

ஜீவன்முத்தியாவது:—எடுத்த சரீரம் நீங்குமுன்னரே பசு கரணங்களெல்லாம் பதிகரணங்களாகப்பெற்று மனக்கண்ணிற்குத்

தோன்றுவனவெல்லாம் பதியின் வடிவமாகவே கண்டு விழித்தகண் குருடாகி ஓடும் பொன்னும் ஒப்பக் கண்டு விருப்பு வெறுப்பு இன்ப துன்ப விவகாரமற்று "எல்லாமு னடிமையே எல்லாமு னுடைமையே யெல்லா முனுடைய செயலே" எனக்கொண்டு பார்க்கு மிடமெங்குமொரு நீக்கமற நிறைகின்ற பரிபூரணானந்த பரவசப் பட்டு நிற்கும் நிலையேயாம். இத்தகைய நிலையை யடைந்தவர்களே ஜீவன் முத்தராவர். இவர் "எத்தொழிலைச் செய்தாலு மேதவத்தைப் பட்டாலு, முத்தர் மனமிருக்கு மோனத்தே" என்றவாறிருப்பர். இவர்க்கு நல்வினை தீவினையில்லை. மூவகை வினையுள் ஏனையிருவினையு முன்னரே நீங்க எஞ்சி நின்ற பிராரத்தவினை தீருங்காறும் உடல் விடாமையால் அதனைக் கொண்டிருந்தும் இடையறாது சிவத்துவ விளக்கத்திலே சிவானந்தானுபூதிச் செல்வரா யிருந்து உடல் நீங்கியவுடன் பரவெளியிலே சிவத்துடன் இரண்டறக் கலப்புறுவர். இதனை,

"பரஞானத் தாற்பரத்தைத் தரிசித்தோர் பரமே
பார்த்திருப்பர் பதார்த்தங்கள் பாரார் பார்க்க
வருஞானம் பலஞான மஞ்ஞான விகற்பம்
வாச்சியவா சகஞான வயிந்தவத்தின் கலக்கந்
தருஞானம் போகஞா திருஞான ஞேயந்
தங்கியஞா னஞ்சங்கற் பனைஞான மாகும்
திருஞான மிவையெல்லாங் கடந்தசிவ ஞானம்
ஆதலாற் சீவன்முத்தர் சிவமேகண் டிருப்பர்

புண்ணியமேல் நோக்குவிக்கும் பாவங்கீழ் நூக்கும்
புண்ணியனைப் பூஜித்த புண்ணியத்தி னாலே
நண்ணியஞா னத்தினா லிரண்டனையு மறுத்து
ஞாலமொடு கீழ்மேலு நண்ணானாகி
எண்ணுமிக லோகத்தே முத்திபெறு மிவன்றான்
எங்கெழிலென் ஞாயிறெமக் கென்றுகுறை வின்றிக்
கண்ணுதல்தன் நிறைவதனிற் கலந்து காயம்
கழிந்தக்கா லெங்குமாய்க் கருதரன்போ னிற்பன்"

எனவருஞ் சிவஞானசித்தித் திருவிருத்தங்களா லறிக.

விதேகமுத்தியாவது :—உடல் நீங்கியவழி ஆன்மா பாசநீக்கம் பெறுதலால் சிவத்துவம் விளங்கப்பெற்றுப் பதியுடனிரண்டறக்கலந்து நித்தியானந்த மெய்துதலாம்.

ஆயின் இறைவன் பெத்தான்மாக்களிடத்தும் முத்தான்மாக்களிடத்தும் ஒப்ப நிற்றலால் பாசம் நீங்கிய வழிமட்டும் காணப்படுவானென்பதென்னை? யெனிற் கூறுதும். படலசம்பந்தத்தால் ஒளி மழுக்கமுற்ற கண்ணுக்கும் அஃதின்மையால் ஒளி விளக்கமுற்ற கண்ணுக்கும் ஆதித்தன் சமமாய் நின்றாலும் அவ்வாதித்தன் ஒளி மழுங்கிய கண்ணுக்கு மாலை யிருட்டாகத் தோன்றுவனன்றி ஒளி விளங்கிய கண்ணுக்குத் தோன்றுமாறு போலத்தோன்றான். அது போல முதல்வனும் பெத்தர் மாட்டும் முத்தர் மாட்டும் அத்துவிதமாய் ஒப்பநின்றாலும் பாசத்தானாகிய ஏகதேச அறிவுடைய பெத்தர்க்குப் பாசஞானமேயாய்த் தோன்றுவன். அப்பாசப் பிணிப்புக்கு ஏதுவாகிய அபக்குவம் நீங்கித் தனது திருவருட்பார்வையாற் பத்தி செய்து தன்னையறிதற்குரிய பக்குவராயினர்க்கு பாசத்தானாகிய அவ்வேகதேச அறிவை மாற்றிப் பூரண அறிவு விரியச்செய்து அவரெதிரே விளங்கித் தோன்றுவன். இதனானே முதல்வன் பெத்தம் முத்தி இரண்டினும் ஒப்ப நிற்பினும் ஒப்ப விளங்காமையும் ஆன்மாவுக்கு முத்தி நிலையின் அறிவு நிகழுமாறும் அது முதல்வனது அறிவாகிய அருட்கண்ணை யின்றி அமையாமையும் பெறப்பட்டன.

இனி ஆன்மா முதல்வன் வசமாய் ஒன்றுபட்டுக் கூடுங்கால் பண்டை ஏகதேச அறிவுகெட்டுக் கூடுமோ கெடாது கூடுமோ? எனின், கெட்டுக்கூடுமெனிற் குணங்கெடவே குணியுங் கெடுமாதலிற் கூடுமாறில்லை கெடாது கூடுமெனின் ஏகதேச அறிவுகெடாத வழி வியாபகப்பொருள் விளங்குதலின்மையால் கூடுமாறில்லை. மற்றெங்ஙனங் கூடு? மெனின், ஏகதேச அறிவைச் செய்யும் ஆணவம் கன்மம் மாயை யென்னும் மலங்கண் மாத்திரையே கெட்டொழிய ஆன்மா தண்ணீரைச் சார்ந்த உப்புப்போல முதல்வன் திருவடியைத் தலைப்பட்டு நிற்குமென்க.

சித்பொருளாயும் வியாபகப்பொருளாயு மிருக்கு மான்மா சித்பொருளாயும் வியாபகப் பொருளாயுமிருக்கும் இறைவனிடத்தில்

தன் நிலைகெட்டு ஒன்றுபடுகல் எவ்வாறு பொருந்தும்? சம்பந்த விசேடம் எத்தகையது? எனின், இதனை ஆசிரியர் சிவஞான யோகிகள் சிவஞானமாபாடியத்தின் கண்ணே அத்துவிதச் சொற்பொருளுணர்த்து மிடத்து விரித்தருளி யுள்ளார். அதனை ஒருவாறு சுருக்கிக் கூறுதும். அத்துவித சம்பந்தம் சிவசீவ சம்பந்தமாகிய சித்தாந்த முத்தியெனப்படும். இச்சம்பந்தம ஆற்று நீருங் கடனீருஞ் சேர்தல் போலும் ஐக்கிய சம்பந்தமுமன்று. குணகுணியாய் நிற்கும் தாதான்மிய சம்பந்தமுமன்று. சமவாயமுமன்று. விரலும் விரலுஞ் சேர்தல் போலும் சையோக சம்பந்தமுமன்று. யாதானு மோரிலைபுபற்றிக் கூறப்படும் சொரூப சம்பந்தமுமன்று. மற்றென்னையோ? எனின், தாதான்மிய சம்பந்தமாவது குணகுணிகளாயாதல் அவயவ அவயவிகளாயாதல் வேற்றுமைப்பட்டு ஒன்று இரண்டாய் நிற்றற்கேதுவாகிய தாதான்மியமும், அங்ஙனமே இருபொருள் அதுவதுவாய் ஒற்றுமைப்பட்டு ஒன்றாய் நிற்றற்கேதுவாகிய தாதான்மியமும் என இருவகைப்படும். இவற்றுள் முன்னது தாதான்மியமெனவும் பின்னது அத்துவிதமெனவும் கூறப்பெறும். இதனால் "பிரிவறும் அத்துவிதமாகும் சிறப்பினதாய்" என ஆசிரியர் கூறுதலுங்காண்க. இச்சிவ சீவ சம்பந்தம் ஒருவாற்றாற் கலப்பும் ஒருவாற்றான் உடனாதலும் ஒருவாற்றான் வேறாதலும் உண்மைபற்றி "அது கடலிற் சென்றடங்கும் ஆறுபோலெனவும், வானத்தில் வானும் மணத்தில் மணமும் போலெனவும், பண்ணையும் ஓசையும் போ" லெனவும் ஒருபுடை யொப்புமைபற்றி ஆசிரியர்கள் ஆங்காங்குக் காட்டுப வாகலின் ஒன்றற்கொன்று முரணுவதாகக் கொண்டு மலையற்க.

இம்மூன்று தன்மையும் தன்பாற்றோன்ற இவற்றின் வேறாய் அத்துவிதத்துக்குச் சிறந்தெடுத்துக் காட்டும் உவமையாவது ஆன்மபோதமும் கண்ணொளியுந் தம்மு ளத்துவிதமாய் நிற்றலாமென்க. "காணுங் கண்ணுக்குக் காட்டுமுளம் போற் காண வுளத்தைக் கண்டு காட்டலின்" எனவும், "காட்டக்கண்டிடுந் தன்மையுடைய கண்ணுக்கேயு முயிர் காட்டிக் கண்டிடுமாபோ லீசனுயிர்க்குக் காட்டிக் கண்டிடுவன்" எனவுங்கூறும். இதுவே இருபொருள் ஒரு தன்மையான் ஒற்றுமைப்பட்டு நிற்கும் தாதான்மியமாகிய அத்

துவிதமாம். கால்+தலை=காறலை. தாள்+தலை=தாடலை எனச் சேருங்கால் லகரமும் தகரமும் றகரமாகவும் ளகரமும் தகரமும் டகரமாகவும் நிற்கும். ஆயினும் அந்த றகர டகரங்களைத் தனித் தனி ஓரெழுத்தென்றாவது ஈரெழுத்தென்றாவது கூறற்கியலாது நிற்றலை உதாரணமாகக் கூறுவாருமுண்டு. ஒருபடி நீருடன் ஒரு படி உப்புக்கலந்தால் உப்பு முழுதும் நீராகி, ஒருபடி ஆகுமன்றி இரண்டுபடி யாதலில்லை. இங்ஙனமே சிவனுஞ் சீவனும் பொருள் வகையா லிரண்டாகவும் கலப்புவகையா லொன்றாகவும் இருத்தல் காண்க. இதுவே சைவ சித்தாந்த முத்தியென்க. இனி ஆன்மா பசுகரணங்களெல்லாம் பதிகரணமாகப் பெற்றுப் பதித்துவமெய்து மெனில் இறைவனைப் போலப் பஞ்சகிருத்தியஞ் செய்து தானு மொரு பதியாகுமோ? என்னில், அற்றன்று. எக்காலத்தும் ஆன்மா இறைவனுக்கு அடிமையேயாம். பெத்தகாலம் முத்திகாலம் மத்தியகாலம் என்னும் முக்காலத்தும் ஆன்மா அடிமையாதலை "அவையுடைமை ஆளாம் நாமங்கு" எனவும் "ஈறலா ஒன்று பலவாறே தொழும்பாகுமங்கு" எனவும் "உம்பர்பிரான் உற்பத்தி யாதிகளுக்குரிய னுயிர் தானுஞ் சிவானுபவ மொன்றினுக்கு முரித்தே" எனவும் ஆசிரியர்கள் கட்டளையிட்டருளுமாற்றா னுணர்க.

அற்றேல் முத்தான்மாக்கள் பஞ்சகிருத்தியஞ் செய்திருப்பதாக நூல்களிற் கூறப்படுகின்றவாறென்னை? எனின், இரும்பை யதிட்டித்துநின்ற அக்கினியாற் சுடப்பட்டதை இரும்பாற் சுடப்பட்ட தென்றாற் போல முத்தான்மாக்களை அதிட்டித்து நிற்கின்ற இறைவன் செய்தருளிய பஞ்ச கிருத்தியங்களை முத்தான்மாக்கள் செயலாகக் கூறுதல் ஆதார இலக்கணையேயன்றி வேறின்மையறிக.

இனி இத்தகைய முத்தியைத் தலைப்படும் நெறியாது? என ஆராய்வாம். பதிபுண்ணியமே நெறியாகும். அது பொதுச்சிவ புண்ணியம், சிறப்புச் சிவபுண்ணியமென இருவகைத்து. பொதுவாவது:—சிவபுண்ணியத்துக்கு அங்கமாகிய சிவதீக்ஷையின்றிச் செய்யப்படுவது. சிறப்பாவது:—சிவதீக்ஷை பெற்றுச் செய்யப்படுவது. தீக்ஷையினாற்றான் மோக்ஷங் கிட்டுமெனவும், தீக்ஷையின்றி மோக்ஷமடைய விரும்புவோர் கோலின்றி நடக்கத் தொடங்கிய குருடர் போல்வர் எனவும் ஆகமங்கள் விரித்தோதுவனவாம். இச்சிவபுண்

ணிபம் மற்றும் பல திறப்பட்டு விரியும் ஆயினும் சரியை கிரியை யோகம் ஞானம் என நால்வகையி னடங்கி அவற்றில் ஒவ்வொன்று சரியையிற் சரியைமுதல் நந்நான்காகி ஞானத்தின் ஞானமீறாகப் பதி னாறு வகைப்படும்.

சரியையிற் சரியை முதலியன:—சிவாலயம் அலகிடல் மெழுகல் முதலியன சரியையிற் சரியை. விநாயகக்கடவுள் முதலிய ஒரு மூர்த்தியைப் பூஜித்தல் சரியையிற் கிரியை. மனத்தில் உருத்திரக் கடவுளைத் தியானித்தல் சரியையில் யோகம். அத்தியான பாவனை யின் உறைப்பால் ஓரனுபவ வுணர்ச்சி நிகழ்தல் சரியையில் ஞானம்.

கிரியையிற் சரியை முதலியன:—சிவபூஜைக்கு வேண்டப்படும் உபகரணங்களெல்லாம் செய்துகோடல் கிரியையிற் சரியை. சிவாகம விதிப்படி ஐவகைச் சுத்தி முன்னாக சிவலிங்க வடிவில் செய்யும் பூஜனை கிரியையிற் கிரியை. அகத்தே பூஜை, ஓமம், தியானம் மூன் றற்கும் மூவிடம் வகுத்துக்கொண்டு செய்யப்படும் அந்தரியாகம், கிரியையில் யோகம். அவ்வந்தரியாக உறைப்பின்கண் ணிகழும் ஓரனுபவ வுணர்ச்சி கிரியையில் ஞானம்.

யோகத்திற் சரியை முதலியன:—இயமம் நியமம் ஆசனம் பிரா ணாயாமம் என்னும் நான்கும் யோகத்திற் சரியை. பிரத்தியாகார மும் தாரணையும் யோகத்திற் கிரியை. தியானம் யோகத்தில் யோ கம். சமாதி யோகத்தில் ஞானம். இந்த யோகம், சகளம் சகளநிட்க ளங்களைப்பற்றி நின்று செய்யும் சாலம்பயோகமும் நிட்களத்தைப் பற்றி நின்று செய்யும் நிராலம்பயோகமும் என இருவகைத்து. இவற்றை விரிப்பிற் பெருகும்.

ஞானத்திற் சரியைமுதலியன:—ஞான நூல்களைக் கேட்டல் ஞானத்திற் சரியை. சிந்தித்தல் ஞானத்திற் கிரியை. தெளிதல் ஞானத்தில் யோகம். நிட்டைகூடல் ஞானத்தில் ஞானம். இவை ஞானபூஜை யெனவும்படும்.

சரியை தாசமார்க்கம், கிரியை புத்திரமார்க்கம், யோகம் சக மார்க்கம், ஞானம் சன்மார்க்கம் என முறையே பேர் பெறும். சரியை சாலோகத்திற்கும், கிரியை சாமீபத்திற்கும், யோகம் சாரூ பத்திற்கும், ஞானம் சாயுச்சியத்திற்கும் வழிகளாம். சரியை முத லிய மூன்றும் சாலோக முதலிய மூன்று பதவிகளைக் கொடுத்தன் மாத்திரையே யன்றி ஞானத்தை உதிப்பித்தற்கும் ஏதுவாய் நிற்கு மென்பர். இதனை

"சன்மார்க்கஞ் சகமார்க்கஞ் சற்புத்ர மார்க்கம்
தாதமார்க் கம்மென்று சங்கரனை யடையும்
நன்மார்க்க நாலவைதாம் ஞான யோக
நற்கிரியா சரியையென நவிற்றுவதுஞ் செய்வர்
சன்மார்க்க முத்திகள்சா லோக்கியசா மீப்ப
சாரூப்ய சாயுச்ய மென்றுசதுர் விதமாம்
முன்மார்க்க ஞானத்தா லெய்துமுத்தி
முடிவென்பர் மூன்றினுக்கு முத்திபதமென்பர்"

என்னுஞ் சிவஞான சித்தித் திருவிருத்தத் தானறிக.

மேலே கூறிய அபரமுத்தியைச் சார்ந்த சாயுச்சிய முத்தி சரியையின் ஞானம், கிரியையின் ஞானம், யோகத்தில் ஞானமாகிய மூவகை ஞானங்களா லடையும் பதமாம்.

பரமுத்தியின் முடிவான சாயுச்யமென்பது ஞானத்தில் ஞானத்தாற் கூடப்பெறுவதாம்.

அதுதான் முடிவானதும் மேல் ஒன்றில்லாததுமாகிய உயர்ந்த முத்தியென்பர். அதுவே சித்தாந்த முத்தியெனப்படும். அந்த முத்தியைத் தருவதே ஞானமார்க்கமாகிய சன்மார்க்கமாம்.

இதனை

"பத்திநெறி நிலைநின்று நவகண்ட பூமிப்
பரப்பைவல மாக வந்தும்
பரவையிடை மூழ்கியு நதிகளிடை மூழ்கியும்
பசி தாக மின்றி யெழு நா
மத்தியிடை நின்றுமுதிர் சருகுபுனல் வாயுவினை
வன்பசித னக்கடைத்து
மவுனத்தி ருந்துமுயர் மலைமுழை தனிற்புக்கு
மன்னுதச நாடி முற்றும்
சுத்திசெய் தும்மூல ப்ராணனோ டங்கியைச்
சோமவட் டத்த டைத்தும்
சொல்லரிய வமுதுண்டு மற்பவுடல் கற்பங்க
ளோறுநிலை நிற்கவீறு
சித்திசெய் தும்ஞான மலதுகதி கூடுமோ
சித்தாந்த முத்தி முதலே
சிட்கிரி விளங்கவரு தக்ஷிண மூர்த்தியே
சின்மயா னந்த குருவே."

என்னும் தாயுமானவர் திருவாக்கானறிக.

இனி பாசநீக்கந்தானே முடிந்த பொருளோ? என்னின் கூறு தும்: இருள் நீக்கத்தில் ஒளிவிளங்கல்போல பாசநீக்கத்தில் அருள் விளங்குவதாம். ஒளிவிளங்குதல துணையாகப் பொருள்களை உள்ள வாறு கண்டுணருமாறுபோல அருள் விளங்குதல் துணையாக பதிப் பொருளை உள்ளவாறு கண்டுணர்தலமையும். யாதானு மொன்றைப் பற்றி நிற்றலல்லது தனித்து நிற்கும் ஆற்றலில்லாத ஆன்மா ஆண் டுப் பற்றற்கு வேறுபொரு ளின்மையானும் ஏனைப் பொருள்களை யெல்லாம் முன்னரே கண்டு கண்டு உவர்த்து நீக்கி விட்டமை யானும் அவ்வான்மா பதிப்பொருளையே பற்றிநின்று சிவானுபவா னந்தப் பேறெய்தும். அனுபவம் அழுந்தி யறிதல். ஆனந்தம் சுத்த சாட்குண்ய பரிபூர்த்தி. ஆகவே ஆன்மா சிவத்தினிடத்திலே அழு ந்தி அறிந்து சுத்த சாட்குண்ய பரிபூர்த்திப் பேறெய்திப் பரவெளி யிற் கலந்துறுவதே பரசாயுச்ய முத்தியென்றுணர்க. இந்நிலையை யடைந்தார்க்கு இறைவன் எவ்வாறிருப்பானெனில், அடியில் வரும் சிவஞான சித்தித் திருவிருத்தத்தாற் காண்க. அதாவது

"இரும்பைக்காந் தம்வலித்தாற் போலிபைந்தங் குபிரை
பெரியிரும்பைச் செய்வதுபோ லிவனைத்தா னாக்கி
அரும்பித்திந் தனத்தையன லழிப்பதுபோன் மலத்தை
யறுத் தமலன் அப்பணைந்த உப்பேபோ லணைந்து
விரும்பிப்பொன் னினைக்குளிகை யொழிப்பதுபோ லடக்கி
மேளித்துத் தானெல்லாம் வேதிப்பா னாகிக்
கரும்பைத்தே னைப்பாலைக் கனியமுதைக் கண்டைக்
கட்டியையொத் திருப்பனந்த முத்தியினிற் கலந்தே."
என்பதாம்

இந்நெறியிற் சேறற்குபாயங்களாவன:—உலகப் பொருள்களி டத் துவர்ப்புக் கோடலும், சிவானந்தத்தில் இச்சை மீதூர்தலா கிய அன்பு கோடலும், மெய்யடியாரோ டிணங்குதலும், அல்லாதா ரினத்தை அணுகாது விடுதலும், மெய்யடியார் வேடமும் ஆலய மும் இறைவனெனவே கொண்டு வணங்கலும் இவைபோல்வன பிறவுமாம்.

உலக பதார்த்தங்கள் மாட்டு வெறுப் பெய்தியக்கால் இறைவ னிடத்து அன்பு செல்லும். உண்மையன்பரிணக்கம் அதனை நிலை பெறச்செய்யும். பொய்யன்பராகிய சிவவேடக் கள்வர் மும்மலக்

களினுங் கொடியவரென்பர். மும்மலங்கள் இலக்கு வாய்த்துழி மட்டும் அறிவை மறைத்தற்கு ஏதுவாதல் மாத்திரையேயாம். இலக்கு வாயாத வழியும் வாய்க்குமாறு செய்துகொண்டு பல உபாயங்களானும் தம்மோடொப்ப விபரீத உணர்வு கொள்ளச் செய்வராதலின் சிவபத்தியில்லாத பொய்வேடதாரிகளை அவற்றினு மஞ்சி விட்டொழிதலே அறிவுடைமைக்குச்சால்பாகும். மெய்யன்பர் வேடத்தையும் ஆலயத்தையும் இறைவனாகவே கொண்டு வழிபடவேண்டு மென்பது பாலினுள் நெய்போல் எங்கும் நிறைந்த இறைவன் அங்கே தயிரின் கண் நெய்போல் விளங்குதலால் அவசிய மாயிற்று.

இதனானன்றே "செம்மலர் நோன்றாள் சேரலொட்டா
அம்மலங் கழீஇ யன்பரொடு மரீஇ
மாலற நேயம் மலிந்தவர் வேடமும்
ஆலயந் தானு மரனெனத் தொழுமே"

எனவும், "முத்திநெறி யறியாத மூர்க்கரொடு முயல்வேனைப்
பத்திநெறி யறிவித்துப் பழவினைகள் பாறும்வண்ணஞ்
சித்தமல மறுவித்துச் சிவமாக்கி யெனையாண்ட
அத்தனெனக் கருளியவா றார்பெறுவா ரச்சோவே."

எனவும், ஆசிரியர்கள் பணித்தருள்வா ராயினர். விரிப்பிற் பெருகும்.

இது காறுங் கூறிய தொகைப் பொருளாவன:—முத்தி நெறி யென்ற சொற்பொருள் இனையவென்பதும், விடுதற்குரியது ஆன்மாவே யென்பதும், விடப்படுவது பாசமே யென்பதும், பாசத்தாலெய்துந் துன்பங்கள் இவையென்பதும், பாசத்தை விட்டவழி எய்துவது இது வென்பதும், அப்பொழுது அறியப்படு பொருள் இதுவென்பதும், அறிந்தவழி யெய்தும் இன்பம் இனையதென்பதும், அதுவே முத்தியென்பதும், அம்முத்தி இத்தனைவகைத் தென்பதும், அவற்றுட் பரசாயுச்சியமே உயர்ந்த தென்பதும், அம்முத்தியை யடையும் நெறிகள் இத்தனை யென்பதும், அவற்றுட் சிறந்தது சன்மார்க்கமே யென்பதும், அம்மார்க்கத்திற் செல்லுதற்கு வேண்டு முபாயங்களிவை யென்பதும் பிறவுமாம்.

முத்திநெறி முற்றிற்று.

# (9) ஆலயந்தொழுவது.

"ஆலயந்தொழுவது சாலவுநன்று" என்பதற்கு தேவாலயத்தை வணங்குவது மிகவு நல்லது என்பதுபொருள். இனி ஆலயமென்பது யாது? அது எதன்பொருட்டு எவ்வாறு அமைக்கப் பெறுவது? ஏன் அதைத்தொழ வேண்டும்? அதனால் எய்தும் பயன் என்? என்பனவாதிய பல விஷயங்களை ஆராய்தல் இவ்விடத்து ஏற்றதாகும்.

ஆலயம், அண்டாலயம், பிண்டாலயம், மானதாலயம், பிரதிட்டாலயம் என நான்கு வகைப்படும். இவற்றுள் இங்கே கூறவந்தது பிரதிட்டாலயத்தையேயாம். அறிவின் ஆரம்பகாலத்திலேயேபோதிக்கவந்த நூலாதலினென்க. பிரதிட்டாலயம் என்பது திருமதில், கோபுரம், பலிபீடம், துஜஸ்தம்பம், மூர்த்திகள் முதலாக அமைக்கப்பெற்றுப் பற்பல ஸ்தலங்களிலும் கண்கூடாக நன்குவிளங்குவனவேயாம். மேற்சொல்லிய ஒவ்வொன்றும்இன்னபடியிருக்கவேண்டுமென்று ஆகமாதி நூல்கள் விரித்துக்கூறும், இத்தகைய ஆலயங்களையும் மூர்த்திகளையும் வணங்கவேண்டியவிதையும் பலவேறு வகைப்படும். மதத்துக்கும் காலத்துக்கும் இடத்துக்கும் தக்கபடி முன்னமே நமது பெரியோர்களால் இவ்வரையறையனைத்தும் சாஸ்திரவாயிலாகவும் வழக்கமுறையாகவும் ஏற்படுத்தப் பெற்றுள்ளன. இந்தஏற்பாட்டின்படி ஆலயத்துட்சென்று கடவுளை வணங்கிவருதல் நம்மில் யாவரும் அறிந்ததே. தற்காலத்தில் கடவுள் வணக்கத்துக்கு ஆலயம்வேண்டுவதா? எங்கும்நிறைந்து சுட்டமுடியாப் பரம் பொருளாகி விளங்கும் கடவுளைஓர் ஆலயத்தில்எழுந்தருளுவித்துவணக்கமுதலிய செய்தல் அவசியமா? என்பன ஆதியசங்கைகள் சிலரால் வெளிப்படுகின்றன. பாசத்தால் பந்திக்கப்பட்ட ஆன்மாவானது முற்றுணர்ச்சியில்லாமலும் அறிந்ததையும் மறக்கும் சுபாவமுடையதாயும் மனம் ஒருவழிப் படப்பெறாததாயும்இருத்தலால் அந்த ஆன்மாவினது அறிவின் தகுதிக்கு எதையும் ஓர்நியதிப்படுத்தாவிடில் அதன் நிலை ஸ்திரப்படாமல் மறப்பெனுங்கடலில் வீழ்ந்து கெட்டேபோகும். ஆதலின் கடவுள் வழிபாடு எப்போதும் செய்து ஏகாக்கிர சித்தமு

ற்றுச்சலன மற்ற நிலையையடைந்து அதனல் மோக்ஷ மடையும்படி யிருக்கிற ஆன்மவுணர்ச்சிக் கேற்பவே கோயிலை யமைத்துங் கோபுரங்கட்டிக் கடவுளை யெழுந்தருளச் செய்து வாத்திய முதலிய முழக்கத்தாலும் தீபாலங்கார முதலிய ஒளியாலும் செவியறிவும் கண்ணறிவும் அடுத்தடுத்து அவைகளிற் செல்லும்படியாகவும், அப்படிச் செல்லும் போதெல்லாங் கடவுள் சிந்தனை மேலிடும்படியாகவும் அமைத்துவைத்த நமது முன்னோர் மதிவலிமை மிகப்பாராட்டற்பாலதே. தொன்று தொட்டு இவ்வழக்கம் இல்லாதிருப்பின் கடவுளைப்பற்றிய தியானமே உலகத்தை விட்டு ஓடிப்போயிருக்கும் என்பதுறுதி. நாம்வெளியேறிச் செல்லுங்காலத்தில் ஒரு நண்பர் வீட்டைக்கண்டவுடனும், அவர் பேசுந்தொனியைக் கேட்டவுடனும் அந்தச்சிநேகிதரைப்பற்றிய நினைவு நமக்கு வருகிறதன்றோ? அதுவரையில்லா நினைவு அப்போதுவந்ததற்குக்காரணம் வீட்டுக்காட்சியும் வார்த்தையின் ஒலியுமல்லவா? இதுபோல் மாயையிற்சிக்குண்டு மயங்கிக்கிடந்த நம்அறிவிற்குக் கடவுளைப்பற்றிய அறிவும் பக்தியும் கொடுப்பது ஆலயமே என்பது பிரத்தியக்ஷப்பிரமாணம். ஆலயத்தில் மணியடித்த ஓசைகேட்டவுடன் பயபக்திமேலிட்டு வணங்குவர் பல்லோர். இங்ஙனமே உற்சவாதிகளெல்லாம் ஆன்மஞானம் பிறவழியிற்சென்று மயங்குங்காலை அதனைத் திருப்பிக் கடவுளுணர்ச்சியிற் கூட்டக்கருதியே அமைக்கப்பெற்றனவாம்.

ஆனல் கடவுளைத்தானே வணங்கவேண்டும். ஆலயத்தை வணங்கும்படி கூறுவது எதன்பொருட்டு? என்னிற்கூறுதும்,

ஆலயம் என்னுஞ் சொல்அதனுள்ளிருக்கும் கடவுளையுங்குறிக்கும். அன்றியும் ஆலயத்துட்சென்று கடவுளைத் தெரிசித்து வணங்குதல் எல்லாருக்கும் இயலாதது பற்றியும், திருமதில் கோபுரமாதியஆலய உறுப்புக்களை வணங்கும் வணக்கம் கடவுள் வணக்கமாகவே விதித்தமையானும் எல்லாருக்கும் பொருந்துமாறு ஆலயந்தொழுவது என்று கூறியவாறுகும். எந்த மதஸ்தர்களும் தங்கள் தங்கள் கடவுளை வணங்குவதற்கு ஓர்இடம் ஏற்படுத்தி அதனுட்சென்று நியதிப்படி வணங்கிவருதல் இன்றும் யாவரும் அறிந்ததன்றோ? இதனலன்றோ "மூர்த்திதலந்தீர்த்த முறையாய்த்தொடங்கினர்க்கோர் வார்த்தைசொலச் சற்குருவும் வாய்க்கும் பராபரமே" எனத்தாயுமான

வர் கூறினர். சைவசமயாசாரிய சுவாமிகளும் "கோலக்கோபுரக் கோகரணஞ்சூழாக் கால்களாற் பயனென்" எனத்திருவாய் மலர்ந்தருளினர். இப்படிப்பட்ட உதாரணங்கள் பலவுள. திருக்கோயில் கட்டுவித்துப் பேறுபெற்றோர் சரிதமும் பலவுள. ஆலயவணக்கத்தைப்பற்றிக் கோஷிக்காத புராணமுமுண்டோ? இல்லை. இதைநோக்கும் மாணவர்கட்கு ஓர் சிறுகதைகூறுதும். இரண்டு சிநேகர்கள் ஒரு நாள்மாலையில் சந்தித்தனர். ஒருவன் கோயிலுக்குப்போக மற்றவனை யழைத்தான், மற்றவனோ அதைமறுத்து வேசிவீட்டுக்குப் போக அழைத்தான். முடிவில் அவரவர் எண்ணப்படியே ஒருவன் கோயிலுக்கும் மற்றவன் வேசிவீட்டுக்கு மேகினர். கோயில் சென்றவன் காலில் கல்தட்டிச் சிறிது காயப்பட்டு மீண்டான். வேசியகஞ்சென்றவன் திரும்பும்போது ஒரு பொற்காசு கண்டெடுத்து மீண்டான். பின் இருவரும் சந்தித்துப் பேசுங்கால் பொற்காசெடுத்து வந்தவன் அக்காசைக்காட்டி "நண்பனே! நான்வேசி வீடுசென்று பொற்காசு எடுத்து வந்தேன். நீகோயில் சென்று ரத்தக்காயப்பட்டுவந்தாய்" என்றுகூறிக் கேலிசெய்தான். அவ்வேளை ஒருபெரிய சோதிடர் வந்து இருவர் வாய்மொழியும் கேட்டு இருவர் ஜாதகமும்பார்த்துப்பலன் கூறினர். அதாவது—கோயில் சென்றவனுக்கு அன்று நவக்கிரகப்பலன்படி உத்திரக்கல் தலையில் விழுந்து மண்டையுடைய வேண்டியதென்றும் அவன்நல்ல காரியத்தில்சென்றிருந்தானதலின் கடவுள் கருணையால் "தலை மட்டாக வந்தது முடிமட்டாக" என்றபடி அற்பக்காயத்துடன் தீர்ந்தது எனவும், பொற்காசு எடுத்தவனுக்கு அவன்ஜாதகப்படி அன்றுபெரிய ரத்தினப்புதையல் கிடைக்க வேண்டியதெனவும் அவன்தீய காரியத்தில் சென்றுபாவஞ்செய்தானதலின் அதற்குப்பதில்ஒருசிறியபொன்காசோடுஅவன் அதிர்ஷ்டம் தீர்ந்ததெனவும் கூறினர் என்று நம்முதியோர்கள் நமது பாலப்பருவத்தில் புகலக் கேட்டிருக்கின்றோம். இதுபொய்க்கதையாயினும் நன்மைதீமையின் பலாபலனைச் சிறுவர்க்கு விளக்குவதாகலின் இவண் குறிக்கப்பெற்றதாயிற்று. ஆலயத்துட்சென்று வரும்போதெல்லாம் அடியார் பழக்கம் ஏற்படலாலும் அந்தநேரம் முற்றும் சிந்தனை நல்வழியிற் பழகிப் பழகி முதிர்ச்சி பெற்றுப்பக்குவப்பட்டு முத்தியடைதற்கு ஏதுவாக முடிதலாலும் 'நன்று' என்றுமட்டுங் கூறாது "சாலவுநன்று" என்றுவற்புறுத்தியதாகும்.

இனி ஆலயத்திருப்பணியைப் பற்றியும் சிறிது கூறுதும்.

நம் தேசத்தில் சேர சோழ பாண்டியர்கள் என்னும் மூவேந்தர்கள் காலத்திலும் அதற்கு முன்னுள்ளவர்கள் காலத்திலும் சைவ வைணவ ஆலயத் திருப்பணிகள் அவ்வக்காலத் தரசர்களாலே மிகவும் சிறப்பாகப் பரிபாலிக்கப்பட்டு வந்தன. இங்ஙனம் பழமையானவை 1008 சிவாலயங்களெனவும், 108 திருப்பதிகளெனவும் பேர்பெற்றுள்ளன. கோயிலில்லாவூரில் குடியிருத்தல் பாவமெனவும், கோயிலில்லாவூர் அடவிகாடேயாமெனவும் நம்முதியோர்கள் கருதிவந்திருக்கின்றார்கள்.

"திருக்கோயிலில்லாத திருவி லூருந் திருவெண்ணீ றணியாத திருவி லூரும், பருக்கோடிப் பத்திமையாற் பாடா வூரும் பாங்கினொடு பலதளிக ளில்லா வூரும், விருப்போடு வெண்சங்க மூதா வூரும் விதானமும் வெண்கொடியு மில்லா வூரும், அருப்போடு மலர் பறித்திட் டுண்ணா வூரு மவையெல்லா மூரல்ல வடவி காடே"

"கண்ணுதலா லபனோக்குங் கண்களே கண்கள் கறைக்கண்டன் கோயில்புகுங் கால்களே கால்கள், பெண்ணொருபா கனைப்பணியுந் தலைகளே தலைகள் பிஞ்ஞகனைப் பூசிக்குங் கைகளே கைகள், பண்ணவன்றன் சீர்பாடு நன்னாவே நன்னா பரன்சரிதை யேகேட்கப் படுஞ்செவியே செவிகள், அண்ணல்பொலங் கழல்நினைக்கும் நெஞ்சமே நெஞ்சம் அவனடிக்கீ ழடிமைபுகு மடிமையே யடிமை" என்பனவாதிய அருமைத் திருவாக்குகள் பலவுண்டென்க.

அன்றியும் பூர்வ அரசர்கள் தங்கட்குவரும் வருவாயெல்லாம் கடவுளுடைமையாகவே கொண்டு அக்கடவுளின் குற்றேவலாளிகளுள் தாமும் ஒருவராகக் கருதி எந்தவேளையும் கடவுள் பக்தியுடையராய்ப் பூஜா கைங்கர்யங்களைச் சிறிதும் வழுவாது நடத்தித் தங்கள் பொருளையும் ஆலயங்களிலேயே சேமித்துவைத்து வந்தனர். இந்த ஆலயங்கள் மட்டுமே எக்காலத்தும் அழியாது விளங்கும் என்பது அவர்கள் கருத்து. அதனாற்றான் ஒவ்வொரு பழைய ஆலயங்களிலும் அநேக சரித்திரங்களை (கல்வெட்டு) சிலாசாஸனமாக எழுதிவைத்துள்ளார்கள். இங்ஙனம் சிலாசாஸனங்கள் எழுதிவைத்திருப்பதனாற்றான் நம்முன்னோர்கள் சரிதங்கள் சிலவேனும்

இக்காலத்தார் அறிந்துகொள்கின்றார்கள். இவ்வாறு தொன்றுதொட்டு நம்மவர் மேற்கொண்டு நடத்திவந்ததாகிய திருப்பணித் தருமம் பிற்காலத்தில் மகமதியர்களால் பலவிடங்களில் நிலைகுலைந்தன. நமது பிரிட்டிஷ் கவர்ன்மெண்டார் அரசாட்சி செய்யவந்த காலமுதல் எவ்விதமான இடையூறுமின்றி முன்னிருந்த திருப்பணிகள் யாவும் நிலைபெற்றன. (பிரிட்டிஷ் கவர்ன்மெண்டாரிடம் நம்மவர்களிதன் பொருட்டு நன்றிபாராட்டவேண்டுமென்பதொருதலை.) ஆகவே முன்னிருந்த திருப்பணிகள் மட்டும் நிலைத்தனவேயன்றிப் புதிய திருப்பணிகளை யியற்றவும், சிலமானவற்றைப் புதுக்கவும் நம்மவர்களுக்கு அறிவும் பொருளும் ஆற்றலுஞ் செல்வாக்குமில்லை. பின்னர் நாட்டுக்கோட்டை நகரத்தார்கள் என்ற வணிக மணிகள் வர்த்தகத்தாற் பிரபலமுற்றுப் பெரும்பொருளீட்டி விளக்கமுறத் தொடங்கியவுடன் அவர்கள் யாவரும் மிக்க சிவபக்தியாளர்களாகி, பழைய கோயில்களையெல்லாம் முன்னிலும் சிறப்பமையும்படி புதுக்கியும், புதிய கோயில்கள் பலவிடங்களில் கட்டியும் இப்புண்ணியத்தைப் பாதுகாக்க முன்வந்தார்கள். இந்த வணிகமணிகள் மற்றெல்லாப் புண்ணியங்களைப் பார்க்கிலும் சிவாலயத் திருப்பணித் தருமமே மிகமேலானதென்ற உறுதிப்பாட்டுடன் ஒருவர் பின் ஒருவராகப் பலபேர்கள் பலவிடங்களில் சிவாலயத் திருப்பணி வேலைகளைத் தொடங்கிச் செவ்வையாகச் செய்துமுடித்து வருகின்றனர். இந்தச் செட்டிப்பிள்ளைக ளில்லாவிட்டாலிதற்குள் எத்தனையோ சிவாலயங்கள் பேர் தெரியாதனவாகி மறைந்து பட்டிருக்கும். இவர்களைப் போலச் சிறப்பாக நடத்த யாவாராலுமே முடியாது. இதனை யாவரும் மறுக்கமாட்டார்களென்றே நினைக்கின்றோம்.

சிவாலயத் திருப்பணிக்காக ஒரு செங்கல் கொடுத்தவர் எத்தனையோ காலம் வரை திருக்கைலாசமலையிலின்ப முற்றிருப்பாரென்றும், மற்றும் பலவாறு விசேஷித்தும் நம் நூல்கள் கூறுகின்றன. அவற்றையெல்லாம் விரிக்கிற் பெருகும். "செயற்கரிய செய்வார் பெரியர்" என்றபடி இந்த வணிக மணிகளிப்பெரும் புண்ணியத்தைக் காயிக்கின்றனர். இது நம்மவர் பலராலும் மெச்சிப் போற்றிப் புகழப்படும் பெருங்காரியமாகவும், தற்காலத்தில், சிலர் "கோயில் கட்டுதலால் சிறிதும் பயனில்லை. இது வீண் செயலா

கும்" என்றும் மற்றும் தமக்குத் தோன்றியவாறு பலவிடங்களில் பிரசங்கிக்கின்றனர். யாதானுமொரு புண்ணியஞ் செய்யத் தொடங்கினவர்களை அவ்வழியிலேயே மேலு மேலும் ஊக்கி உற்சாகப்படுத்தலே அறிவுடையோர் கடன். சிவாலயத் திருப்பணிகளால் வரும் நன்மைகளைப்பற்றிச் சமய முறைப்படி நூல்கள் கூறுவதொரு புறமிருக்க 'மறுமையில் அடையும் பலன்களையே அவைகள் கூறுகின்றன' இம்மையிலிதனால் பலர் அடையும் நன்மைகளுக்கு எல்லை யில்லையே. 10 லட்ச ரூபா ஒரு திருப்பணிக்குச் செலவாயிற்றென்றால் அப்பத்து லட்சமும் நம் சுதேசத் தொழிலாளிகட்கே கொடுக்கப்பட்டு அவர்கள் தொழிலை மிகவும் அபிவிருத்தி செய்து வளர்த்துவருவது பிரத்தியட்சமன்றோ? சுதேசிகளின் தொழிலபிவிருத்தியாவதால் தேசநன்மை மிகப்பெருகுமென்பதை யறியாதார் யார்? இங்ஙனம் இகத்திலும் பரத்திலும் நன்மையே விளைக்கின்ற இச்சிவ புண்ணியத்தைக் குறை கூறுதல் சிறிதும் அடாது. இச்சிவ புண்ணியமும் புண்ணிய சீலர்களும் செழித்தோங்குமாறு திருவருள் நிறைக.

முரிந்து வீழ்ந்தன வெடித்தன வுடைந்தன முதிய
நெரிந்த வாகிய கோபுர நெடுமதில் பிறவுந்
தெரிந்து முன்னையிற் சீர்பெறப் புதுக்குவோர் பண்டு
புரிந்து ளோர்பெறும் புண்ணிய நான்மடங் குறுவார்.

மெய்ய னாலயப் பணியுடல் விருத்தியைக் குறித்துச்
செய்து ளோர்பெறும் பயனுமொண் மகமெலாஞ் செய்தா
ரெய்து மாறரி தென்றிடி னுறுதியோ டியற்று
முய்தி யாளருக் குரைத்திட வேண்டுவ தெவனோ.

எட்டுச் செங்கலி னாயினு மீர்ம்புனல் வேணி
வட்டச் சென்னியா னாலயத் திருப்பணி வகுத்த
லொட்டிப் பெற்றவிவ் வுடற்பய னவதென் றுணர்வீ
ரட்டுத் தீவினை யைந்தவித் தொழுகுமந் தணர்காள்.

# (10) குருவழிபாடு.

குருவழிபாடு என்பதற்குக் குருவுக்குச் செய்யும் வணக்கம் என்பது பொருளாம். குரு என்பது வடசொல். கு எனற்கு இருள் அல்லது அஞ்ஞானம் என்று பொருள். ரு எனற்கு நீக்கம் அல்லது ஒளி என்று பொருள். ஆகவே அஞ்ஞானமாகிய இருளை நீக்கி ஞானமாகிய ஒளியைக் கொடுப்பவரே குரு எனப்படுவாரென்பர். தன்னின் வேறுகாது ஒற்றுமைப்பட்டுத் தோன்றும் உடலையும், தன்னின் வேறாகத் தோன்றும் பொன் பூமி முதலிய உலகப் பொருள்களையும் யான் எனது எனப்பற்றிக் கோடலாகிய அறியாமையைக் களைந்து, கண்ணுக்குப் புலப்படும் உடற்பொருளும் உலகப் பல்பொருளும் போலாது, ஸ்பரிசத்தாலறியப்படு பொருளாகிய காற்றைப் போல அறிவாலறியப்படு பொருளாகிய உயிர் என்பதொன்றுண்டு; அவ்வுயிரே நானெனப்படு பொருளாகும்; என அறிந்து கொள்ளுதலுடன், இவ்வான்மாவின் இலக்கணம் யாது? ஆன்மா அடையவேண்டிய பேறு யாது? அடைதற்குரிய வழிகள் எவை? என்பனவாதியவற்றை ஆராய்ந்தறியச் செய்பவரே குரு ஆவர்.

குருவகை:—குரு வித்தியாகுரு, கிரியாகுரு, ஞானகுரு என மூவகைப் படுவர். "அரச னுவாத்தியான் றாய்தந்தை தம்முன் நிகரில் குரவர்" என ஐந்து வகைப்படுத்திக் கூறுவதென்னெனில் இந்த ஐங்குரவரும் வித்தியாகுரு வகையிலடங்கியவரே என்க.

வித்தியாகுரு:—நூலாசிரியர், உரையாசிரியர், போதகாசிரியர் என மூவகைப்படுவர். நூல்களை யியற்றுபவர் நூலாசிரியராவர். அந்நூல்கட்கு உரை யெழுதி விளக்குபவர் உரையசிரியாராவர். அந்நூல்களையும் உரைகளையும் ஐயந்திரிபின்றி மாணுக்கர்கட்குப் போதனை செய்பவர் போதகாசிரியராவர். இம்மூவரும் கல்வியறிவைப் புகட்டுதலால் வித்தியாகுருவெனப்படுவர்.

கிரியாகுரு:—கிரியா குருவெனினும் குலகுரு வெனினு மொக்கும். இவர் சுபாசுபக்கிரியைகளைச் செய்தலுடன் தீக்ஷாக் கிரமத்தால் சமயப் பிரவேசஞ் செய்விப்பவர். ஒருவன் ஞானத்தையடை

யவேண்டுமாயின் பற்றுவிடல் வேண்டும். பற்றுவிட வேண்டின் கருமத்தை யநுஷ்டிக்க வேண்டும். கர்மாநுஷ்டானங்களால் பற்று விடலும், பற்று விடலால் ஞானமும் கைகூடும். ஆதலால் ஞானத்தை யடைதற்குச் சாதனமாகிய கருமத்தைச் செய்தற்கு அதிகாரியாகச் செய்வதே சமயப் பிரவேசஞ் செய்விப்பதாகும். இங்ஙனம் சமயப் பிரவேசஞ் செய்விப்பவர்தாம் குலகுரு வென்றுங் கூறப்படுவர். இவருள் அந்தணர் எல்லாவருணத்தார்க்குங் குருவாவர். அரசர்-அந்தணரொழிந்த எல்லா வருணத்தார்க்குங் குருவாவர். வணிகர்-அந்தணரரசரொழிந்த எல்லா வருணத்தார்க்குங் குருவாவர். சூத்திரர்-சூத்திரர்க்கும் சங்கர சாதியார்கட்குங் குருவாவர்.

ஞானகுரு:—அநுபவிகளே ஞானகுருவாவர். இவர்-அதிட்டித குரு, ஆவேச குரு என இருவகைப் படுவர். ஞான குருவாவார்க்கு மேற்கூறிய ஜாதிவரம்பில்லை.

அதிட்டிதகுரு-சமயகுரு சந்தான குருவென இருவகைப்படுவர்.

சமயகுரு:—உலகத்தில் மதத்துக்கு ஆபத்து வருங்காலத்தில் இறைவனருளால் அவதரித்துப் பற்பலஅற்புதங்களைச்செய்துகாட்டி மெய்ச்சமய மிதுவெனவிளக்கிப் பொய்ச்சமயக்களை களைந்து உலகை யுய்விப்பவர். இவர்களே ஸ்ரீஞானசம்பந்த சுவாமிகள், ஸ்ரீதிருநாவுக்கரசு சுவாமிகள், ஸ்ரீ சுந்தரமூர்த்தி சுவாமிகள், ஸ்ரீ மாணிக்கவாசக சுவாமிகள் எனப்போற்றப் பட்டவர்களாம். இவர்கள் புறச்சமயங்களைக் களைந்ததும், பற்பல அற்புதங்களைச் செய்ததும், சைவசமயத்தை நிலை நாட்டியதும், உலகை உய்வித்ததும் பிறவும் உலகப்பிரசித்தமாதலின் ஈண்டு விரித்திலம்.

சந்தானகுரு:—இறைவனருள் பெற்று உலகத்தார்க்கு ஞானோபதேசம் புரிந்து உய்வித்தற் பொருட்டு உலகில் வந்து சஞ்சரித்து வழிவழி (பரம்பரை) யாக வருபவர். இவர் வரலாறு:—ஆதியில் திருக்கைலாய மலையிலே அருள் வடிவாகி யெழுந்தருளிய சீகண்ட பரம சிவன்பால் ஞானோபதேசம் பெற்றவர் திருநந்தி தேவர். பின் அவர் பால் சனற்குமார முனிவரும், அவர் பால் சத்தியஞான தரிசனிகளும், அவர் பால் பரஞ்சோதி முனிவரும் முறையே சித்

தாந்த ஞானோபதேசம் பெற்றனர். இந்நால்வரும் அகச் சந்தான குருவெனப்படுவர். பரஞ்சோதி முனிவர் தமிழுலகஞ் செய்த மாதவப்பேற்றால் திருவெண்ணெய் நல்லூரையடைந்து மெய்கண்டதேவருக்கு உபதேசிக்க, அவர் அருணந்தி சிவாசாரியர்க்கு உபதேசிக்க, அவர் மறைஞான சம்பந்தருக்கு உபதேசிக்க, அவர் உமாபதி சிவாசாரியருக்கு உபதேசித்தருளினர். இந்நால்வரும் புறச்சந்தான குருவெனப்படுவர். இம்முறையே வழங்கப்பெறுவது சந்தான குருபரம்பரையாகும்- நவகோடி சித்தபுரம் என்னும் திருவாவடுதுறை ஆதீன முதலியன சந்தான குருபரம்பரைகளேயாம். * இவ்வாறு வழிவழியாக வரும் ஆசிரியர்களிடம்ஞானோபதேசம் பெற்று வீடுபேறுற்றோர் பலராவர். இந்த அதிட்டிதம் பெத்தான்மாக்களிடமுள்ளது போல்வதன்று. இறைவன் பெத்தான்மாக்களிடம் அதிட்டித்து நிற்பது பாலினைப் போல்வது. இது தயிரினைப் போல்வது.

ஆவேசகுரு:—பக்குவான்மாக்களை ஆட்கொள்ள வேண்டி இறைவனே ஆசாரியாக வந்து மெய்ப் பொருளை விளக்கி ஆட்கொள்ளும் அருள் வடிவ மூர்த்தியாம். ஸ்ரீ மாணிக்க வாசக சுவாமிகளை ஆட்கொள்ளக் கருதி திருப்பெருந் துறையிலே குருந்த மரத்தின் அடியிலே எழுந்தருளியவர் ஆவேச குருவே யாவர். இவர் இருவினையொப்பு வந்து மலபரிபாகம் உற்றுச் சத்திநிபாதம் பெற்ற ஆன்மா தன்னைப் பற்றி நின்ற பாச நீக்கம் பெற்றவுடன் அபார

---

*உமாபதிசிவாசாரியருக்குப்பின், அருணமச்சிவாயதேசிகர், சித்தர் சிவப்பிரகாசதேசிகர், நமச்சிவாய தேசிகர், மறைஞான தேசிகர், அம்பல வாணதேசிகர், உருத்திரகோடி தேசிகர், வேலப்ப தேசிகர், குமாரசுவாமி தேசிகர், குமாரசுவாமி தேசிகர், மாசிலாமணி தேசிகர், இராமலிங்க தேசிகர், வேலப்ப தேசிகர், வேலப்ப தேசிகர், திருச்சிற்றம் பல தேசிகர், அம்பலவாண தேசிகர், சுப்பிரமணிய தேசிகர், அம்பலவாண தேசிகர், சுப்பிரமணிய தேசிகர் என ஒருவர்பின் ஒருவராகப் பட்டத்துக்கு வந்து நிட்டைகூடினோர் பதினெண்மராவர். சுப்பிரமணிய தேசிகருக்குப் பின் பத்தொன்பதாவது பட்டத்தில் இப்போது வீற்றிருப்பவர்களே ஸ்ரீ அம்பலவாண தேசிகசுவாமிகள். ஏனைய ஆதீனங்களும் கைலாயபரம்பரையில் வந்த சந்தான குருநிலையங்களெனக் கூறப்படினும், புறச்சந்தானகுருசுவாமிகளாகிய நால்வர்களையும் பூஜிக்கும் உரிமை திருவாவடுதுறைக்கேயுளதாதலால் சந்தான பரம் பரை என்றவளவில் திருவாவடு துறை ஆதீனத்துக்குச் சிறப்புரிமை யுண்டென்க.

அன்பின் அரன்கழல் சேருந் தன்மையை சின் முத்திரையாலுணர்த்தி யாட்கொள்வ ரென்பர்.

இதனை—"சொல்லாமற் சொன்னவனே" என்பதாலும்,
"மும்மலம் வேறுபட் டொழிய முத்தியில்
அம்மலர்த் தாணிழ லடங்கு முண்மையைக்
கைம்மலர்க் காட்சியிற் கதுவ நல்கிய
செம்மலை யலதுளஞ் சிந்தி யாதரோ" என்பதாலும் பிறவற்றாலும் அறியலாம்.

குருவையடையுமுறை-: ஒருவன் தலையில்தீப்பற்றியவுடன் அவ்வெப்பத்தை ஆற்றுதற்கு எத்துணை ஆக்கிரத்துடன் நீரைத்தேடுவானோ அதுபோல் உலக வாழ்க்கையை வெறுத்துப் பிறவி வெப்பத்தையாற்றுதற்கு குருவைத்தேடித் திரியவேண்டும். இங்ஙனம் குரு தரிசன விருப்பம்மேலிட்டவுடன் கன்றைத்தேடிக் கசிந்துருகி வரும் கற்றாவைப் போலக் குருவும் வந்து சேர்வர். "மூர்த்திதலந் தீர்த்த முறையாத் தொடங்கினர்க்கோர், வார்த்தை சொலச் சற்குருவும் வாய்க்கும் பராபரமே" என்றார் தாயுமானவர்.

"காதி நடந்தோர் கரம் வீசி வந்தாலும் தாதிமனம்நீர்க்குடத்தேதான்" எனவும், "கள்ளக் காதல னிடத்தன்பு கலந்துவைத் தொழுகும், உள்ளக் காரிகை மடந்தைபோல்" எனவும் கூறியபடி குருநாட்டங்கொண்ட பக்குவ சீடர்கள் எத்தொழிலைச் செய்தாலும் எதவத்தைப் பட்டாலும் அத்தனாகிய குருவை அடையுநாள் எதுவோவென்ற ஏக்கம் மேலிட்டவராகியே யிருப்பர். "நாதனாகியதன்னையும் என்னையுநல்கும், போதனாகிய குருபரன் வருவதெப் பொழுதால்" என்று உள்ளவாறு மெய்யன்புடன் தேடுகின்ற நன்மாணாக்கர்களைத் தேடிவந்து அருள் செய்து ஆட்கொள்வது இப்பரமகுருவின் தன்மையாகும்.

குருதக்கிணை—: இங்ஙனம் உய்யக்கொள்ளும் குருவுக்குத் தாற்பால தக்கிணைப்பொருள்கள் உடல், பொருள், ஆவிகளாம். இதனை "அன்றேயென்றன் ஆவியுமுடலு முடைமையெல்லாம், குன்றேயனையா யென்னையாட் கொண்ட போதே கொண்டிலையோ"

என்பதாலும், "தந்ததுன் றன்னைக் கொண்டதென்றன்னைச் சங்கரா யார்கொலோ சதுரர்" என்பதாலும், "வஞ்சவினைக் கொள்கலமா முடலைத் தீவாய் மடுக்கிலேன் வரையுருண்டு மாய்ப்பேனல்லேன், நஞ்சொழுகு வாளாலுங் குறைப்பேனல்லேன் நாதனை யிதுவுநின துடைமையென்றே, அஞ்சினேன்" என்பதாலும் காண்க. அன்றியும் ஏகலைவன் என்னும் வேடன் துரோணாசாரியரைப்போன்று ஒரு உருவஞ் செய்து அதன் முன்னின்று பக்தி செய்து வில்வித்தை கற்றதும், பின் துரோணாசாரியார் வந்து பெருவிரலைத்தக்கிணைப்பொருளாகக் கேட்டவுடன் வேடன் தாழாதுகொய்து சமர்ப்பித்ததும் இதனையே வலியுறுத்தும்.

குருவின் செயல்—: ஆமைதான் ஜலக்கரையிலிட்ட முட்டைகளை நினைத்தலால் அவை ஆமைவடிவெய்தல் போல, ஞானகுருநினைத்தலால் பக்குவான்மாக்கள்சிவமாகும். கோழிதன் பரிசத்தால்முட்டைகளினின்று தன்னுருவான குஞ்சு வெளிப்படச்செய்தல் போல, ஞான குருவும் பக்குவான்மாக்களைப் பரிசித்துத் தம்மைப்போலாக்குவர். மீன்தன் பார்வையால் முட்டையினின்று குஞ்சுகளைத் தோற்றுவித்தல் போல, ஞானகுருதன் அருட்பார்வையால் பக்குவான்மாக்கள் சிவமாந்தன்மை யெய்தச்செய்வர். இங்ஙனமாக நினைத்தலாலும், பரிசித்தலாலும், பார்வையாலும் ஆன்மாக்களைச் சிவமாகச் செய்வது ஞான குருவின் தன்மை யென்பர்.

குருவின் பெருமை:—நாம் சிறு பருவத்திலேயே "எழுத்தறிவித்தவனிறைவனாகும்" எனக் கற்றிருக்கின்றோம். குருவேறு கடவுள் வேறு எனக் கோடலடாது. குருவையே சிவமாகக்கருதவேண்டும். கடவுளுக்கு நாமொரு அபராதஞ் செய்தால் அவ்வபராதத்துக்கேற்ற பரிகாரஞ்செய்து குருவானவர் தீர்த்துவைப்பார். அங்ஙனமே குருவுக்கு அபராதஞ்செய்தால் அக்குருவே தீர்க்கவேண்டுமன்றி வேறு வழியில்லை. "ஈசனுக் கிழைத்த குற்றந் தேசிகனெண்ணித் தீர்க்கும், தேசிகற் கிழைத்த குற்றங் குரவனே தீர்ப்பதல்லாற், பேசுவ தெவனோ?" என்பதால் இவ்வுண்மை தெள்ளிதுபுலப்படும். குருவில்லா வித்தை பயனற்றதென்பது நம்மவரின் பிராசீன கொள்கை. இந்திரன் தன் குல குருவாகிய வியாழபகவானைக் கண்டு வணங்காது பராமுகமாக இருந்தமையால் என்ன என்

ன துன்பங்களை யெல்லாம் அனுபவித்தான்? அந்தோ! அவன் பட்ட பாட்டை நினைத்தால் மனம் நடுங்குகின்றதே.

இவையிற்றை யெல்லாமுணராது தற்காலத்தில் நவீன நாகரிகம் பழுத்த சிலர் "குருவென்றாலென்ன? சம்பளமாகப் பொருளைப் பெற்றுக் கல்வி போதிக்கின்றார். சம்பள வேலைக்காரர் பலருள் இவருமொருவர்தானே" என அலக்ஷியமாகவும் அவமதிப்பாகவும் பேசுகின்றனரே. எழுத்தறிவித்தவன் இறைவனாகும் என மேலே காட்டிய அறிவுரையை நன்கு சிந்தித்து ஆசார்ய வழிபாடு செய்து வாழ்வார்களாக.

கல்லாலின் புடையமர்ந்து நான்மறையா றங்கமுதற் கற்ற கேள்வி
வல்லார்க ணால்வருக்கும் வாக்கிறந்த பூரணமாய் மறைக்கப் பாலாய்
எல்லாமா யல்லதுமா யிருந்ததனை யிருந்தபடி யிருந்து காட்டிச்
சொல்லாமற் சொன்னவரை நினையாம னினைந்துபவத் தொடக்கை வெல்வாம்.

பூழியர்கோன் வெப்பொழித்த புகலியர்கோன் கழல்போற்றி
ஆழிமிசைக் கன்மிதப்பி லணைந்தபிரா னடிபோற்றி
வாழிதிரு நாவலூர் வன்றொண்டர் பதம்போற்றி
ஊழிமலி திருவாத வூரர்திருத் தாள்போற்றி.

அருட்குழக ரெழிற்கயிலை முழுக்காவ னந்திபிரா னடிகள் போற்றி
தெருட்சிபெறு மனக்கமல சநற்குமர முநிவனிரு திருத்தாள் போற்றி
இருட்மலத் தகல்சத்ய ஞானதரி சனிசரண விணைகள் போற்றி
மருட்சியறு பரஞ்சோதி யருஞ்சீல குருபரன்கான் மலர்கள் போற்றி. (க)

கயிலாய பரம்பரையிற் சிவஞான போதநெறி காட்டும் வெண்ணெய்
பயில்வாய்மை மெய்கண்டான் சந்ததிக்கோர் மெய்ஞ்ஞான பானுவாகிக்
குயிலாரும் பொழிற்றிருவா வடுதுறைவாழ் குருநமச்சிவாய தேவன்
சயிலாதி மரபுடையோன் றிருமரபு நீடூழி தழைக மாதோ.

# (11) ஞானம்.

ஞானம் எனினும் அறிவு எனினும் உணர்ச்சியென்னும் பொருள் பயத்தலால் ஒக்குமாயினும், ஆன்றோராட்சி வகையால் நோக்குமிடத்து அறிவு என்பது லௌகிகவுணர்ச்சியை அதாவது கல்விகேள்விகளால் வரும் உணர்ச்சியுடன் உலகத்தோடொப்ப நிற்றலைக் குறிப்பதாகும். இதனை "எவ்வதுறைவ துலக முலகத்தோடவ்வ துறைவ தறிவு" என உடன்பாட்டு முகத்தானும், "உலகத்தோ டொட்ட வொழுகல்பலகற்றுங்கல்லா ரறிவிலா தார்" என எதிர்மறை முகத்தானும் பொருளியலில் வைத்துத் தேவர் விளக்கியிருத்தலாற் காணலாம். இதன் விரிவை 'அறிவுடைமை' என்ற வியாசத்தின்கண் நன்கு விரித்துக் கூறுதும்.

ஞானம் என்பது வீடுபயக்குமுணர்வாகிய மெய்யுணர்ச்சியைக் குறித்தே வழங்கப்படும். அஃதாவது கல்வி கேள்விகளாலும் உலகியலநுபவத்தாலும் வரும் அறிவைத் துணையாகக்கொண்டு நிலைநிலையாமைகளையும் நன்மை தீமைகளையும் ஆராய்ந்து காணப்படுவனவெல்லாம் அழியப்படுவனவாதலைக் கண்டு துறவு இச்சை கொண்டு மெய்யுணர்ந்து அவாவறுத்து வீடு பேறடையச் செய்வதாம். இதனை:— "பிறப்பென்னும் பேதைமை நீங்கச் சிறப்பென்னுஞ் செம்பொருள் காண்ப தறிவு" எனத் துறவியலில் வைத்துத் தேவர் கூறுமாற்றாற் காணலாம். இவையே அறிவுக்கும் ஞானத்துக்குமுள்ள வேறுபாடாதல் கவனித்தற்குரியது.

ஞானத்தின் பயன்:-ஞானமொன்றுமே நிரதிசயாநந்தப் பெருவாழ்வாகிய மோக்ஷத்தைக் கொடுக்கும். சரியை கிரியை யோகங்களோ என்னில் அவை ஞானத்தை யுதிப்பித்தற்கு ஏதுக்களேயல்லது நேரே மோக்ஷஹேதுவாகா. கன்மங்களால் மோக்ஷம் பெறலாமெனச் சில நூல்கள் கூறுகின்றனவேயென்னில் அவை ஞானத்தை யுதிப்பித்தற் கேதுவாதல்பற்றி அங்ஙனம்உபசரித்துக்கூறப்பட்டனவென்க. இதனை:—

"உரைசெயிற் பரம ஞான மொன்றுமே முத்திக் கேது
சரியைநற் கிரியை யோகந் தாமொரு மூன்று ஞான

மருவுதற் கேது வென்று மறைபுகன் றுரைக்கு மிந்தக்
கருவியைப் பொருளென் றெண்ணிக் களிப்பவர் கயவ ரன்றே"
எனவும்,

"இச்சிறைப் பவங்க ணீக்கி யிணையிலா முத்தி யெய்தன்
மெய்ச்சிவ ஞானத் தன்றி வேறுள கருமத் தாகா
தச்சிவ ஞானம் பெற்றோ ரயனது கற்ப வீற்றிற்
சச்சிதா நந்த முத்தி சார்குவ ரென்ப மாதோ" எனவும்,

"தானமியா கந்தீர்த்த மாச்சிரமந் தவங்கள் சாந்திவிர தங்கன்ம யோகங்கள் சரித்தோர், ஈனமிலாச் சுவர்க்கம்பெற் றிமைப்பளவின் மீள்வ ரீசனியோ கக்கிரியா சரியையினி னின்றோர், ஊனமிலா முத் திபதம் பெற்றுலக மெல்லா மொடுங்கும்போ தரன்முனிலா தூழியி னுற் பவித்து, ஞானநெறி யடைந்தடைவர் சிவனை யங்கு நாதனை முன்னிற்கி னணுகுவர்நற் றாளே" எனவும், வருமாற்றாற் காண்க.

ஞானம் பெறுமுறை:—"சற்க கசடறக் கற்பவை கற்றபி னிற்க வதற்குத் தக" என்றவாறு உண்மை நெறிகூறும் ஆன்றோர் வாக்கி யங்களான மெய்ந்நூல்களையோதியுணர்ந்து புண்ணிய பாவஞ் சுவ ர்க்க நரக முதலியவற்றை நூலறிவாற் கண்டு சிந்தித்துப் பாவத் துக் கஞ்சிப் புண்ணியத்தைச் செய்ய விருப்பமேலிட்டுச் செய்து வருங்கால் அப்புண்ணியப் பலனான சுவர்க்காதி போகங்களும் பந்த வேதுவாதலின் பொன் விலங்கு போலாமென அறிந்து அவற்றை யும் உவர்த்து பாசரகிதமாய் நிலைமாறாததாய் என்றும் அழியாத பேரின்பப் பெருவாழ்வாகிய பரமுத்தி யாதென விசாரிக்கப் புகுந்து "குடம்பை தனித்தொழியப் புட்பறந் தற்றே, உடம்பொ டுயிரிடை நட்பு" என்றவாறு யாக்கை முதலிய எல்லாப் பொருள்களையும் த னித்தனி ஆராய்ந்து யாவும் அழிதன்மாலைய வாதலையறிந்து "யாத னின் யாதனின் நீங்கியா னோதல், அதனின் அதனின் இலன்" என் றவாறு சகல பொருள்களிடத்தும் உள்ளத்துறவு தோன்ற, "அவா வென்ப வெல்லா வுயிர்க்குமெஞ் ஞான்றும், தவாஅப் பிறப்பீனும் வித்து" எனவும், "பற்றுக பற்றற்றான் பற்றினை யப்பற்றைப் பற் றுக பற்று விடற்கு" எனவும் வரும் ஆப்தவாக்கியங்களின்படி மற் றைப் பற்றுக்களையெல்லாம் விட்டொழித்து முழுமுதற் கடவுளிடத்

தே பற்றுமுற்றும் செலுத்தி அந்நிலையிலே உறைந்து நிற்கப்பெற வேண்டும். இங்ஙனம் முறைமுறையே வந்து நிலைத்தநிலைதான் மெய்யுணர்தலாகிய ஞானமெனப்படும்.

ஞானவகை:—நால்வகை ஞானம்:—இறைவனாலும் இறைவனருள்வழிப்பட்டோராலும் அருள் செய்யப்பட்ட மெய்ந்நூல்களைக் குருமுகமாகப் பயபக்தியுடன் கேட்டலும், குருசந்நிதானத்திலிருந்து கேட்ட நூற்பொருள்களை மறப்பெனும் பகைவன் வாரிக்கொள்ளவிடாது மனத்திற் பதியும்படி தனியிடத்திருந்து மனச்சலனமின்றி குரு உபதேசித்த பொருள்களைச் சிந்தித்தலும், சிந்தித்துக் கொண்ட பின்னர் இதன் பொருள் இதுவோ அதுவோ என்று ஐயமெய்தாமல் இதற்குப் பொருள் இதுவேதான் என்று கடாவிடைகளால் ஆராய்ச்சி செய்து தெளிதலும், தெளிந்த பின்னர் பிறசெயல்களையெல்லாம் விடுத்து தெளிந்த நிலையிலேயே மனத்தை நிறுத்தி நிட்டைகூடலும் எனஞானம் நான்கு வகைப்படுமென்பர்.

இதனை:—"கேட்டலுடன் சிந்தித்தல் தெளிதல் நிட்டை கௗத்தலென வீரிரண்டாங் கிளக்கின் ஞானம், வீட்டையடைந் திடுவர்நிட்டை மேவி னோர்கண் மேவாது தப்பினவர் மேலாய பதங்கட்,கீட்டியபுண் ணியபாத ராகி யின்ப மினிதுநுகர்ந் தரனருளா லிந்தப் பார்மே, ஞட்டியநற் குலத்தினில்வந் தவதரித்துக் குருவான் ஞான நிட்டை யடைந்தடைவர் நாதன் றாளே" என்பதாற் காண்க. இதனால் இந்நால்வகை ஞானத்தின் பயனும் உணர்ந்து கோடலமையும்.

அன்றியும், இந்திரியங்களையடக்கி ஞான புஷ்பங்களாகிய கொல்லாமை முதலியவற்றால் இறைவனையர்ச்சித்து, இறைவனையும் இறைவனடியாரையும், இறைவனெழுந்தருளும் ஆலயத்தையும் பரம்பொருளாகக் கருதித் தியானஞ் செய்வது சரியையில் ஞானம்.

பூஜோபகரணங்களை மனக்கோயிலினுள்ளமைத்து இதய கமலத்தில் இறைவனை எழுந்தருளச் செய்து பூஜித்தல் முதலியன கிரியையில் ஞானம்.

பற்பல சித்திகளையும் பெற்று நாதவழியே சென்று இறையுடன் பேதியாமல் நிற்கும் உண்மை நிலை சார்தலாகிய சமாதி யோகத்தில் ஞானம்.

பதிபசுபாச ஞானங்களின் உண்மை முழுதுந்தெளிந்து தற்போதமிழந்து இறைவனருள் வழிப்பட்டு இறைவனது பேராநந்தப் பெருக்கிலமிழ்ந்தி இரண்டறக் கலந்து தூங்காமற்றூங்குதல் ஞானத்தின்ஞானம் என இவ்வாறு நால்வகைப் படுத்தலுமுண்டு.

மூவகை ஞானம்:—இனி பாச ஞானம், பசு ஞானம், பதிஞானம் என மூவகைப்படுத்திக் கூறுவதுமுண்டு.

பாசஞானமாவது:—வைகரி முதலிய வாக்கின் பகுதியனவாகிய வேத சாஸ்திர முதலிய கலைஞானங்களும் அசபையுமாகிய சொற்பிரபஞ்சங்களும், நிலமுதல் நாதமீறாகிய பொருட் பிரபஞ்சமும் ஆகிய இருவகைப் பிரபஞ்சங்களின் வாயிலாய் நிகழும் ஏகதேச ஞானமாம்.

பசுஞானமாவது:—இவ்விருவகைப் பிரபஞ்சங்களைப் பொருந்தி நிற்கும் உயிர் இவைபனைத்தும் தன் கீழடங்கியுள்ளனவென அறிந்து அவற்றினின்றும் நீ கி அப்பிரபஞ்சமாகிய பாச நீக்கத்தால் அநாதியே பாசத்தி னீங்கியிருக்கின்ற முதல்வனும் நானும் ஒப்பேம் என்று விரைந்து நினைப்பதாகிய சிவசமவாதஞானமாம்.

பதிஞானமாவது:—உயிர் தூலசூக்கும காரண தேகங்களால் கட்டுண்டும், நூலுணர்வாலுணர்த்த வுணர்ந்தும், உணர்ந்தவற்றையும் மறந்து பின்னர் நினைந்து உணர்ந்தும் இவ்வாறுணர்வதாகிய பாசத்தடையை ஞானத்தால் இடையே நீங்கப் பெறுதலின் தான் ஆதிமுத்தனெனவும், முதல்வன் பிறர் உணர்த்த உணர்தலின்றித் தானே முற்று முணர்ந்து அநாதியே பாசத்தடை நீங்கிய பேறறிவனுதலின் அவ்விறைவனே அநாதி முத்தனெனவும், ஆதலால் நான் இறைவனை யொப்பேனெனக் கருதியது மகா பாதகமெனவும் இரங்கி, எக்காலத்தும் நான் இறைவனுக்கு அடிமையேயாவேன், அவன் என்னுள்ளிருந்து உணர்த்தியதையே யுணர்வேன்; எனக்கண்டு அவ்விறைவனுள்ளடங்கி நிற்க அவ்விறைவன் வாயிலாய் நிகழும் ஞானமே பதிஞானமெனப்படும். இதனை—:

"வேதசாத் திரமிருதி புராணகலை ஞானம் விரும்பசபை வைகரியா தித்திறங்கண் மேலா, நாதமுடி வானவெலாம் பாச ஞானநணுகியான் மாவிவைகீழ் நாட லாலே, காதலினு னுன்பிரம மென்

னுஞானங் கருது பசு ஞானமிவ னுடலிற் கட்டுண், டோதியுணர்ந்தொன்றென்று வுணர்ந்திடலாற் பசுவா மொன்றாகச் சிவனியல்பி னுணர்ந்திடுவன் காணே" என்பதாலறியலாம் "அறிவானுந்தானே யறிவிப்பான் றானே, யறிவாயறிகின்றான் றானே" என்பதில் "அறிவா யறிகின்றான் றானே" என்ற அருமை நுணுகியாராய்ந்தறியற் பாற்று.

இருவகை ஞானம்:—இனி அபரஞானம், பரஞானமென இருவகைப்படுத்திக் கூறுவது மொன்று. இவ்விருவகையுள்ளே மேற்கூறிய நால்வகை ஞானம் மூவகை ஞானங்களெல்லாம் அடங்குமென்பார்.

அபரஞானமாவது—: உண்மை நூல்களையோதியுணர்தலாம். இது கலைஞான மெனவும் பெயர் பெறும். நூல்களை யோதியுணர்ந்து அவ்வந்த மெய் நூல்களிற் கூறப்பட்டவாறே சரியை கிரியை யோக அனுட்டானங்களைப் பெறவேண்டும். கல்வியறிவை இங்ஙனம் ஒழுக்கத்திற் செலுத்தாது தர்க்க மிடுவதிற் செலுத்துவது வீண் செயலேயாகும். இதுபற்றித்தான் "கற்க கசடறக் கற்பவை கற்றபின், நிற்க அதற்குத் தக" எனவும், "ஓதியுணர்ந்தும் பிறர்க் குரைத்துந் தானடங்காப், பேதையிற் பேதையாரில்" எனவும் தேவர் கூறுவாராயினர்.

"கற்றதுங்கேட் டதுந்தானே யேதுக் காகக்
கடபடமென் றுருட்டுதற்கோ கல்லா லெம்மான்
குற்றமறக் கைகாட்டுங் கருத்தைக் கண்டு
குணங்குறியற் றின்பநிட்டை கூட வன்றோ" எனவும்,

"கல்லாத பேர்களே நல்லவர்க ணல்லவர்கள் கற்றுமறி வில்லாதவென், கன்மத்தை யென்சொல்கேன் மதியையென் சொல்லுகேன் கைவல்ய ஞான நீதி; நல்லோ ருரைக்கிலோ கர்மமுக் கியமென்று நாட்டுவேன் கன்ம மொருவ, னுட்டினு லோபழைய ஞானமுக் கியமென்று நவிலுவேன் வடமொ ழியிலே; வல்லா னொருத்தன்வா வுந்ரா விடத்திலே வந்ததா விவகரிப்பேன், வல்லதமி ழறிஞர்வரினங்ஙனே வடமொழியின் வசனங்கள் சிறிது புகல்வேன்; வெல்லாமலெவரையும் வெருட்டிவிடல் கைவந்த வித்தையென் முத்தி தரு

மோ, வேதாந்த சித்தாந்த சமரசநன் னிலைபெற்ற வித்தகச் சித்தர் கணமே"

எனவும், ஸ்ரீ தாயுமானவர்கட்டளையிட்டருளினமைகவனி த்தற்குரியது. ஆகவே கலைஞானமென்பது வாத வன்மைபெற்று "பொய்யுடை யொருவன் சொல்வன் மையினால், மெய்போலும்மே மெய்போ லும்மே" என்றவாறு வாதிகளை வெருட்டத் தர்க்கிக்கும் சாமர்த்தியமன்றென்பதும், மெய்நூல்களில் கூறப்பட்ட நுண்பொருள்களை உள்ளவாறுணர்ந்து கொண்டு தெளிதலே அது வென்பதும் பெறப்படும்.

பரஞானமாவது:—மெய்நூல்களிற் கூறப்பட்ட உறுதிப்பொருள்களை யோதியுணர்ந்து தெளிந்தபின் தெளிந்தவாறே அநுபவத்திற்கொண்டுவந்து பிறழாது ஒழுகுதலே யாகும். இந்த அநுபவ ஞானந்தான் இறைவனை யடைவிப்பது. மற்றெல்லா ஞானங்களும் இதைப்போல் வீட்டின்பம் பயப்பதன்று. முடிவான ஞானமிதுவே.

"சிவனடியே சிந்திக்குந் திருப்பெருகு சிவஞானம்
பவமதனை யறமாற்றும் பாங்கினிலோங் கியஞானம்
உவமையிலாக் கலைஞான முணர்வரிய மெய்ஞ்ஞானம்
தவமுதல்வர் சம்பந்தர் தாமுணர்ந்தா ரந்நிலையில்"

என்று ஸ்ரீ சேக்கிழார் பெருமான் கட்டளை யிட்டருளிய திருப்பாசுரத்துட் கூறப்பட்டன நால்வகை ஞானங்களே யென்பரொரு சாரார். அங்ஙனமன்று, இருவகை ஞானங்களே யென்பர் பிறிதொருசாரார். நால்வகை யென்பது வெளிப்படை. இருவகையென்பார் கூறுமுறையாவது:-சிவஞானமாகிய கலைஞானமெனவும், பாங்கினிலோங்கிய ஞானமாகிய மெய்ஞ்ஞான மெனவும், கொண்டு முன்னது அபரஞானமெனவும், பின்னது பரஞானமெனவும் கூறுப. இக்கருத்தை

"மேவரு ஞான மிரண்டவற் றொன்று விமலனார் பாததா மரையே, போவறு மன்பி னுணர்திரு வளிக்கு மொப்பிலா வுயர்கலை ஞானம், தாவறும் பவத்தை வேரொடுங் களையத் தக்கமெய்ஞ் ஞான மொன் றிவற்றுற், சாவதும் பிறப்புந் தணப்புறச் சிலத்தைச் சார்ந்

தீது வாய்நிற்றல் யோகம்" என்னும் ஸ்ரீ கச்சியப்ப முனிவர் பெருமான்றிருவாக்கும் வலியுறுத்துவதாகும்.

"சிவனடியே சிந்திக்குந் திருப்பெருகு சிவஞானம்" என்னும் பெரிய புராணத் திருவிருத்தப்பொருளும், "மேவருஞான மிரண்டவற் றென்று விமலனர் பாததா மரையே, யோவறு மன்பி னுலாற் திருவளிக்கு மொப்பிலா வுயர்கலைஞானம்" என்னும் தணிகைப் புராணத்திரு விருத்தப்பொருளும் ஒற்றுமைப் பட்டு நிற்கு நிலை விபக்கற்பாலதாம்.

மெய்ஞ்ஞானிகள் செயல்:—மெய்ஞ்ஞானிகள் செய்யுங் கர்மங்கள் யாவும் அவரைப் பற்றா. நான் செய்கின்றனென்பதின்றிச் செய்யப்படுகின்றனவாதலின் அக்கன்மங்கள் செய்தாரைச் சாராவாம். என் செயலாவதியாதொன்று மில்லையெனவும், ஆட்டுவித்தாலாரொருவ ராடாதாரே யெனவும் கருதி நடப்பதே மெய்ஞ்ஞானிகள் தன்மை. இவர்கள் உலகப்பழிப்பையும் மதிப்பையும் கருதாதவர்களாதலின் இவர்கள் செயலுக்கு வரையறையில்லை.

> "நாயேறி வீழ்ந்தென் னடாத்துகிலென் ஞானிக்குப்
> பேயாஞ் சகம்பழித்தென் பேணுகிலென்—தோயார்
> பெருமை சிறுமையில்லை பின்னுமுன்னு மில்லை
> வரையற்று வேண்டியசெய் வார்" என்பதுங்காண்க.

உறங்குபவன் கையிலுள்ள பொருள் தானே நழுவுவதுபோல ஞானியைவிட்டுக் கன்மம் தானே நழுவி விடும். நான் கன்மத்தை விட்டு விட்டேன் என்பவன் ஞானியல்லன்.

ஞானிகட்கீவது—: மெய்ஞ்ஞானிகளுக்குச் சிறிது பொருள் கொடுப்பினும் அது வீடு பேற்றினைத் தருதற்கு ஏதுவாகி நன்மை பயக்குமென்பர். இக்கருத்தை

"சிவஞானச் செயலுடையோர் கையிற் றானந் திலமளவே செய்திடினு நிலமலைபோற் றிகழ்ந்து, பவமாயக் கடலிலழுந் தாதவகை யெடுத்துப் பரபோகந் துய்ப்பித்துப் பாசத்தை யறுக்கத், தவமாரும் பிறப்பொன்றிற் சாரப் பண்ணிச் சரியைகிரி யாயோகந் தன்னினுஞ்சா ராமே, நவமாகுந் தத்துவஞா னத்தை நல்கி நாதனடிக் கமலங்க ளணுகுவிக்குந் தானே" என்பதால் செவ்விதுணரலாம்.

# (12) துறவு.

துறவாவது:—நற்குண நிறைந்த கற்புடை மனைவியோடு இல்லற நடாத்தப்புக்கு யாவர்மாட்டும் அன்புகொண்டு இருவகை விருந்தினரையும் பாதுகாத்து ஏனைய கடமைகளையும் வழுவாது செய்து இலக்கியவற்றை விடுத்து ஒழுகிவருங்கால், கல்வி கேள்விகளாலும் ஆசாரியோபதேசத்தாலும் அறிவு முதிர்ச்சிபெற்று பிறவிக்கு அஞ்சி வீடுபேற்றினைக் காதலித்து எல்லாப் பொருள்களும் பந்தமேவனவாதலை யுணர்ந்து யான் என்னும் அகப்பற்றையும், எனதென்னும் புறப்பற்றையும் அவற்றின் நிலைபாமை நோக்கி நீத்து விடுதலாம். இதனை "தத்தம் வருணத்திற்கும் நிலைக்குமுரிய ஒழுக்கங்களை வழுவா தொழுக அறம்வளரும்; அறம் வளரப் பாவந்தேயும், பாவந் தேய அறியாமை நீங்கும், அறியாமை நீங்க நித்த அநித்தங்களது வேறுபாட்டுணர்வும் அழிதன்மாலையவாய இம்மை மறுமை யின்பங்களினுவர்ப்பும் பிறவித் துன்பங்களுந் தோன்றும், அவை தோன்ற வீட்டின்கணுசையுண்டாம், அஃதுண்டாகப் பிறவிக்குக் காரணமாகிய பயனின் முயற்சிகளெல்லாம் நீங்கி வீட்டிற்குக் காரணமாகிய யோகமுயற்சி யுண்டாம், அஃதுண்டாக மெய்யுணர்வு பிறந்து புறப்பற்றாகிய எனதென்பதும், அகப்பற்றாகிய யானென்பதும் விடும், ஆகலான் இவ்விரண்டு பற்றையும் முறையே யுவர்த்து விடுதலெனக் கொள்க" என்னும் பரிமேலழகர் வாக்கியங்களைக் கொண்டு தெளிக.

துறவிற்குக் காரணம்:—பன்னாளாகத் தனதெனக் கொண்டு அபிமானித்து வந்த பல பொருள்களையும் தேடுங்காலத்தும், அவற்றைப் பாதுகாக்கும்போதும், பின்னர் அவற்றை இழக்க நேரிட்டகாலத்தும் துன்பமே யுளதாகின்றது. மனைவிமக்களாதியராற் பெறற்பாலதாகிய இன்பம் கடுகளவாயிற் றுன்பம் மலையளவாகின்றது. இத்தகைய துன்பத்தைத் தருகின்ற பொருள்கட்கும் எனக்கும் யாதுசம்பந்தம்? இவைகணிமித்தமாக யான் ஏன் துன்பமுறல் வேண்டும்? என்பன வாதியாகச் சிந்திக்கப்புகின் எல்லாப்பொருள்களும் தனக்கு அந்நியமாகத் தோற்றுவதோடு, தான் அறியாமை வசப்பட்டு அப்பொருள்களின் மீதுவைத்த பற்றுத்தான் தனக்குத் துன்பந்

தருகின்றதென்ற வுண்மை புலனாம். இவ்வுண்மை புலனாகவே அவற்றின்கட்கொண்ட பற்று நீங்கத் தலைப்படும்.

துறக்கு முறை:—அளவற்ற பொருள்களிடத்தே பற்றுவைத்துத் துன்புற்றிருந்த மனமானது மேற்கூறியவாறு ஆராய்ந்து ஒவ்வொரு பொருள்களிடத்துமுள்ள பற்றை விடத்தொடங்கும். அங்ஙனம் தொடங்கவே தனது பற்றுதலினின்றும் விலக்கப்பட்ட பொருள்களால் வருந்துன்பமும் அணுகாதொழியும். இந்நிலையிற்பழகி ஒவ்வொரு பொருட் பற்றையும் ஒழித்துவரவே "யாதனின்யாதனின் நீங்கியா னோதல், அதனி னதனி னிலன்" என்றவாறு ஒவ்வொரு பொருள்பற்றி வந்ததுன்ப நீக்கத்சால் வரவர அறிவு முதிர்ச்சி பெற்று எல்லாப்பொருட் பற்றுங்களையும் ஒருங்கே விட்டொழிக்குந் துணிவு கொள்ளும். "அடல்வேண்டு மைந்தன் புலத்தை விடல்வேண்டும், வேண்டிய வெல்லா மொருங்கு, எனவும், "தலைப் பட்டார் தீரத்துறந்தார் மயங்கி, வலைப்பட்டார் மற்றை யவர்" எனவுங் கூறியவாறே பிற பொருள்களின்மேற் பற்று விட்டமை போன்று உடற்பற்றையும் விட்டொழிக்க வரும். "மற்றுந் தொடர்ப்பா டெவன்கொல் பிறப்பறுக்க, லுற்றார்க் குடம்பு மிகை" என்றவாறு உடம்புப் பற்றையுமொழித்து விடுதலமையும். இந்நிலையில் உடல் மனைவி மக்கள் பொன்பூமிபாதிப் பற்றுக்களெல்லாம் ஒருங்கேநீங்கும்.

துறவு நிலைத்தல்:—மனமானது எக்காலத்துந் தனித்துநிற்குந் தன்மையுடையதன்று. பாசபந்த வயப்பட்டுப் பல்வகைப் பொருள்களைப் பற்றிக்கொண்டு சஞ்சலமெய்திநின்றது. எல்லாப் பொருள்களிடத்துமுள்ள பற்று முற்றும் அற்றுப்போகவே வேறு பற்றுதற்கு ஒருபொருள் வேண்டும். பிறிதொரு பொருளைப் பற்றாதாயின் மீட்டும் முன்னர்தான் துறந்த பொருள்களிடத்தே பற்றுக்கொள்ள நேரும். ஆகலின் யான் எப்பொருளைப் பற்றினால் எனக்கு அழியாத பேரின்பஞ் சித்திப்பதாகும்? என மெய்யுணர்ச்சி கொண்டு சிந்திக்கப்புகும். புகவே

"கனியி னுங்கட்டி பட்ட கரும்பினும்
பனிம லர்க்குழற் பாவைநல் லாரினும்
தனிமு டிகவித் தாளு மரசினும்
இனியன் றன்னடைந் தார்க்கிடை மருதனே" எனவும்

"என்னின் யாரு மெனக்கினி யாரிலை
என்னி னும்மினி யாமொரு வன்னுளன்
என்னு ளேயுயிர்ப் பாய்ப்புறம் போந்துபுக்
கென்னு ளேநிற்கு மின்னம்ப ரீசனே" எனவும்,

"பற்றுக பற்றற்றான் பற்றினை யப்பற்றைப்
பற்றுக பற்று விடற்கு" எனவும் பெரியார் பணித்த மெய்ம்மொழிகளைக் கண்டு தெளிந்து இறைவன் மாட்டே பற்றைச்செலுத்தும். இங்ஙனம் இறைவனைப் பற்றிக்கொண்டு உறைத்துநின்றவிடத்துத்தான் மேலைப்பற்றுக்களெல்லாம் அறவே தொலையும். இந்நிலைதான் உண்மைத் துறவு நிலையாவது.

துறவிகள் பெருமை:—முற்றத் துறந்த முனிவர்களது பெருமையை அளவிட்டுக் கூறவியலாது. அவர்கள் ஆணையைக் கடக்க எத்தேவராலு முடியாது. "ஐந்தவித்தா னாற்றல கல் விசும்புளார் கோமா, னிந்திரனே சாலுங் கரி" என்பதா லிவ்வுண்மை தெளியப்படும். அகஸ்தியாதி முனி புங்கவர்க ளியற்றிய அற்புதச் செயல்களைப் புராண வாயிலாக ஆராய்வார்க்குத் துறவிகள் பெருமை யொருவாறு விளங்குவதாகும்.

எல்லோர்க்குங் காலன் றுறவிவ னீயாமு
னல்லோர் துறப்பர்தா முந்தீபற
நன்றறி வார்களென் றுந்தீபற

---

வியாசத் திரட்டு முதற்பாகம் முடிந்தது.
குமரக்கடவுள் திருவடிகளே சரணம்.

---